Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24 ரூபா 30.00
ஜுலை 11 - 17, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1022

## "மாகாண சபை என் கனவு"



# தேசியக் கூட்டு; தேர்தல் கூட்டா?



## உளவாளி ஸ்னோடனால் அம்பலமாகும் அமெரிக்கா!

## மூன்று நாமங்கள்

முழுமுதற் கடவுளான சிவனின் புதல்வனும் விநாயகப் பெருமானின் சகோதரன் என்றும் அழைக்கப்படுகின்ற முருகப் பெருமானுக்கு பல்லாயிரம் நாமங்கள் உரித்துடையனவாக இருக்கின்றன. கந்தன், வேலன், சரவணன், முருகன், குமரன், குகன்... என்று அடியவர்களால் அன்பொழுக அழைக்கப்படுகின்ற பொழுதிலும் அவற்றுள் மூன்று நாமங்களே சிறந்தவையாகப் போற்றப்படுகின்றன.

அவையாவன–குகன், குமரன், முருகன் எனும் நாமங்கள் என்பதாம். 'முருகன்' எனும் திருநாமத்தை முதலில் எடுத்தியம்புகையில் அது ஆயிரம் நாமங்களுக்குச் சமமானதாகக் கருதப்படுகிறது. அதேபோன்று சிவன் தன் மகனிடம் 'குமரா' எனத் துதிசெய்து உபதேசம் கேட்டதாலும், முருகனுடைய சகடக்கரத்தில் இடையில் உள்ள எழுத்துக்கள் 'குமர' என்றிருப்பதாலும் குமரன் எனும் நாமம் பெருமை பெறுகிறது.

'குகன்' எனும் நாமம் மலைக்குகைகளில் இருப்பவன் குகன்! அதாவது ஆன்மாக்களின் மனக்குகையில் அவன் வீற்றிருப்பதால் 'குகன்' எனும் நாமம் முக்கியத்துவம் பெறுகிறது.

அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## வாழ்வை விருந்தாக்குங்கள்

"இப்படியும் சில மனிதர்கள் உண்டு. இவர்களால் பிறர் நன்றாக, மகிழ்ச்சியாக, செல்வத்தோடு, செழிப்போடு இருப்பதைச் சகிக்க முடியாது. சில மாமியார்களுக்குச் சில மருமக்கள் கலகலப்பாக இருப்பதைத் தாங்கமுடியாது. சில பெரியவர்களுக்கு இன்றைய இளைஞர்கள் ஆர்ப்பாட்டமாக அலை வதைப் பொருக்க முடியாது. இப்படிப்பட்டோர்கள் இந்த பரிசேயரோடு சேர்ந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" (மத் 8:14) என்ற கேள்வியைக் கேட்கின்றனர்.

கிறிஸ்து கொடுக்க வந்த-வாழ்க்கை மகிழ்ச்சியும் நிம்மதியும் செழிப்பும் நிறைந்தது. ஆகவே சோகம், கவலை, அழுகை, இவற்றின் சாயலைக்கூட இயேசு விரும்புவதில்லை. சிங்காரவனத்தின் சிறப்பு உங்கள் வாழ்வில் நிறைந்திருக்க வேண்டும் என்பதே அவர் ஆசை. புதிதாய் மணமுடித்த மணமக்களாக வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும் என்பதே அவரது ஆவல். வாழ்க்கை ஒரு விருந்து கொண்டாட்டமாக இருக்கவேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பு. எத்தனை விருந்துகளில் இயேசு பங்குகொண்டார் என பாருங்கள். மத்தேயு வீட்டில், சக்கேயு வீட்டில், திருமண விருந்து மத் 22:8, பாஸ்கா விருந்து, ஊதாரி மைந்தன் உவமையின் விருந்து, இறுதி இரவு உணவு, அப்பம் பருகின நிகழ்ச்சி, இவையே இயேசு எதிர்பார்த்த வாழ்வு.

## ரகுமத்தான ரமழான் நோன்பு

அருள் மறையாம் திருமறை குர்ஆன் அருளப்பட்ட புனித மாதம் ரமழான். இப்போது ஆரம்பம். இம்மாதத்தில் மனிதன் மாண்புறு நோன்பு நோற்க வேண்டுமென்பது அல்லாஹ்வின் கட்டளை. அல்லாஹ் அவனது அருள் மறை அல்குர் ஆனில் கூறுகிறான். நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடப்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது.

அல்குர் ஆன் 2:83

நோன்பை விசுவாசிகள் மீது விதியாக்கிய அல்லாஹ் அதனை அவன் இன்னும் விபரிக்கையில் நற்செயல்கள் அனைத்திற்கும் மலக்குகளின் மூலம் பிரதிபலனை வழங்குகிறேன். ஆனால் நோன்பு என்பது தூய்மையான எனக்காக வேண்டியே நோற்கப்படுவதனால் நோன்பின் பிரதிபலனை நானே வழங்குகிறேன் என்று கூறியுள்ளான்.

நோன்பு அதனை அனுஷ்டிப்பவனுக்கும் அல்லாஹ்வுக்கும் தெரிந்த இரகசியம். இதனை ஏனையோர்கள் அறிய மாட்டார்கள். இந்த இரகசியத்தின் பலாபலனை நாளை மறுமையில் நமக்குத் தரும் ரகுமத்தான ரமழான் நோன்பு.

எம்.சி.கலீல்,
கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1019



பாராட்டுக்குரியது

### திருப்தியுடன் ஒரு தாய்

கிடைத்ததை வைத்து
திருப்திப்படும் தாய் இவள்
வறுமை என்று
கருத்தடை செய்யவில்லை!
வாழ்க்கைச் சுமையால்
மரணம் தேடவில்லை!
துவிச்சக்கர வண்டியில்
தூரப்பயணம் செய்கிறாள்
எல்லாக் குழந்தைகளையும்
ஏற்றிய சந்தோஷத்தில்!

A.பாரிஸ்,
மிகிந்தலை.

## கவிதைப் போட்டி இல 1022



என்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23. 07. 2013

கவிதைப் போட்டி இல. 1022 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஒளிவிளக்கு

ஒரு குழந்தையைப்
பெற்று வளர்க்கவே
அஞ்சும் குழந்தைகளிடையே
இத்தனைக் குழந்தைகளைப்
பெற்று பாதுகாப்புடன்
வளர்க்கும் இந்தக்
கறுப்பினப் பெண்மணி
இருண்ட கண்டத்தின்
ஒளி விளக்கு.

அ.சந்தியாகோ, கண்டி.

### விதியில்

அன்றெங்கள்
ஆறுமுகனேறியது
பழ(ை)மயில்!
இன்றிந்த
ஐந்து
முகங்கள்
ஏறிப்போவது
புதுமையில்!

பாண்டியூர்
பொன்.நவநீதன்.

### வாழ்க்கை

வாழ்க்கைப் பயணம்
வறுமைதான் – ஆனால்
வாழத்தான் வேண்டும்
வசந்தமாய்...

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.



### தாய்மை

எத்தனை
சுமையானாலும்
சுகமாக சுமக்கும்
உறவு!

எஸ்.திலகவதி

### விதி

குடும்பக்
குதூகலப் பிரயாணம்
போக்குவரத்து விதியை மீறி
போவது போல் தெரிகிறது
சாலையில் நீங்கள்
சாவை எதிர்கொள்ளும்போது
சனங்கள் சொல்வது 'விதி'.

எம்.சி.கலீல்,
கல்முனை-05.

### உறவுகள்

உறவுகளைச் சுமக்கும்
உறவுகளாலேயே
இந்த
உலகம் இன்னும்
தொடர்கிறது...

சுப்பிரமணியம்
ஜெயரூபன்.





## உங்கள் பக்கம்

### மீளப் புனரமைப்பது எப்போது?

வவுனியா வடக்கில் நைனாமடுவில் இருந்து பெரிய மடுவுக்குச் செல்லும் ஆறு கிலோமீற்றர் நீளமான வீதியானது கடந்த 20 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.

போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு சீரழிந்து காணப்படும் இந்த வீதி மழை காலங்களில் சிறிய கால்வாயாகவே மாறிவிடுகின்றது. பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே இவ்வீதியால் பயணிக்க வேண்டியுள்ளது.

300 குடும்பங்கள் வரையில் பயன்படுத்தும் இவ்வீதியை புனரமைப்பதற்கு உலக வங்கி முன்வந்ததுடன் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் அந்தப் பணம் ஒப்படைக்கப்பட்டு கல், மண் போன்ற மூலப்பொருட்கள் கொண்டு வந்துகொட்டப்பட்ட நிலையிலும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், நெடுங்கேணிப் பிரதேச சபை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் கவனத்திற்கு இப்பிரதேச மக்களால் கொண்டுவரப்பட்ட போதிலும் இதுவரை உரிய நடவடிக்கை இன்றி காணப்படுகின்றமையால் மக்கள் பலத்த ஏமாற்றத்திற்கும் விசனத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

எம்.கோவிந்தராஜ்,
நைனாமடு, வவுனியா.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## வாசகர் சாலை

### முக்கியத்துவம்

நாற்திசையிலும் திக்கெட்டும்
முரசே! வாசகர்களை எப்போதும்
உற்சாகப்படுத்துகின்றாய்.
தேன்கிண்ணப் பகுதியில்
வளரும் இளம் கவிஞர்களுக்கும்
முக்கியத்துவம் அளிக்கின்றாய்.
முரசு வாசகர்களாகிய எமக்கு
அறிவுத் தகவல்களையும்.
பல்சுவையான அம்சங்களையும்
சுவைபடத் தருகின்றாய்.

ம.ஊர்மிளா, காலி.

### உன் பணி தொடர்க...

வாரம் தோறும் சிந்தையைத் தொடும் வகையில் சிந்தைக்கினிய செய்திகளையும், சிறந்த அம்சங்களையும் தாங்கிவரும் தினமுரசு வாரமலரை எவ்வாறு பாராட்டுவதென்றே தெரியாது. காரணம் உன்னில் இடம்பெறும் ஒவ்வொரு அமசங்களுமே ஒவ்வொரு விதமாய் அமைந்துள்ளது. அரசியல் கட்டுரைகள், நாட்டின் தற்போதைய நிலவரங்களை அவ்வாறே விளக்குகின்றது. இன்னோரன்ன அம்சங்களுமே முரசை மெருகூட்டுகின்றது. உன்பணி தொடர வாழ்த்துக்கள்.

ஏ.சீ.எம்.முஸம்மில் (பியுடி)
குளியாப்பிட்டிய.

### பாராமுகம் ஏன்?

வாரம்தோறும் வாரமலருக்காக காத்திருப்பதுண்டு. சுவாரசியமான தகவல்களையும் வழங்குகின்றாய். தினமுரசு தினப்பதிப்பு எமது பிரதேசத்திற்கு வருவதில்லை. வாரமலர் மட்டுமே வந்துசேர்கின்றது. தினப்பதிப்பை எமது பிரதேசத்திற்கும் அனுப்புவீர்களா...? எங்கள் இடத்தினுடைய பிரச்சினைகளுக்கும் வாரமலரில் முக்கியத்துவம் கொடுங்கள்! முரசு பாரபட்சம் காட்டுவதேன்...?

ஆர்.ஷயிப்,
கிண்ணியா-06

### சரியான முடிவு!

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் அறிவு விருந்து அளிக்கின்றாய். நான் உன்மேல் பற்றுக்கொண்ட தீவிர பற்றாளன்.

அறிவுக்கு தீனிபோடும் குறுக்கெழுத்துப் போட்டிக்கு பரிசுத்தொகை ஆயிரம் ரூபாவாக அதிகரித்தமைக்கு பாராட்டுக்கள். சரியான முடிவை எடுத்துள்ளீர்கள்.

எம்.சாருஜன்,
கண்டி.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவுஸ்ரேலிய தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான அவுஸ்திரேலியா தூதுவர் றொபின்முடி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தல் குறித்தும் நாட்டின் தற்போதைய நிலவரங்கள் மற்றும் வட பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், இடம் பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றம், வாழ்வாதாரம் மற்றும் அவர்களது தேவைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் விரிவாகப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடகடல் நிறுவனத்திற்கு 85 மில்லியன் ஒதுக்கீடு!

வடகடல் நிறுவனத்தின் தொழிற்துறை மேம்பாட்டிற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய, திறைசேரியூடாக 85 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் ஊடாக 50 மில்லியன் ரூபா லுணுவில மற்றும் வீரவில மீன்வலை உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும், 35 மில்லியன் ரூபா தொழிற்சாலைகளின் இயந்திர உதிரிப்பாகங்களின் கொள்வனவிற்குமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது அந்நிதியின் ஊடான தொழிற்துறை நடவடிக்கைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

இதுதொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் மூலப்பொருட்களின் கொள்வனவு, உற்பத்தி, உற்பத்திகளின் விற்பனை தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்ட அதேவேளை, குறித்த விடயங்கள் தொடர்பாக அமைச்சர் அவர்கள் துறை சார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

# அத்துமீறிய மீனவர்களை முல்லையிலிருந்து வெளியேற உத்தரவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்களை அப்பகுதியில் இருந்து வெளியேறுமாறு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கமைய மாத்தளன், வலைஞன்மடம் போன்ற பிரதேசத்தில் தங்கியிருந்து கடலட்டை, சங்கு பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருபவர்கள் உடனடியாக அந்த தொழில் நடவடிக்கையை நிறுத்தவுள்ளதாக கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

வெளிமாவட்டத்தில் இருந்து வருகை, முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தல், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவதை தடுக்கவும் வலியுறுத்தி முல்லைத்தீவில் கடற்தொழிலாளர்களினால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் இழந்த நிலையில் மீள்குடியேற்றப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் மீனவர்களினால் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 32 கடற்தொழிலாளர் சங்கங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் இந்த போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் பங்குகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்யாணமாம் கல்யாணம் தாத்தாவுக்கு கல்யாணம்

ஈராக்கில் 92 வயதான முதியவரொருவர் தன்னைவிட 70 வயதுகள் குறைந்த பெண்ணைத் திருமணம் செய்து பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவது, பக்தாத் அருகில் உள்ள சமாராவை ஒட்டியுள்ள குபான் கிராமத்தை சேர்ந்தவர் முசாலி மொஹமட் அல்-முஜ்மாயிக்கு தற்போது வயது 92.

அவர் ஒரு விவசாயி என்பதுடன் அவரது முதல் மனைவி கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இவருக்கு 16 பிள்ளைகள் உள்ளனர். இந்நிலையில் அவர் பேரன்கள் புடைசூழ 22 வயது பெண்ணை திருமணம் செய்துள்ளார்.



# மீண்டும் ஒரு கோர விபத்து!

## நடந்தது என்ன?!

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் கடந்த வாரம் நடந்த மோசமான விமான விபத்து நடந்து பலரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

இந்த விபத்து பற்றிய முழுமையான விசாரணை இன்னும் முடியவில்லை. கிடைத்துள்ள விபரங்கள், மற்றும் வீடியோவை பார்க்கும்போது, விமானியின் தவறினால் ஏற்பட்ட விபத்து என்றே புரிகிறது.

விபத்துக்கு உள்ளான ஏசியானா ஏர்லைன் எபின் போயிங் 777 விமானம், சான் பிரான்சிஸ்கோவில் தரையிறங்க வந்தபோது மிகவும் குறைவான வேகத்தில் வந்தது என்பது வீடியோவில் தெரிகிறது. அத்துடன், சான் பிரான்சிஸ்கோ விமான நிலையக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்தும், அதை கவனித்து உள்ளார்கள்.

விமான நிலையக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து, "விமானத்தின் வேகம் மிகக் குறைவு. லேண்டிங்கை ரத்து செய்து மேலே எழுங்கள். இந்த வேகத்தில் லேண்டிங் செய்யவேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது, பதிவாகியுள்ளது.

ஆனால், அதை கேட்ட கணத்தில் விமானிகள் செயற்படவில்லை. சுமார் 5.5 விநாடிகள் தாமதத்தின் பின்னரே விமானத்தை மேலெழ வைக்க முயன்றுள்ளார்கள். அது டூ-லேட்!

அடுத்த மூன்றாவது விநாடி, விமானத்தின் இரண்டு சோடி சக்கரங்களும், ஓடு பாதையையும், கடலையும் பிரிக்கும் சுவரில் மோதியிருக்கின்றன. அதையடுத்து விமானத்தின் பின்பகுதி தரையில் தேய்த்துச் செல்லப்பட்டது. வால் பகுதி தனியாக பிரிந்து விழுந்தது. விமானம் தரையில் தேய்த்தபடி சுழரத் தொடங்கியது. தீப்பிடித்துக் கொண்டது.

அதாவது, விமானத்தின் வேகம் குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டு, 8.5 விநாடிகளில் விபத்து நடந்தது.

போயிங் 777 விமானத்தை தரையிறக்கும் போது குறைந்தபட்ச வேகம், மணிக்கு 160 மைல்களாவது இருக்க வேண்டியது அவசியம். இந்த விமானத்தின் வேகம், அதிலிருந்து ஓரிரெண்டு குறைந்த அளவில்கூட இல்லை. மிக அதிக வித்தியாசத்தில் இருந்தது என்று விமான நிலையத்தில் இருந்து இந்த விபத்தை பார்த்த வேறு விமான நிறுவன விமானிகள் கூறுகின்றனர்.

"நான் பார்த்தபோது, விமானம் வந்த வேகம், சுமாராக மணிக்கு 100 மைல்கள்தான். அந்த நிலையில் விமானத்தின் முன் பகுதி மேல் நோக்கி இருந்தது. அதாவது, விமானிகள் விமானத்தை மேலே எழ வைக்க முயன்றார்கள். ஆனால், இந்த குறைவான வேகத்தில் அது முடியாத காரியம்"என்றார் யுனைட்டட் ஏர் லைன்ஸ் விமானி ஒருவர்.

விமான பதிவேட்டில் உள்ள தகவல்களின்படி, "வேகம் மிகக் குறைவாக உள்ளது" என்ற எச்சரிக்கை முதலில் விமான நிலையக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து வந்தது பதிவாகியுள்ளது. அப்போதே, "விமானத்தை தரையிறக்காமல் மேலெழுங்கள்" என்றும் கூறப்பட்டுவிட்டது.



அது நடந்து சரியாக 3 விநாடிகளில், விமானத்தில் உள்ள, எச்சரிக்கை விளக்கு எரிந்துள்ளது. விமானம், மிக அபாயகரமான கட்டத்தில் உள்ளதை எச்சரிக்கும் சிக்னல் அது. Stall-warning alarm signal என்று சொல்வார்கள். அந்த எச்சரிக்கை சிக்னல் வந்து 1.5 விநாடிகளின் பின்னர்தான் விமானத்தை மேலெழ வைக்க முயன்றிருக்கிறார்கள். தரையிறங்க வந்த விமானம் தரையை தொடாமல் மேலேறிச் செல்வதை "go-around" என்று சொல்வார்கள்.

ஆனால், இவர்கள் விமானத்தை மேலேற்ற முயன்றபோது, விமானத்தில் அதற்குரிய வேகமும் இருக்கவில்லை, விமானம் தரையில் இருந்து சுமார் 100 அடி உயரத்தில் இருந்தது. இந்த நிலையில் விமானத்தை மேலெழ வைக்க மேல்நோக்கி உயர்த்தினால், அதன் பின்பகுதி தரையில் தட்ட சந்தர்ப்பம் அதிகம்.

தவிர, அதெல்லாம் நடந்த இடத்தில், தரையில் ஓடுபாதையையும், கடலையும் பிரிக்கும் ஒரு பாறை சுவர் வேறு இருந்தது. விமானத்தின் சக்கரங்கள் முதலில் அந்த சுவரில் மோதின. விமானத்தின் சமநிலை தவறியது.

அதன்பிறகு விபத்து நடப்பதை எப்படியும் தடுக்க முடியாது. விமானத்தை தரையிறக்க முயன்ற விமானி லீ காங்குக், வெறும 43 மணி நேரமே இந்த ரக விமானத்தில் பறந்து அனுபவம் பெற்றவர். ஆனால், போயிங் 747 விமானங்களை இதற்குமுன் தரையிறக்கியுள்ளார். அதற்குக்கூட இந்த வேகம் போதாது.

அதேநேரத்தில், விமானம் தரையிறங்க வரும்போது, இவ்வளவு குறைவான வேகத்தில் வருவதை விமானத்தில் இருந்த மற்றைய விமானிகள் ஏன் கவனிக்கவில்லை?

விபத்து நடந்தபோது விமானத்தில் மொத்தம் 3 விமானிகள் இருந்திருக்கிறார்கள் என்பதை ஏசியானா உறுதி செய்துள்ளது. இந்த மூவருக்கும் சிறுகாயங்களே ஏற்பட்டுள்ளன.

விபத்து நடைபெற்ற அன்று சான் பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருந்த இவர்கள் மூவரும், மறுநாள் ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் சிவில் ஏவியேஷன் அதிகார கழகத்தின் அனுமதி இல்லாமல் அமெரிக்காவை விட்டு வெளியேற முடியாது.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# இந்தியாவுக்கு சவாலான காலகட்டம்

புத்தகயா விகாரை மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல் கடுமையான கண்டனத்துக்குரியவை. அந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

புத்தகயா மீதான தாக்குதலானது இலங்கை பௌத்த மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும். தென் இந்தியாவில் இலங்கை பௌத்த யாத்திரிகர்கள் மற்றும் பௌத்த சுற்றுலாப் பயணிகள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் புத்தகயா மீதான தாக்குதல்கள் இந்தியா குறித்த பௌத்த மக்களின் நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. தென் இந்தியாவுக்கு சிங்கள மக்கள் சுற்றுலா மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பயணிப்பது கணிசமாகக் குறைவடைந்துள்ளதானது இரு நாடுகளுக்கு மிடையிலான சங்கடங்களை அதிகரித்துள்ளதோடு. பொருளாதார சரிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

மறுபக்கத்தில் கடல் பிராந்தியத்தை எவ்வாறு இலங்கை. இந்தியா நாடுகள் எவ்வாறு பங்குபோட்டுக் கொள்வது என்பது தொடர்பில் கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதானது. தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வைக் காண உதவும் என்று நம்பப்படுகின்றது.

அதுபோல் தமிழ் நாட்டில் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வைக் காண்பதும் அவசியமாகும்.

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் இலங்கை அரசின் முக்கிய பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுக்களை நடத்திவருகின்றார். அவர் முக்கியமாக 13ஆவது திருத்தத்தில் இலங்கை அரசு திருத்தத்தை மேற்கொள்ள முயற்சிக்கும் விடயம் குறித்து கூடுதல் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் சிவசங்கர் மேனின் வருகையின் நோக்கம் முதலில் சீனாவின் இலங்கை மீதான அக்கறைகள் அது பிராந்தியத்தில் ஏற்படுத்தும் ஆபத்துக்கள் மற்றும் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதைத் தீர்ப்பதற்கு இலங்கையுடன் செய்துகொள்ளும் கடல்சார் ஒப்பந்தங்கள் என இந்தியாவுக்கு முக்கியமான பிரச்சினைகளுக்கே அதிக கவனம் கொடுப்பார். அதன்பின்னரே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இந்தியாவை ஓரம்கட்ட எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பில் கவனம் செலுத்துவார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் சிவசங்கர் மேனனை சந்தித்து யார் என்ன கூறினாலும் அவை எதுவும் அவருக்கு புதுமையாக இருக்காது என்றபோதும். வழமையான இராஜதந்திர வார்த்தைப் பிரயோகங்களைப் பேசி கை குலுக்கி அனுப்பி வைப்பார். நம்மவர்களும் மேனனைச் சந்தித்தோம் எல்லாவற்றையும் எடுத்துக் கூறினோம் என்று வெளியில் கூறிக்கொள்வதில் ஏதோ பெரும் அரசியல் வெற்றியை தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்ததைப் போல் காட்டிக்கொள்வார்கள். தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே தொடர்கதையாகும்.

▬ ▬

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# தேசியக் கூட்டு; தேர்தல் கூட்டா?

**தமது** கடந்த கால அனுபவங்களிலிருந்து யாரும் எதனையும் கற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்களை சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள். மனிதர்கள் என்ற உயர்திணை பட்டியலில் இருந்து நீக்கி விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

உரிமைப் போராட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம் ஈடுசெய்ய முடியாத எத்தனையோ இழப்புக்களை நமக்குத் தந்திருக்கிறது. அதேவேளை அதன் மற்றப் பக்கத்தை நின்று நிதானித்து உற்றுக் கவனித்தால் பல்வேறு சாதகமான, கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்களையும் நமக்கு அது விட்டுச் சென்றிருக்கின்றது.

எந்தவொரு பாதகமான சூழ் நிலையிலும் சாதகமான அம்சங்களும் இருக்கின்றன என்பது மாற்றுக் கண்ணோட்டத்தில் உற்றுக் கவனித்தால் தெரியவரும்.

நமது நாட்டில் சமூகங்களுக்கிடையில் நிலவிவருகின்ற முரண்பாடுகளை நோக்கினால் உரிமைப் போராட்டம், மற்றும் அதனோடு இணைந்த ஆயுத வன்முறைகள் என்பனவற்றால் எத்தனையோ பேரழிவுகளை ஒட்டுமொத்த நாட்டு மக்களுமே சந்தித்திருக்கின்றோம்.

அதேவேளை அந்த அழிவுகளுக்கிடையே சின்னதாகத் தெரிந்த சாதகமான ஒளிக்கீற்றுக்களை நாம் கண்டு கொள்ளவுமில்லை. அதிலிருந்து எதையாவது கற்றுக் கொள்ளவுமில்லை என்பதுதான் துயரமானது.

ஆயுத வன்முறைகள் அசுர தாண்டவமாடிய பொழுது எதிர்ப்பட்ட திசைகளிலெல்லாம் இழப்புக்களாகத்தானிருந்தன. அதேவேளை அந்த இழப்புகளினூடே நம்பிக்கைதரக் கூடிய சாதக அம்சங்களும் தெரிந்தன. ஆயினும் அதனை நம்மில் எவரும் கண்டு கொள்ளவுமில்லை, அதன்பால் கரிசனை காட்டவுமில்லை.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் கணக்கு வழக்கின்றி இருந்தாலும் குறைந்த பட்சம் நாம் அவற்றில் ஒன்றிரண்டையாவது கற்றுக்கொள்வதற்கு இன்னமும் தயாராக இல்லை.

போராட்டத்தின் விளைவுகளால் உண்டான பல தொடர் தோல்விகளுக்கு சர்வாதிகாரத் தலைமைத்துவமும் அதற்கு சாமரம் வீசிய அதியுயர் முட்டாள்தனமும்தான் காரணம் என்பதைக் கற்றுக்கொள்ள அதிகநேரம் எடுக்காது.

ஆயினும் அதனை ஜீரணிப்பதற்கும் சுயவிமர்சனம் செய்து கொள்வதற்கும் நம்மில் ஆழமாக உருவாக்கப்பட்டுள்ள உணர்ச்சிகரப் படிமங்கள் இடங்கொடுப்பதாக இல்லை.

ஆயுதப் போராட்டத்தின் பெயரால் இழந்த அத்தனை இழப்புக்களிலும் ஒரு சிலவற்றை யாவது ஈடுசெய்து ரணங்களையும் வடுக்களையும் புடம்போடுவதற்கான வழிகள் இன்னமும் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பற்றி அறிவுபூர்வமாக சிந்திக்காமல் வெறும் வாய் வீச்சுக்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு இருப்பவர்களை நமது பிரதிநிதிகளாக இன்னும் முன்னிலைப்படுத்தி வைத்துக் கொண்டிருப்பது நமது சமூகத்தின் சாபக்கேடாக தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

இந்த வரலாற்றின் தொடர்ச்சியாகவே கூட்டமைப்பின் தற்போதைய செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 2000ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றமும் எதிர்காலம் பற்றிய திசை தெரியாமல் முழித்துக் கொண்டிருந்த சில தமிழ்க் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலும் ஒரே புள்ளியில் சந்தித்ததன் வெளிப்பாடாக தோற்றம் பெற்ற கூட்டமைப்பு இன்றுவரை தேர்தல் வெற்றியே தமது இலக்கு என்ற கொள்கையில் இம்மியளவும் பிசகாமல் பயணித்துக் கொண்டிருக்கின்றது. தமது இந்த இலக்கிற்காக எதைப் பற்றியும் கவலைப்படாமல் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

ஆயுதப் போராட்டத்தின் பெயரால் இழந்த அத்தனை இழப்புக்களிலும் ஒரு சிலவற்றையாவது ஈடு செய்து ரணங்களையும் வடுக்களையும் புடம்போடுவதற்கான வழிகள் இன்னமும் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பற்றி அறிவுபூர்வமாக சிந்திக்காமல் வெறும் வாய் வீச்சுக்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு இருப்பவர்களை நமது பிரதிநிதிகளாக இன்னும் முன்னிலைப்படுத்தி வைத்துக் கொண்டிருப்பது நமது சமூகத்தின் சாபக் கேடாக தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

கூட்டமைப்பினர் தாங்கள் பிரதிநிதித்துப்படுத்துவதாகக் கூறிக்கொள்கிற தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் சில பேரினவாத சக்திகளின் தூண்டுதலோடு சூனியமாகிக் கொண்டிருக்கின்ற யதார்த்தத்தை கூட்டமைப்பினர் இன்னும் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை. மேலே குறிப்பிட்டது போன்று பாதகங்களுக்குள்ளும் சாதகங்கள் இருக்கும் என்பது பொதுவான நம்பிக்கை.

அவ்வாறே தற்போதைய சூழலிலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறக்கூடிய அரங்கு திறந்து விடப்பட்டிருக்கின்றது. அதில் பங்குபற்றி தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறத் தயங்கிக் கொண்டிருக்கின்றனர். பேச வேண்டியதை பேசவேண்டிய இடத்தில் பேசாமல் வீதியில் ஒப்பாரி வைப்பதையே தமது அரசியல் இலக்கிற்கு பலன் மிக்கதாக அமையும் என்பது அவர்களின் கணக்காக இருக்கின்றது.

இதற்கு கூட்டமைப்பினால் கூறப்படுகின்ற காணரங்கள்தான் வேடிக்கையானதாக இருக்கின்றது. கூப்பிட்டதும் ஓடிப் போவதற்கு முட்டாள்களா என்று கேள்வி கேட்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

உண்மைதான். மக்களின் வாக்குகளால் அன்றி தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றவருக்கு மக்களின் விருப்புவெறுப்புகளை அறிந்து கொள்வதற்கோ, இல்லையேல் தனது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், தான் சார்ந்த மக்களுக்கு நன்மை கிடைக்குமெனில் ஓடிச்செல்ல வேண்டும் என்ற பக்குவமோ இருக்குமென்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றுதான்.

பாராளுமன்றம் தெரிவுக் குழுவில் அமைச்சர் திஸ்ஸ விதாரண போன்றவர்கள் இல்லாத நிலையில் தாம் பங்குபற்றுவது பிரயோசனம் அற்றது என்று அவர்கள் சிந்திக்கிறார்கள்.

அதேவேளை, “தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதன் மூலம் எவ்வித பிரயோசனமும் இல்லையென்று கருதுபவர்கள், என்ன நோக்கத்திற்காக பாராளுமன்றம் வருகிறார்கள்?” என்று அண்மையில் இன்னொரு முற்போக்குவாதியான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் தட்டிக் கழித்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணமாக இருந்தவர்கள் இப்பொழுது வட. மாகாண சபைக்கான தேர்தல் நெருங்குகின்ற நிலையில் முண்டியடித்துக் கொண்டு திரிகின்றார்கள். அதிலும், கூட்டமைப்பு சார்பில் யாரை முதன்மை வேட்பாளராக நிறுத்துவது என்பதில் ஒற்றுமையைக் காணமுடியவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.


ஒரு காலத்தில் தம்மையும் அரசியலையும் பாதுகாத்துக் கொள்வதற்கு கூட்டமைப்பில் இணைந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் அரசியல் சாணக்கியர்கள் இன்று தமது கட்சியை பலப்படுத்துவதற்கு குறுக்கு வழியால் திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மறுபுறத்தில் கூட்டமைப்பை நம்பி தமது கட்சி உறுப்பினர்களை கணக்கெடுக்காமல் திரிந்த தலைவர்கள், தமிழரசுக் கட்சிகளின் செயற்பாடுகளுக்கு எதிராகப் புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இதன் உச்சக்கட்டமாகவே கூட்டமைப்பு தனிக்கட்சியாக பதிவுசெய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பு பதிவுசெய்ய தமிழரசுக் கட்சி இணங்காவிட்டால் அதைத் தவிர்த்துவிட்டு தாங்கள் புதிய கூட்டமைப்பை ஏற்படுத்தப்போவதாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இப்பொழுது தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் அவை அனைத்தும் அமுங்கிப் போய் காணப்படுகின்றது. காரணம், கூட்டமைப்பு என்பது பிளவுபடுமாயின் அதில் இப்பொழுது பிரமுகர்களாக இருக்கின்ற பலரின் முகவரிகள் தெரியாது போய்விடும் என்பது அவர்களுக்கே தெரியும்.

இவ்வாறு கூட்டமைப்பு என்றும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றும் புலம்பிக் கொண்டிருப்பவர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும், கூட்டமைப்பு என்பது தேர்தல் வெற்றிக்காக ஒன்றிணைந்த கூட்டமே தவிர தமிழ் மக்களின். அபிலாஷைகளை பிரதிபலிக்கக் கூடிய மக்கள் நலன் சார்ந்த அமைப்பு அல்ல என்பது தெட்டத் தெளிவாகின்றது.

*சிவன்*





# போராட்டம் பெற்றுக் கொடுத்த மிச்சம்!

**ஐயாவின் வாழ்க்கை இன்று ஒற்றைக் கட்டிலுக்குள் அடங்கிவிட்டது. 3 ஆண் பிள்ளைகளும் 3பெண் பிள்ளைகளுமாக ஆறுபிள்ளைகளைப் பெற்று வாழ்ந்த வாழ்க்கையின் கடந்த காலத்தை எண்ணினால் அது பெரும் துயர் சூழ்ந்த காலம்தான். இப்போது தானொரு சுமையாகிப் போனேன் என்ற இயலாமைதான் மனசை உறுத்திக் கொண்டிருக்கிறது.**

**கடல்** தொழிலுக்குப்போன ஐயாவின் மூத்த ஆண்மகனை கடலில் வைத்து என்று சுட்டுக்கொல்லப்பட்டானோ! அன்று விழுந்த இடி ஐயாவின் குடும்பத்தின் பாதையை திசைமாற்றி திசைக்கொன்றாய் அள்ளியெறிந்தது. ஐயாவும் விபத்தொன்றில் கையொன்று இயங்காமல் போக உடைந்துபோனார்.

அண்ணன் கொல்லப்பட, தம்பிகள் போராளிகள் ஆனார்கள். ஒருவன் புலனாய்வுப் போராளியாகவும் மற்றையவன் கடற்புலியானான். கடைசித் தங்கையும் புலியாகினாள். மிஞ்சிய இரு பெண் பிள்ளைகளும் திருமணம் முடித்து குடும்பமாகினர்.

கடைசி மகள் சமரொன்றில் காயமுற்று ஊனமாகினாள். தொடர்ந்தும் தனது பணியைச் செய்துகொண்டிருந்தாள். 2006இல் கடற்புலிப் போராளியொருவனைக் காதலித்துத் திருமணம் செய்தாள். ஐயாவுக்கும் ஆறுதலாயிருந்தவள் அவள். திருமணம் முடிந்த கையோடு ஐயாவையும் அந்த மகள் தன்னோடு கொண்டுபோனாள். போராளியான மகளும் போராளியான மருமகனும் தங்கள் கடமைகளில் உறைந்துவிட்டாலும் அவர்களுடன் வாழ்வது ஐயாவுக்குப் பிடித்திருந்தது. தனது ஊனமுற்ற கையோடு வீட்டுக்கான எல்லா வேலைகளையும் தானே செய்துவிட்டு மகளுக்காகவும் மருமகனுக்காகவும் காத்திருப்பார்.

2008இல் அந்த மகள் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். பேரக்குழந்தை ஐயாவின் உலகத்தை மகிழ்ச்சியால் நிரப்பியது.

யுத்தம் தொடர் இடப்பெயர்வு ஐயாவைச் சோர வைத்துவிட்டது. ஆனால் மகளோடு ஒவ்வொரு ஊராக இடம்பெயர்ந்து 2009 மே மாதம் 9ஆம் திகதிவரை ஐயாவின் அலைச்சலும் துயரமும் ஆயிரம் காலத்துக்கும் மாறாத துயரங்கள். ஏற்கனவே ஊனமுற்றிருந்தும் திரும்பவும் தனது தேசக் கடமை முடிக்கச் சென்ற மருமகன் காயமுற்ற நிலையில் குடும்பத்தோடு இணைத்தான்.

17.05.2009 கடைசி முடிவெடுக்க வேண்டிய நிலைமையில் காலகாலமாய் வாழ்ந்த நேசித்த மண்ணைவிட்டு வெளியேறினார்கள். ஏனையவர்களைப் போன்றே ஐயாவின் மருமகனும் கைது செய்யப்பட்டார். 2010இல் ஊனமுற்றவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது மருமகனும் விடுதலையானார்.

எனினும், தொடர்ந்து நாட்டில் வாழ முடியாமல் அல்லது விரும்பாமல், 2011இல் நாட்டைவிட்டு வெளியேறி அயல்நாடு போனார்கள். ஐயாவையும் அழைத்துப்போக முடியாத அந்தரம். "ஐயா நாங்கள் கொஞ்சநாளில திரும்பி வந்திடுவம். அதுமட்டும் அக்காவோடை இருங்கோ....!" மருமகன் சொன்னபோது ஐயாவும் ஓமென்றுதான் சொன்னார். அவசர அவசரமாய் இருந்த காணிகளை விற்றுக் கொடுத்தார் ஐயா.

காலம் எப்போதும் நம்பிக்கைக்கு எதிரியாய் மாறிவிடுவதுபோல ஐயாவின் நம்பிக்கையும் பொய்யாகியது. ஐயா நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். உயிர் இதோ, அதோ என இருந்த நேரம் மருமகனின் நண்பர் மூலம் மருத்துவத்திற்கு சேர்க்கப்பட்டு சத்திரசிகிச்சை வரை போய் உயிர் மீண்டார்.

ஐயாவிற்கு அப்போதைய ஆறுதலாக இருந்த இரண்டாவது மகள் 4 பிள்ளைகளோடும் வீட்டு வறுமையை சமாளிப்பதா, ஐயாவை கவனிப்பதா என்ற நிலைமையில் வறுமையே அந்த வீட்டில் நிரந்தரமாகத் தங்கியது.

பரம்பரையாகச் செய்துவந்த கடற்தொழிலைச் செய்ய வசதியில்லாது போனதால் இரண்டாவது மகளின் கணவன் ஐயாவின் இரண்டாவது மருமகன் ஏதாவதொரு தொழில் செய்ய வேண்டுமென்றதே இறுதித் தேர்வாகியது. கையில் முதலின்றி சுயதொழிலைத் தொடங்க முடியாது போக மேசன் வேலைக்குப் போய் வந்த மருமகனின் உழைப்பு மட்டுமே குடும்பத்தின் ஆதாரம்.

இக்காலப் பொருளாதார இறுக்கம் பிள்ளைகளின் கல்விச் செலவுகள், உணவுத் தேவைகள் வருமானத்துக்கு மேலாகியது. ஐயாவுக்கான மருந்து தேவைகளையும் மருமகனின் உழைப்பே நிவர்த்திசெய்ய வேண்டியிருந்தது. ஐயாவால் சாதாரணமாக உணவை உட்கொள்ள முடியாது போனது. தண்ணீர் வகைகளும், பால்மா, தேநீர், பழம் மட்டுமே அவரால் உண்ண முடிந்தது. பால்மாக்கள் விற்கிற விலையில் அதனை வாங்கிக் கொடுக்க அந்தக் குடும்பத்திடம் வசதியில்லை. கிடைக்கிற உழைப்பில் ஐயாவுக்கும் எதையாவது கொடுத்து 6 மாதங்கள் கடந்தபோது அந்தக் குடும்பத்தின் துயரில் மேலுமொரு இடி.

மேசன் வேலைக்குப்போன மருமகன் கட்டடமொன்றிலிருந்து தவறி வீழ்ந்து கோமாநிலைமைக்குப் போயிருந்தார். "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழி ஐயாவின் குடும்பத்திற்கு நிகழ்ந்தது. உழைக்கவிருந்த ஒரு மருமகனும் சில மாதங்கள் கோமா நிலைமையிலிருந்து நினைவுகள் மறந்து ஒரு குழந்தையின் வடிவமாக வீடு வந்து சேர்ந்தார்.

இரு நோயாளிகளைப் பராமரிப்பு, 16,14,12,9 வயதுகளிலிருக்கும் பிள்ளைகளை கவனிப்பது எல்லாவற்றுக்கும் மேலாக வருமானமேயின்றிய வாழ்வு ஐயாவின் மகளுக்கு. ஒரு நேரமேனும் வீட்டில் உள்ளவர்களுக்கு சாப்பாடு கொடுக்கவேனும், உழைக்கவேண்டிய பொறுப்பும் 36வயதான ஐயாவின் மகளின் தலையில்.

அழுதாலும் தீராத துயரம் அந்தக் குடும்பத்தின் விதியாகி 75வயதான ஐயா தன்னை மரணம் கொண்டு போகாமலிருக்கும் விதியை எண்ணி கட்டிலிலேயே கண்ணீரோடு கழிக்கிறார்.

3 ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் கொடுத்துவிட்டு அனாதையான தனது வாழ்வு மீது ஐயாவுக்கு வெறுப்பாயே இருக்கிறது. ஐயாவிடம் விரைவில் வருவார்கள் என ஐயா நம்பியிருந்த இளைய போராளி மகளும் மருமகனும் பேரப்பிள்ளைகளும் ஆசிய நாடொன்றில் பயண முகவரால் ஏமாற்றப்பட்டுச் சிறையொன்றில்....!

**நன்றி : முல்லைமண்**



# புலிகளின் வதை முகாமில்

## வதை-69 மணியம்

**கொலையாளிகள்** தமது நோக்கத்தைச் சாதுரியமாக நிறைவேற்றிவிட்டார்கள். அவர் ரெலோ இயக்கத் தலைமையுடன் கொண்டிருந்த முரண்பாட்டை முன்னிறுத்தி, அந்த இயக்கத் தலைமைதான் அவரைக் கொலை செய்தது என்ற பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

ஆனால் தமக்கு சவாலாக அமையக்கூடிய மனோ மாஸ்டரைக் கொலை செய்துவிட்டு, ரெலோ இயக்கத்தின் மீது அந்தப் பழியைப் போட்டவர்கள் புலிகள்தான் என்பது பின்னாளில் அம்பலத்துக்கு வந்தது.

இறைகுமாரன், உமைகுமாரன், மனோ மாஸ்டர் போன்றவர்கள் கொலை உட்பட, பல கொலைகள் பற்றியும்கூட புலிகளின் விசாரணையாளர்கள் தொடர்ந்து என்னிடம் கேள்விகள் கேட்ட வண்ணமே இருந்தனர். அத்து டன் ஆயுதங்கள் பற்றியும் என்னிடம் பல விசாரணைகளை மேற்கொண்டனர். நான் அவற்றுடன் சம்பந்தமில்லாதவன் என்று தெரிந்து கொண்டும், புலிகள் இந்த விதமான விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டதன் நோக்கம், என்னைப் பல வழிகளில் சிக்க வைப்பதற்காகும்.

1966 – 70 வரையான காலகட்டத்தில், எமது கட்சி வட பகுதியில் தலைமைதாங்கி நடாத்திய தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின்போது, தாழ்த்தப்பட்ட மக்கள் தரப்பிலும் சாதி வெறியர்கள் தரப்பிலும் சிலர் உயிரிழந்தனர். அந்தப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தரப்பில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் குறித்தே என்னிடம் விசாரணையை ஆரம்பித்தனர்.

புலிகளைப் பொறுத்தவரை ஆயுதங்கள், பணம் இரண்டிலும் அபாரமான ஆசை கொண்டவர்கள் என்பதை அவர்களுடன் பழகியவர்கள் நன்கறிந்திருப்பர். அதுமட்டுமல்ல, அவை இரண்டும் தம்மைத்தவிர வேறு எவரிடமும் இருக்கக்கூடாது என்பதில் புலிகள் குறியாக இருந்ததை, எனது விசாரணைகளின் போது தெரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அதனால் அவர்கள் இரண்டு விடயங்கள் குறித்து என்னிடம் தீவிரமாக விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணைகளை எனது வழமையான விசாரணையாளனான தயாபரன் மேற்கொள்ளவில்லை. அதற்காக வேறு சில முக்கியமான புலனாய்வுப் பிரிவினர் வெளியிலிருந்து அடிக்கடி வந்து போயினர்.

முதலாவது விசாரணை 1960களின் பிற்பகுதியில் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வட பகுதியில் நடாத்திய தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலம் பற்றியது. அந்தப் போராட்டத்தின்போது உயர்சாதி வெறியர்கள் மத்தியிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் சிலர் உயிரிழந்தனர். உதாரணமாக, தாழ்த்தப்பட்ட மக்களின் போராளிகள் சிலர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக, சங்கானையில் சில சாதி வெறிச் சண்டியர்களும், அச்சுவேலியில் சண்டியனும் சாதி வெறியனுமான 'சருகுபுலி' தவராசா போன்றோரும் தாழ்த்தப்பட்ட போராளிகளால் கொல்லப்பட்டனர்.

அதுதவிர, வடமராட்சியிலுள்ள கன்பொல்லைக் கிராமத்தில் கைக்குண்டு தயாரிக்கையில் அது தவறுதலாக வெடித்ததில் மூன்று தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் உடல் சிதறிப் பலியாகினர். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் ஆலயப்பிரவேசப் போராட்டத்தின் போதும் சில கைக்குண்டுகள் வீசப்பட்டு சிலர் காயமடைந்தனர். இதுமாதிரியான வேறு சில சம்பவங்களும் அன்றைய காலகட்டத்தில் நடந்திருந்தன.

இவ்வாறான சம்பவங்கள் பற்றி விசாரித்த புலிகளின் புலனாய்வாளர்கள், அந்தப் போராட்டங்களின் போது தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வகைகள் பற்றி என்னிடம் கேட்டனர். குறிப்பாக, அந்த நேரத்தில் ஏ.கே. 47 என்ற நவீன துப்பாக்கி ஆயுதப்படைகளைத் தவிர வேறு எவரிடமும் இல்லாத காலம். அந்த வகைத் துப்பாக்கி ஒன்று எமது கட்சியினரிடம் இருந்ததாகவும், அது இப்பொழுது எங்கே என்றும் என்னிடம் துருவினர்.

உண்மையில் அப்படி ஓர் ஆயுதம் எமது கட்சியினரிடம் இருந்தது என்ற தகவல் புலிகள் சொல்லி அப்பொழுதுதான் எனக்குத் தெரிய வந்தது. அது எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், அதே வேளையில் எமது தோழர்கள் அந்தளவு தூரம் சென்றிருந்தார்களா எனச் சற்றுப் பெருமையாகவும் கூட இருந்தது. ஏனெனில் எமது கட்சி இலங்கையில் பாராளுமன்றப் பாதையை நிராகரித்து, ஆயுதப்போராட்டப் பாதையை வலியுறுத்திய ஒரே கட்சி. ஆனால் எமது கட்சி ஆயுதப்போராட்டம் பற்றி வாய்ப்பந்தல் போட்டதே தவிர, அதற்கான எந்தவொரு முயற்சியிலும் இறங்கியது கிடையாது. எமது கட்சியிலிருந்து பிரிந்துசென்ற ரோகண விஜேவீர உருவாக்கிய ஜே.வி.பி 1971 ஏப்ரலில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட போதுதான், எமது கட்சி வாய்ப்புரட்சியுடன் நின்ற விடயம் எம்மில் பலருக்குத் தெரிய வந்தது. தவிரவும், வடக்கில் தீண்டா மைக்கு எதிரான போராட்டத்தை எமது கட்சி நடாத்திய காலகட் டத்தில், நான் கிளிநொச்சி மாவட் டத்தில் விவசாயிகள் மத்தியில் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தேன்.

(தொடரும்...)




பிரச்சினையின் ஆரம்பம், மார்ட்டின் லூதரின் ஒரு கடிதம் தான் என்று அடித்துச் சொல்கிறார்கள், யூத வரலாற்று ஆசிரியர்கள். (மார்ட்டின் கில்பர்ட் போன்ற சமீப கால ஆராய்ச்சியாளர்கள்கூட இக்கடிதத்தை குறிப்பிடத் தவறுவதில்லை) சற்று விவகாரமான அந்த விஷயத்தை கொஞ்சம் அலசவேண்டியது கட்டாயம்.



1543ஆம் ஆண்டு லூதர், தம்மைப் பின்பற்றும் கிருத்தவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். அந்த கடிதக் கட்டுரைக்கு Of the Jews and Their lies என்று தலைப்பு வைத்தார். மிக விரிவாக, ஏழு பகுதிகளாக எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தின் சாரத்தைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

1. யூதர்களின் தேவாலயங்கள் எதுவும் செயற்படக் கூடாது. ஒன்று எரித்துவிட வேண்டும் அல்லது யாரும் உள்ளே போக முடியாதபடி பாழ்படுத்தி, குப்பைகளால் நிரப்பிவிட வேண்டும்.

2. இதனை வன்முறையாகக் கருதாமல், கடவுளுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாக நினைக்கவேண்டும். தொடர்ந்து யூதர்கள் தம்மைக் குறித்தும் தமது சமூகம் குறித்தும் உயர்த்தியும் பெருமைபேசியும் செய்துவரும் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்க இதுவே ஆரம்பமாகும்.

3.தேவாலயங்கள் செயற்படுவதை தடை செய்யும்போது அவர்கள் தம் நடவடிக்கைகளை வீட்டில். இருந்தும் தொடரக்கூடும். அதனால் யூதர்களின் வீடுகளையும் இடித்து விடுங்கள். தம்மைப் பற்றிய மிகை யான மதிப்பீடுகள்கொண்ட யூதர்கள், ஜிப்ஸிகள் போல் திரியத் தொடங்கிய பிறகாவது யோசிக்க ஆரம்பிக்கலாம்.

4. யூதர்களின் பொய்கள் அனைத்தும் அவர்களது மத நூல்களான தோரா, தால்மூத் ஆகியவற்றிலிருந்துதான் உற்பத்தியாகின்றன. அந்த நூல் பிரதி ஒன்றுகூட அவர்கள் கையில் இருக்கக் கூடாது; கிடைக்கவும் கூடாது.

5. யூத மத போதகர்களை, குருமார்களை அச்சுறுத்தி வைக்கவும் தொடர்ந்து அவர்கள் போதனைகளைத் தொடர்வார்களேயானால் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

6. யூதர்களின் பாஸ்போர்ட்களைப் பறிமுதல் செய்யவேண்டும். வியாபாரம் உள்ளிட்ட எந்தக் காரணத்துக்காகவும் அவர்கள் எங்கேயும் நகர முடியாதபடி செய்துவிடுவது அவசியம்.

7. யூதர்கள் நிறைய சொத்து சேர்த்திருக்கிறார்கள். அவர்களது பணம், நகைகளைப் பறிமுதல் செய்யவேண்டும். அவை அனைத்தும் நம்மிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டவை. வழிப்பறி செய்யப்பட்டவை என்பதை முதலில் உணரவேண்டும்.

8. இத்தனைக்கும் பிறகும் அவர்களால் நமக்கோ, நமது மனைவி மக்களுக்கோ, நமது ஊழியர்களுக்கோ, சகாக்களுக்கோ ஏதேனும் ஆபத்து வரும் என்று நினைப்பீர்களானால் அவர்களை வெளியேற்றத் தயங்க வேண்டாம். பெரும்பாலான ஐரோப்பிய தேசங்கள் இதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கின்றன. நீங்களும் செய்யலாம்; தவறில்லை.

ப்ராட்டஸ்டண்ட் கிருத்தவர்களுக்கு மார்டின் லூதர் எழுதியதாக யூத வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் காட்டும் இக்கடிதத்தில் இன்னும் கூடப் பல திடுக்கிடும் உத்தரவுகள், யோசனைகள் இருக்கின்றன.

ஐரோப்பாவில் அன்றைக்கு யூதர்கள் எத்தகைய அச்சுறுத்தல்களுக்கு இடையே வாழ நேர்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மட்டுமே மேற்கண்ட சில உத்தரவுக் குறிப்புக்கள்.

உண்மையில், எந்தவொரு ஐரோப்பிய தேசத்திலும் யூதர்கள் பாதுகாப்பாக வாழ முடியாது என்று மிகத் தெளிவாகத் தெரிந்த காலகட்டம் அது. அச்சுறுத்தல்கள் பல்வேறு இடங்களிலிருந்து மிகக் கடுமையாக வரத் தொடங்கி இருந்தன. பிரான்ஸ், இத்தாலி, போலந்து, இங்கிலாந்து போன்ற தேசங்களில் யூதர்கள் தனியாகச் சாலையில் நடந்து செல்லவே பயந்தார்கள். எப்போதும் ஏதாவதொரு ஆயுதத்தை இரகசியமாகத் தங்கள் ஆடைகளுக்குள் ஒளித்து வைத்திருந்தார்கள். கிருத்தவர்களின் திருவிழாக் காலங்கள், கிருத்தவ தேவாலய விழாக்கள் நடைபெறும் மாதங்களில் எல்லாம் கூடுமானவரை ஊரைவிட்டு வெளியே போய்விடப் பார்ப்பார்கள். எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரம் தேச எல்லையைக் கடந்து போய்விட மிகவும் விரும்பினார்கள்.

இந்த மாதிரியான கால கட்டத்தில் பாலஸ்தீனில் மீண்டும் யூதர்கள் இளைப்பாற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது எனும்போது வேறென்ன செய்வார்கள்?

அணி அணியாகப் பாலஸ்தீனை நோக்கி வரத் தொடங்கினார்கள். துருக்கியப் பேரரசின் அங்கமாக இருந்த பாலஸ்தீனில் இம்மாதிரியான எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது உடனடிக் காரணம். சொந்த ஊருக்கு இந்த சாக்கிலாவது போய்ச் சேர்ந்துவிட முடிகிறதே என்பது இன்னொரு காரணம். இப்படித்தான் பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் ஏராளமான யூதர்கள் பாலஸ்தீனுக்கு வந்துசேர்ந்தார்கள்.

இந்தவகையில் பதினாறாம் நூற்றாண்டைக் காட்டிலும், பதினேழாம் நூற்றாண்டில் வந்தவர்கள் மிகவும் அதிகம். குறிப்பாக, கி.பி. 1648ஆம் ஆண்டு யூத குலம், ஹிட்லரின் தாத்தா ஒருவரை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. அவர் பெயர் பொக்டான் ஷெமீயில்நிகி. கொசாக்குகள் என்று அழைக்கப்பட்ட அன்றைய கிழக்கு ஐரோப்பிய புரட்சியாளர்களின் தலைவர் இவர். லித்துவேனியா, போலந்து, உக்ரைன் போன்ற நாடுகளில் இவரது ஒரு சொல்லால் உந்தப்பட்ட கிருத்தவர்கள் கூட்டம் கூட்டமாக, கொத்து கொத்தாக யூதர்களைக் கொன்று குவிக்க ஆரம்பித்தார்கள். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்றெல்லாம் அவர்கள் சற்றும் பார்க்கவில்லை. ஒரு யூதரைக் கொன்றுவிட முடியுமானால் ஒரு கிருத்தவருக்கு சொர்க்கம் நிச்சயம் என்று அப்போது சொல்லப்பட்டது.

(தொடரும்...)

**மரணம்** ஏற்பட்ட வீட்டிற்கு சென்றுவந்தவுடன் துணிகளை துவைத்து குளிக்கவேண்டும் என்று இந்து மதத்தில் வலியுறுத்தப்படுகிறது. அந்த காலத்திலிருந்து இன்றுவரை இந்துக்களிடம் இந்த பழக்கம் பரவலாக இருந்துவருகிறது.

இது நல்ல பழக்கமா அல்லது எதற்கும் உபயோகமில்லாத

# மரண வீட்டிற்கு சென்றவர்கள் குளிக்க வேண்டுமாமே.....! ஏன்?

பழக்கமா என்பதை பார்ப்பதற்கு முன் அதிலுள்ள சில நடைமுறை கேள்விகளுக்கு பதில் தேடியாக வேண்டிய சூழல் உள்ளது.

இறந்துபோன மனிதனுடைய ஆவி துக்கம் விசாரிக்க சென்றவர்களை தாக்கும் என்றும், அவர்களுடனேயே தொடரும் என்றும் அதனால்தான் குளிக்க சொல்லப்படுகிறது என்று பலர் சொல்கிறார்கள்.

ஒரு மரண நிகழ்விற்கு ஒருவர் மட்டும் செல்வதில்லை.



உற்றார், உறவினர், நண்பர்கள் என்று ஏராளமான பேர்கள் செல் கிறார்கள். இவர்களை ஆவி தாக்குகிறது என்றாலும், தொடர்கிறது என்றாலும் ஒருவரை மட்டும்தான் ஆவியால் குறி வைக்கமுடியும்.

வந்துபோகும் எல்லோரையும் தொடர்கிறது என்பது சாத்தியமில்லாதது ஆகும்.

அப்படி தொடரப்படும் ஒரு நபர் யார் என்று நமக்கு தெரியாது. அதனால் கலந்துகொள்ளும் எல்லாருமே குளித்துவிட வேண்டியதுதான் என்றால்கூட அதிலும் ஒரு சிக்கலிருக்கிறது. மயானத்தில் வேலை செய்யும் ஒருவன், ஒரு நாளில் பல பிணங்களை பார்க்கிறான், தொடுகிறான்.

அவன்கூட தினசரி வேலை முடிந்தவுடன் குளித்து விடுகிறான் என்று சொல்லமுடியாது. அவ்வாறானவர்கள் பலர், வேலைமுடிந்ததும் கிடைக்கும் காசை கொண்டுபோய் மது அருந்துவதில் காட்டுகின்ற வேகத்தை குளிப்பதில் காட்டுவதில்லை. இறந்த ஆவி மனிதனை தொடும் என்றால் மயான தொழிலாளரும் மனிதர்கள்தானே.

பிணங்களோடு புழங்கும் தனது தொழிலுக்காக பிரத்தியேகமாக அவன் எந்த சடங்குகளையும் தினசரி செய்வது கிடையாது. அது அவனால் முடியாது.

அதனால் ஆவிகள் மரணம் அடைந்தவுடன் மனிதர்களை தொடரும் என்பதும், தாக்கும் என்பதும் அவ்வளவு தூரம் உண்மையானது அல்ல.

ஒருவர் இறந்த பிறகு அவர் சடலத்திலிருந்து கண்ணுக்கு தெரியாத ஏராளமான விஷ கிருமிகள் விஷ அணுக்கள் வெளியேறும். சடலத்தை தொடவோ, நெருங்கவோ செய்யும்போது இந்த விஷ உயிர்கள் நமது உடலிலும் உடையிலும் ஒட்டிக்கொள்ள வாய்ப்புள்ளது.

இவைகளை உடனடியாக அப்புறப்படுத்தினால்தான் நமக்கு பாதிப்புகள் வராது. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அசட்டையாக இருந்தால் நமக்கோ, நம்மை தொடுகின்ற குழந்தைகளுக்கோ நிச்சயம் பாதிப்புவரும்.

அதனால்தான் மரண வீடுகளுக்குச் சென்றுவந்தவுடன் குளிக்கவேண்டும் என்றார்கள்.

இதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. இறந்தவர் நமக்கு வேண்டப்பட்டவராக இருக்கலாம். நம் அன்பிற்கு பாத்திரமானவர்களாகவும் இருக்கலாம்.

அவர்களின் நிரந்தர பிரிவு நம் மனதை வாட்டி வதைக்கும். மனம் வாடும்போது உடலும் சோர்ந்துவிடும். அந்தநேரத்தில் குளிர்மையான நீர் உடலை தொடுவதினால் சிறிது மலர்ச்சி ஏற்பட்டு மனதிற்கு ஓரளவு தெம்பும், தைரியமும் கிடைக்கும்.

இந்த உண்மைகளை எல்லாம் நமது ஜனங்களிடம் வெட்ட வெளிச்சமாக சொன்னால் அசட்டை செய்துவிடுவார்கள் என்று கருதி நமது முன்னோர்கள் ஆவிகளின் பெயரை சொல்லி குளிக்க வைத்தார்கள். நல்லதிற்காக பொய் சொன்னால் தப்பில்லை என்பது அவர்கள் கொள்கை.

0

# “மாகாண சபை என் கனவு”

அலசுவது - மதியூகி



**கிடைத்த** வாய்ப்புக்களை தவறவிட்ட காரணத்தினாலேயே தமிழ் மக்கள் இத்தகைய துயரங்களை சந்திக்க நேர்ந்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாணம் சட்ட ரீதியாக இணைக்கப்பட்டு தமிழ் மக்களின் கைகளில் வழங்கப்பட்ட பொற்காலத்தை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்.

மாகாண சபை மூலமாக நிரந்தர அரசியல் தீர்வு நோக்கி முன்னேறுவதற்கு இலங்கை, இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு என்பதை இன்று தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

அந்த வாய்ப்பை புலிகள் தூக்கி எறிந்தார்கள், ஈ.பி.ஆர்.எல்.எப். அதை துஷ்பிரயோகம் செய்தது. பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வானது தனித் தமிழ் ஈழம்தான் என்று புலிகள் கூறினார்கள் அதையே சரிபிழைகளுக்கு அப்பால் தமிழ் தேசியம் பேசியவர்கள் ஏற்றுக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பலத்தை முடக்கிப் போட்டுவிட்டு, ஆட்கொல்லி ஆயுதங்களை நம்பினார்கள்.

இதன் விளைவு மாகாண சபையெனும் தேர் முன்னோக்கி இழுக்கப்படுவதற்கு மாறாக பின்னோக்கி சரிந்தது. அதை தடுத்து நிறுத்த எவரும் முற்படவில்லை. தடுக்க முயற்சி செய்தவர்களை ஆயுதப் போராட்டத்தின் மீது நம்பிக்கையில்லாத துரோகிகள் என்று வீதி வீதியாகச் சுட்டுத்தள்ளினார்கள்.

மாகாண சபை என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க உதவாது என்றும் மாகாண சபைக்காக தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை என்றும் பேசியவர்கள், மாகாண சபை முறையென்பதே தமிழ் மக்கள் அகிம்சை வழியிலும், ஆயுதம் தாங்கிய போராட்ட வழியிலும் முன்னெடுத்த உரிமைப் பிரச்சினைக்கு பலனாகக் கிடைத்தது என்பதாகும்.

தமிழ் மக்களின் இழப்புக்களையும், அழிவுகளையும் தடுத்து நிறுத்தி, உயிர்களையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதற்கு மாகாண சபையை தமிழ் மக்கள் சரியாக கையாண்டிருக்க வேண்டும். அவ்வாறு. செய்யாது விட்டதானது தமிழ் மக்களின் வரலாற்றில் பெரும் பின்னடைவையும், இழப்புக்களையும் ஏற்படுத்தி விட்டுள்ளதை நாம் சிந்திக்க வேண்டும்.

இருந்தபோதும் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக மாகாண சபை அதிகாரம் தமிழ் மக்களும் அனுபவிக்கும் விதமாக வழங்கப்பட வேண்டும் என்று மாறி மாறி வந்த இலங்கையின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோரிடம் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவாந்தா அவர்கள் கடந்த ஐந்தாம் திகதி சிரேஷ்ட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றில் கூறிய கருத்துக்கள் கவனத்துக்குரியதாக அமைந்தது.

அந்த ஊடகவியலாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், “மாகாண சபைத்தேர்தல் என்பது எனது அரசியல் பயணத்தின் முக்கியமான கனவு. மாகாண சபை முறைமையூடாக எமது அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக்கான முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மாகாண சபை முறைமை ஏற்படுத்தப் பட்டதே விஷேடமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்குத்தான். துரதிஷ்ட்டவசமாக தமிழ் மக்களுக்கு அந்த வாய்ப்பை அனுபவிக்க முடியவில்லை. புலிகள் தூக்கி எறிந்தார்கள், அதைப் பொறுப்பேற்ற ஈ.பி.ஆர்.எல்.எப் துஷ்பிரயோகம் செய்தனர். ஆப்போது தமிழ் மக்கள் மாகாண சபை அதிகாரங்களை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்திருந்தால் நடைமுறையில் பல வெற்றிகளை நாம் பெற்றிருக்கமுடியும். விலை மதிப்பற்ற உயிர்ப்பலிகளும், இழப்புக்களும் இங்கே நிகழ்ந்திருக்காது” என்று கூறினார்.

அவர் மேலும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் “13 ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தி அதற்கு பாதகத்தை ஏற்படுத்த எவர் முயற்சி செய்தாலும் அதற்கு ஈ.பி.டி.பி ஒருபோதும் ஆதரவாக இருக்காது. நாம் அரசின் பங்காளிகளாக இருந்தபோதும் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது நிலைப்பாட்டையும், எமது மக்களின் அபிலாஷைகளையும் ஜனாதிபதி அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். தற்போதைய அரசியல் சூழலானது நிதானத்தோடும், இருக்கக்கூடிய அரசியல் பலத்தை கவனத்தில் கொண்டும் சாணக்கியமாக அனுகப்படவேண்டியதர்கும்.

ஆகையால் எமது அணுகுமுறைகளை எல்லாப் பொழுதிலும் வெளிப்படையாக கூறமுடியாது. ஏன் என்றால் நாம் எடுக்கின்ற முயற்சிகளை தடுக்கவும், அதற்கு வேறு வடிவத்தை கற்பிதம் 'செய்யவும் இன்று பல கடும்போக்குச் சக்திகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவதற்கு விரும்பும் தமிழ் அரசியல் வாதிகளும் இருக்கின்றார்கள்” என்றார்.

**13ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தி அதற்கு பாதகத்தை ஏற்படுத்த எவர் முயற்சி செய்தாலும் அதற்கு ஈ.பி.டி.பி ஒரு போதும் ஆதரவாக இருக்காது. நாம் அரசின் பங்காளிகளாக இருந்தபோதும் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது நிலைப்பாட்டையும், எமது மக்களின் அபிலாஷைகளையும் ஜனாதிபதி அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். தற்போதைய அரசியல் சூழலானது நிதானத்தோடும், இருக்கக்கூடிய அரசியல் பலத்தை கவனத்தில் கொண்டும் சாணக்கியமாக அனுகப்படவேண்டியதாகும்.**

**ஆகையால் எமது அணுகுமுறைகளை எல்லாப் பொழுதிலும் வெளிப்படையாக கூறமுடியாது. ஏன் என்றால் நாம் எடுக்கின்ற முயற்சிகளை தடுக்கவும், அதற்கு வேறு வடிவத்தை கற்பிதம் செய்யவும் இன்று பல கடும்போக்குச் சக்திகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவதற்கு விரும்பும் தமிழ் அரசியல் வாதிகளும் இருக்கின்றார்கள்.**

இன்னொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வடக்கு மாகாண சபைத் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படுவதற்கு முன்னர் அதில் அரசுடன் இணைந்து போட்டியிடப்போகின்றோமா? அல்லது ஈ.பி.டி.பி தனித்து போட்டியிடப் போகின்றோமா? என்பது பற்றியும் தற்போது கூறுவது பொறுத்தமாக இருக்காது என்றார். அது மட்டுமல்லாமல் இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கும் போது, மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிடுவேனா? என்பது பற்றியும் தெரிந்து கொள்வதற்கு நீங்கள் கொஞ்சம் பொறுக்கவேண்டும். மற்றபடிக்கு ஜனாதிபதிக்கும் எனக்குமிடையில் பிரச்சினைகள் இருப்பதாக கூறுவது தவறாகும். ஆவர் தனது அமைச்சரவையில் நானும் இருக்க வேண்டும் என்று கூறுவார். அது மட்டுமல்லாமல் நடைமுறைச் சாத்தியத்தோடும், நியாயத்தோடும் கோரிக்கைகளை முன்வைப்பதால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்பதையெல்லாம் வழங்குவேன் என்று பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி கூறிவருகின்றார். ஆகவே எனது அரசியல் வேலைத்திட்டத்தில் அதிகார எல்லையானது வானமாகும். அந்த வானம் என்று நான் கருதுவது ஜனாதிபதியைத்தான் எனவே எனது அனுபவமும், அனுகுமுறைகளும் தமிழ் மக்களை துன்பத்தில் வைத்திருப்பதாக ஒரு போதும் இருக்கவில்லை, இருக்கப் போவதுமில்லை.

ஆகவே மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எமக்கு அதிகப்படியான வாக்குகளை வழங்குவார்கள் என்று நம்புகின்றேன். நான் நம்புவதற்கு இன்னோரு காரணம் தமிழ் மக்களிடையே மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றது.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் வாக்களிக்க கிடைத்த சந்தர்ப்பங்களில் தவறான முடிவுகளை எடுத்திருப்பதை தற்போது உணரத் தொடங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே கூட்டமைப்பு போன்றவர்கள் இம்முறை என்னதான் கூறினாலும், யாரைத்தான் நிறுத்தினாலும் தமிழ் மக்கள் மனசாட்சிப் படியும், கடந்த கால அனுபவங்களிலிருந்தும் சரியான முடிவை எடுக்க வேண்டும் என்பதையே கூறவிரும்புகின்றேன்.

மத்தியில் கூட்டாட்சி
மாநிலத்தில் சுயாட்சி,
எக்காலமும் பிரிக்கப்பட முடியாத
இணைந்த வடக்கு கிழக்கு ஓர் அலகு
இதுவே எமது அரசியல்
இலக்கு. இதில் எதுவித மாற்றங்களும் இல்லை.

ஆனால் இந்த இலங்கை நோக்கிய பயணம் பசும் புட்கள் மேலானதாக இருக்கப்பொவதில்லை. அது கரடு முரடானது, பெரும் தடைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியதொரு கடினமான பயணம் என்பதை நான் நன்கு அறிவேன்.


ஆனால் அதற்கான முயற்சியும், அணுகுமுறைகளும் தொடரும். அந்த இலக்கு நோக்கிய பயணத்துக்கு தமிழ் மக்களும் துணையாகவும், பலமாகவும் இருக்க வேண்டும். எந்தளவுக்கு மக்களின் ஆதரவு அதிகரிக்கின்றதோ அந்தளவுக்கு எமது இலக்கு நோக்கிய பயணம் துரிதமடையும்.

வடக்கு மாகாண சபை அதிகாரம் எமது கரங்களுக்கு கிடைக்கின்றபோது வட மாகாணத்தை செல்வம் கொழிக்கும் பூமியாக மாற்ற முடியும், அதற்கான வேலைத்திட்டங்கள் எம்மிடம் உண்டு. நாம் மக்கள் வழங்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களல்ல, அதை முடக்கிப்போட்டு நீலிக்கண்ணீர் வடிப்பவர்களும் அல்லர். தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்னவென்று எனக்கு நன்றாகத் தெரியும் ஆகவே கிடைக்கின்ற அதிகாரங்களையும், அதற்கு மேலாகவும் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது எமக்கு தெரியும், நமது பிரச்சினைகளையும், தேவைகளையும் தீர்த்துக் கொள்ள நாமே முதலில் முற்பட வேண்டும் யாரையும் நோக்கி விரல்களை நீட்டிக் கொண்டிருப்பதற்காக மக்கள் வாக்களிப்பதில்லை. அவ்வாறு கூறுவதானது இயலாத்தன்மையாகும். அவ்வாறான பிற்போக்குத்தனமான, பொய்யான அரசியலை நான் செய்யப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கும்போது, யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகள் அதிகமாக நடைபெறுவதாக கூறுகின்றார்கள். அவ்வாறான சம்பவங்கள் நாட்டின் எல்லா பாகங்களிலும் நடைபெறவே செய்கின்றன. அதற்காக யாழ்ப்பாணத்தில் முற்றாக எதுவுமே நடைபெறவில்லை என்று கூறமாட்டேன். பல ஆண்டுகளாக ஆயுத நிழலில் அடக்கப்பட்ட மக்கள் தற்போதைய சுதந்திரமான சூழல் மாற்றத்திற்கு முகம் கொடுக்கும்போது சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. பொது இடங்களில் சிலர் மதுபானம் குடிப்பதை நான் அவதானித்துள்ளேன் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் அவர்கள் மகிழ்ச்சிக்காக அவ்வாறு செய்தால் அது பாதகமில்லை.

யாழ்ப்பாணத்தில் விடுதிகளை நடத்துவோர் கலாசார சீரழிவுகளுக்கு இடம் கொடுக்காதவகையில் கவனமாக இருக்கவேண்டும், அவர் தென் இலங்கை சிங்கள மக்கள் இல்லை. தமிழ் மக்களே விடுதிகளின் உரிமையாளர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இதில் அக்கறைவேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸாருடன் அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றேன். முன்னரை விடவும் அவ்வாறான சம்பவங்கள் கனிசமாக குறைந்துள்ளது. இன்னும் கூடுதல் கண்காணிப்பு அவசியம் அதற்கு தனியே பொலிஸார் மட்டுமல்லாது, பொது மக்களும், ஊடகங்களும் தமது சமூக அக்கறையை செலுத்தவேண்டும் என்று கூறினார்.



தொகுப்பு வேணுகிருஷ்ணா

# உளவாளி ஸ்னோடனால் அம்பலமாகும் அமெரிக்கா!

**அமெரிக்க அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான அம்பலப்படுத்தல்களுக்கு காரணமானவரான எட்வர்ட் ஸ்னோடன் பெரும்பாலானோர் பொறாமைப்படும் வேலையில் இருந்தார்.**

**ஆனால், தான் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை உண்மையில் ஒரு கெட்ட கனவு என்பதை பல ஆண்டுகளாகவே அவர் உணர ஆரம்பித்திருந்தார். உலகெங்கிலும் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் இணைய சுதந்திரத்தையும் மறுக்கும் அமெரிக்க அரசின் நடவடிக்கைகளை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. தனது வசதியான வாழ்க்கை அனைத்தையும் தியாகம் செய்து அமெரிக்க அரசமைப்பை அம்பலப்படுத்த முடிவு செய்தார்.**

## பொலிவியா நாட்டு ஜனாதிபதியின் விமானம் திசை திருப்பல்!!

அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களை அம்பலமாக்கிய எட்வார்ட் ஸ்னோடன் விவகாரம், சர்வதேச ராஜ தந்திர அளவில் இம்மாதம் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை உச்சத்தை தொட்டது. செவ்வாய்க்கிழமை இரவு பொலிவியா நாட்டு ஜனாதிபதி பயணம் செய்த தனி விமானம், ஐரோப்பாவில் திசை திருப்பப்பட்டது.

அந்த விமானத்தில் ஸ்னோடன் தப்பிச் செல்லலாம் என்று ஏற்பட்ட சந்தேகமே அதற்கு காரணம்.

துப்பறியும் கதை போல சுவாரசியமான திருப்பங்கள் எல்லாம் ஸ்னோடன் விவகாரத்தில் ஏற்படத் தொடங்கியுள்ளன. ஒரு நாட்டின் ஜனாதிபதியின் தனி விமானமே திசை திருப்பப்படும் அளவுக்கு விவகாரம் போயிருக்கிறது என்றால், இது மிகப் பெரிய வி'யம்.

பொலிவியா நாட்டு ஜனாதிபதி ஈவோ மொரால்ஸுடன், அவரது தனி விமானத்தில் ஸ்னோடன் ரஷ்யாவில் இருந்து தப்பிச் செல்கிறார் என்ற உளவுத் தகவல் கிடைத்ததை அடுத்து, அந்த விமானம் ஐரோப்பிய வான் பகுதியில் பறந்து கொண்டிருந்த போது, பிரான்ஸ், மற்றும் போத்துக்கல் ஆகிய இரு நாடுகளும் அந்த விமானம் தமது வான் பகுதியில் பறப்பதற்கு தடை விதித்தன.

இதையடுத்து ஜனாதிபதியின் விமானம் அந்த இரவே திசைதிருப்பப்பட்டு, ஆஸ்திரியா நாட்டில் இறக்கப்பட்டுள்ளது.

இப்போது ஸ்னோடன் விவகாரம், நாடுகளுக்கு இடையிலான ராஜதந்திர முறுகல் நிலையை ஏற்படுத்தி விட்டது. அமெரிக்காவின் வேண்டுகோளை அடுத்தே பிரான்ஸ், மற்றும் போத்துக்கல் தமது நாட்டு ஜனாதிபதியின் விமானம் பறப்பதற்கு தடை விதித்துள்ளன என பொலிவியா நாட்டு வெளியுறவு அமைச்சர் வெளிப்படையாகவே குற்றம் சுமத்தியுள்ளார்.

சரி, விறுவிறுப்பான இந்த விவகாரத்தில் என்னதான் நடந்தது?

இந்தியா, சீனா உட்பட 19 நாடுகளிடம் ஸ்னோடன் அரசியல் அடைக்கலம் கோரியிருந்த போதிலும், அவரது முதல் தெரிவாக இருந்த நாடுகள் தென் அமெரிக்க நாடுகளான ஈக்வடோர், பொலிவியா மற்றும் வெனிசூலாதான். இதில் ஈக்வடோர், விக்கிலீக்ஸ் அதிபர் அசாஞ்சுக்கு அரசியல் அடைக்கலம் கொடுத்து, பிரிட்டனில் உள்ள தமது நாட்டு தூதரகத்தில் வைத்து பாதுகாத்து வருகிறது.

இந்த நிலையில், பொலிவியா நாட்டு ஜனாதிபதி, எண்ணை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள ரஷ்யா வந்தார். ஸ்னோடன் ரஷ்யாவின் மாஸ்கோ விமான நிலைய ட்ரான்சிட் ஏரியாவில் தங்கியிருப்பதாக சொல்லப்படும் நிலையில், இவர் ரஷ்யா வரும் முன்னரே சர்வதேச மீடியாவில் வதந்தி ஒன்று பரபரப்பாக அடிபட்டுக் கொண்டிருந்தது.

வதந்தி என்னவென்றால், ரஷ்யா வரும் பொலிவியா நாட்டு ஜனாதிபதி மாநாடு முடிந்து தனது நாடு திரும்பும்போது, தனது தனி விமானத்தில் எட்வார்ட் ஸ்னோடனையும் அழைத்து (கடத்தி என்றன சில அமெரிக்க ஊடகங்கள்) சென்று விடுவார் என்பதே!

இதனால், பொலிவியா நாட்டு ஜனாதிபதியின் வருகையை, ஊடகங்கள் மட்டுமின்றி, சி.ஐ.ஏ. உட்பட உளவு அமைப்புகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன.

மாஸ்கோ வந்து இறங்கிய பொலிவியா நாட்டு ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்திப்பதற்கு முன் செய்தியாளர்களிடம் பேசியபோது, ஸ்னோடன் பற்றி சிலாகித்து பேசினார். "ஸ்னோடன் என்ன குற்றம் செய்தார்? யாரையாவது கொன்றாரா? எங்காவது வெடிகுண்டு வைத்தாரா? இல்லையே" அமெரிக்க உளவுத்துறை அனைவரையும் உளவு பார்க்கிறது என்று உலகத்துக்கு தெரிய வேண்டிய உண்மையை வெளியிட்டிருக்கிறார்" என்றார். இது போதாதா?

பொலிவியா ஜனாதிபதி வந்து இறங்கிய விமானம், மாஸ்கோ விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்புடன் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இரவு அந்த விமானம் புறப்படும் முன், மூடப்பட்ட ஹாங்கர் ஒன்றுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. அதன்பின் மீண்டும் வெளியே கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. (விமானத்தை பழுது பார்ப்பதற்கும் ஹாங்கருக்குள் கொண்டு செல்லலாம்)

இந்த நடைமுறை அமெரிக்க உளவுத் துறைக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஸ்பெயினில் இருந்து புறப்பட்ட விமானம், வியன்னாவில் தரையிறங்கியுள்ளது

அதன்பின் விமானத்தை யாரும் நெருங்க அனுமதிக்கப்படவில்லை. மூடப்பட்ட ஹாங்கரில் ஸ்னோடன் விமானத்தில் ஏறியிருக்கலாம் என்ற சந்தேகம் அமெரிக்க உளவுத் துறைக்கு ஏற்பட்டிருக்கலாம்.

அந்த இரவு, பொலிவியா ஜனாதிபதி வந்து விமானத்தில் ஏறிக் கொண்டார். விமானம் பொலிவியா நாட்டை நோக்கி புறப்பட்டது.

இந்த விமானம் செல்லும் வான் பாதையில், அதற்கு கீழேயுள்ள நாடுகளில் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டிருந்தது. விமானம் புறப்படும்வரை காத்திருந்துவிட்டு, விமானம் வானில் பறந்து கொண்டிருந்த நிலையில், தமது வான் பகுதியூடாக பறக்க வழங்கப்பட்ட அனுமதியை போத்துக்கல் ரத்து செய்தது. அதையடுத்து பிரான்ஸும், அனுமதி ரத்து என்ற தகவலை விமானிக்கு அனுப்பியது.

ஜனாதிபதியின் விமானம் தொடர்ந்து செல்ல முடியாமல் வானத்தில் வட்டமடிக்க தொடங்கியது.

இந்த நிலையில் பொலிவியா அதிகாரிகள், வேறு ஐரோப்பிய நாடுகளிடம் அனுமதி பெறும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இரவு நேரத்தில் அந்த முயற்சி பெரிதாக வெற்றி பெறாத நிலையில், விமானத்தின் எரிபொருள் இருப்பு குறையத் தொடங்கியது. ஜனாதிபதியின் விமானம் எரிபொருள் முடிந்து விழுந்து விடலாம் என்ற அவசர கோரிக்கையை பொலிவியா அதிகாரிகள் விடுத்ததை அடுத்து, ஸ்பெயின் நாடு ஒரு நிபந்தனையுடன் அனுமதி கொடுத்தது.

நிபந்தனை என்னவென்றால்,



விமானத்தை ஸ்பெயின் நாட்டு விமான நிலையத்தில் தரையிறக்கி எரிபொருள் நிரப்பலாம். ஆனால் விமானம் பொலிவியா நாட்டுக்கு தொடர்ந்து செல்ல அனுமதி கிடையாது. வேறு எங்கு வேண்டுமானாலும் போகலாம்

அதன் அர்த்தம், ஜனாதிபதியின் விமானமாக இருந்தாலும் சரி, அதில் எட்வார்ட் ஸ்னோடன் பொலிவியா செல்ல முடியாதபடி எப்படியாவது தடுப்பது.

ஸ்னோடன் விவகாரத்தில், ஒரு நாட்டு ஜனாதிபதியின் விமானத்துக்கே ஏற்பட்ட கதியை பார்த்தீர்களா?

வேறு வழியில்லாமல் ஜனாதிபதியின் விமானம் ஸ்பெயினில் தரையிறங்கியது. எரிபொருள் நிரப்பியது. அங்கிருந்து எங்கே போகலாம்? பொலிவியா நாட்டு ராஜதந்திரிகள் தமக்கு சார்பான நாட்டு அரசு தலைவர்களை நள்ளிரவு நேரத்தில் தொடர்பு கொள்ளத் தொடங்கினார்கள்.

விமானம் தமது நாட்டுக்கு வந்து தரையிறங்க அனுமதி கொடுத்தது ஆஸ்திரியா.

இதையடுத்து ஸ்பெயினில் இருந்து புறப்பட்ட விமானம், ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் தரையிறங்கியுள்ளது. சர்வதேச அகதி மற்றும் அரசியல் அடைக்கல சட்டங்கள் பல ஆஸ்திரியாவில்தான் உருவாகின (வியன்னா கன்வென்ஷன்) என்பதால், ஆஸ்திரியாவை தேர்ந்தெடுத்திருக்கலாம் பொலிவியா ஜனாதிபதி.

அந்த இரவு ஆஸ்திரியாவில் தரையிறங்கிய விமானத்தில் இருந்து இறங்கிய பொலிவியா ஜனாதிபதி, வியன்னா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கினார். ஸ்னோடன் இறங்கியதாகத் தெரியவில்லை. "ஜனாதிபதியின் தனி விமானத்தில் ஸ்னோடன் இல்லவே இல்லை" என தெரிவித்துள்ளார், பொலிவியா நாட்டு வெளியுறவு அமைச்சர்.

"பிரான்ஸ் மற்றும் போத்துக்கல், எமது நாட்டு ஜனாதிபதியின் உயிருக்கே உலை வைக்கப் பார்த்தன. இதெல்லாம் அமெரிக்க உத்தரவுப்படிதான் நடந்திருக்கின்றன எனவும் கூறியுள்ளார் அவர்.

கடந்த மாதம் 30 வயதை எட்டிப்பிடித்துள்ள ஸ்னோடனிடம், பல முக்கிய ரகசியங்கள் உள்ளன என்பது மட்டும் நன்றாகவே தெரிகிறது!

## யார் இந்த ஸ்னோடன்?

அமெரிக்க அரசின் அதிரகசிய உளவுத துறையில் வேலை செய்த ஸ்னோடன், தன் சொந்த வாழ்க்கை சுகங்களை தியாகம் செய்து உலக மக்களுக்கான தன் கடமையைச் செய்ய முன் வந்தார்.

அமெரிக்க அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான அம்பலப்படுத்தல்களுக்கு காரணமானவரான எட்வர்ட் ஸ்னோடன் பெரும்பாலானோர் பொறாமைப்படும் வேலையில் இருந்தார். அமெரிக்க மத்திய அரசு வேலை, கணினி துறையில் வித்தகர், $2,00,000 (சுமார் ரூ 1.2 கோடி) சம்பளம், ஹவாயில் அவரது துணைவியுடன் பகிர்ந்து கொள்ள சொந்தமாக வீடு என்று அமெரிக்க கனவை நனவாக்கிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார் ஸ்னோடன்.

ஆனால், தான் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை உண்மையில் ஒரு கெட்ட கனவு என்பதை பல ஆண்டுகளாகவே அவர் உணர ஆரம்பித்திருந்தார். உலகெங்கிலும் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் இணைய சுதந்திரத்தையும் மறுக்கும் அமெரிக்க அரசின் நடவடிக்கைகளை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தனது வசதியான வாழ்க்கை அனைத்தையும் தியாகம் செய்து அமெரிக்க அரசமைப்பை அம்பலப்படுத்த முடிவு செய்தார்.

29 வயதான ஸ்னோடன் வட கேரலினாவின் எலிசபத் நகரத்தில், 1983ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி பிறந்தவர். அவரது குடும்பம் தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் தலைமையகம் இருக்கும் மேரிலாண்டுக்கு இடம் பெயர்ந்தது. உயர் நிலைப்பள்ளி பட்டயம் பெறுவதற்காக மேரிலாண்ட் சமூகக் கல்லூரியில் கணினித் துறை வகுப்புகளில் கலந்து கொண்டார். ஆனால், அவர் பள்ளிப் படிப்பை முடிக்கவில்லை.

சி.ஐ.ஏ யின் தகவல் தொடர்புப் பாதுகாப்புத் துறையில் வேலை செய்ய அனுப்பப்பட்டார்

2003ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து சிறப்புப் படைகளுக்கான பயிற்சி திட்டத்திற்கு அனுப்பப்பட்டார். ஈராக்கில் ஒடுக்கப்படும் மக்களை விடுதலை செய்வதில் தானும் பங்கு பெற வேண்டும் என்று விரும்பினார். ஆனால், போர் பற்றிய அவரது நம்பிக்கைகள் விரைவிலேயே சிதறடிக்கப்பட்டன. அவருக்கு பயிற்சி அளித்த ராணுவ அதிகாரிகளில் பெரும்பாலானோர் யாருக்கும் உதவுவதை விட ஈராக் மக்களை கொல்வதைப் பற்றியே ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

ஒரு விபத்தில் இரண்டு கால்களும் முறியவே, இராணுவத்திலிருந்து விலகினார். மேரிலாண்ட் பல்கலைக் கழகத்தில் இயங்கி வந்த தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் ரகசிய பிரிவு ஒன்றில் பாதுகாவலராக வேலை கிடைத்தது. அங்கிருந்து சி.ஐ.ஏ. யின் தகவல் தொடர்பு பாதுகாப்புத்துறையில் வேலை செய்ய அனுப்பப்பட்டார்.

## கெட்டது செய்யும் அமைப்பில் தான் பங்கேற்பதை புரிந்து கொண்டார்

இணையம் பற்றிய அறிவும், மென்பொருள் உருவாக்கலில் இருந்த திறமையும் பள்ளி இறுதி வகுப்பைக் கூட முடித்திராத அவர் வெகு வேகமாக முன்னேற உதவின. 2007ஆம் ஆண்டு சி.ஐ.ஏ அவரை தூதரக ஊழியர் வேடத்தில் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவுக்கு அனுப்பியது. கணினி இணைய பாதுகாப்பிற்கான பொறுப்பில் இருந்த அவர் பல வகைப்பட்ட ரகசிய ஆவணங்களை பார்க்க முடிந்தது. அதன் மூலம் கிடைத்த விபரங்களும் கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் சி.ஐ.ஏ அதிகாரிகளுடன் வேலை செய்த அனுபவமும், நடப்பவற்றின் நியாயத்தைப் பற்றிய கேள்விகளை அவர் மனதில் எழுப்பின.

ஒரு ஸ்விஸ் வங்கி அதிகாரியை குடிக்க வைத்து, குடிபோதையில் வண்டி ஓட்ட வைத்து, அவர் பொலிஸில் சிக்கியதும் அவருக்கு உதவுவதாக முன் வந்த ரகசிய உளவாளி மூலம் அவரை தமது நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொண்டது சி.ஐ.ஏ. இது போன்ற பல நிகழ்வுகள் ஸ்னோடனை சோர்ந்து போக வைத்தன. அமெரிக்க அரசு அமைப்பு பற்றிய அவரது அடிப்படை நம்பிக்கைகள் சிதைந்து போயின. நல்லதை விட பல மடங்கு கெட்டது செய்யும் அமைப்பில் தான் பங்கேற்பதை அவர் புரிந்து கொண்டார்.

தொழில்நுட்பம்



# டோர்ச் எரிய கை பதித்தால் போதும்!

**மனித** உடம்பின் வெப்பம் 40 வோல்ட்டுக்கும் அதிகமாய் உள்ளது என்பதை நாம் அறிவோம். இதை பயன்படுத்தி நாம் இதுவரை ஒன்றும் செய்ததில்லை என்பது தெரியும்.


இந்நிலையில் இதை 15 வயது மாணவி (அன்னோ மக்கோஸின்ஸ்கி) கனடாவில் ஒரு டோர்ச்சை கண்டு பிடித்திருக்கிறார். இதில் பெட்டரி கிடையாது.

ஆனாலும் எரியும் அது எப்படி? மனித உடம்பின் வெப்பத்தை பயன்படுத்தி அதை தெர்மோ எலக்ட்ரிக்காய் பயன்படுத்தி அதை அந்த டோர்ச்சின் மேல் பகுதியில் உள்ள அலுமினியத் தகட்டில் கை பதித்தால் அதன்மூலம் உள்ளே இருக்கும் காலி உருளை அலுமினியம் மூலம் டோர்ச் எரியும்.

முன்னரே சொன்னது மாதிரி இதற்கு மின்சாரம், பெட்டரி என்று ஒன்றுமே தேவையில்லை. உங்கள் கை வெப்பம்போதும். இது 25 டொலர் அதாவது 3250 ரூபாயில் ,தயாரிக்கப்படுகிறது.

இதேபோல் எப்போதும் கையில் வைத்திருக்கும் கைபேசியும் இந்த மாதிரி டெக்னோல்ஜி சார்ஜ் பண்ணினால் நல்லது என அதன் மேலேயும் ஆராய்ச்சி பண்ணுவார்கள் என நினைக்கிறேன்.

# இணையத்தளத்தை பதிவுசெய்ய மின்னஞ்சல் தேவையா?




பொதுவாக இணையத்தளங்கள் அவற்றில் பதிவுசெய்வதற்கென உங்களின் மின்னஞ்சல் முகவரிய்யை தருமாறு கோருகின்றன. இவ்வாறான தளங்கள் அனைத்திற்கும் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவ்ரி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. 10minutemail.com அல்லது Mailinator.com போன்ற தற்காலிக மின்னஞ்சல் சேவைகளிலிருந்து மின்னஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்கி அதனை கொடுத்து வந்தால் உங்களின் தனிப்பட்ட முகவரியில் ஸ்பாம் மெயில்கள் குவிவதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். செய்தியில் தொழில்நுட்பம் பகுதியில் இன்று அறிமுகமாகும் இணையத்தளமும் தற்காலிக மின்னஞ்சல் சேவை தரும் இணையத்தளம். எனினும் இது ஏனைய தளங்களிலிருந்து எப்படி வேறுபடுகின்றது என்பதைப் பார்க்கலாம்.

http://maildrop.cc/ இத்தளத்தில் ஞாபகத்தில் இருக்கக்கூடிய ஒரு மின்னஞ்சல் முகவரியை உடனடியாக உருவாக்கிக்கொண்டால். அந்த முகவரியை எப்போது வேண்டுமானாலும் உபயோகித்துகொள்ளலாம். 10minute-mail.com or Mailinator.com போன்ற ஏனைய தளங்களைப்போல் ஒவ்வொரு தடவையும் மின்னஞ்சல் முகவரியை மாற்றிக் கொள்ளத் தேவையில்லை.
இணையத்தள முகவரி: http://maildrop.cc/

# 5G தொழில்நுட்பம் அறிமுகம்




**ஆ**சியாவில் மொபைல் துறையில் மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் ஒன்றாக தென்கொரியாவைக் குறிப்பிடலாம். தென்கொரிய நிறுவனமான செம்சுங் மின்னல் வேக 5ஜி கம்பியில்லா தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தது. இதன்மூலம் இரண்டு கிலோமீற்றர் தொலைவினுள், செக்கனுக்குள் 1 ஜிகா பைட் தரவுப் பரிமாற்ற வேகம் சாத்தியப்பட்டுள்ளதாகவும் 2020ஆம் ஆண்டளவில் இத்தொழில்நுட்பம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுமெனவும் செம்சுங் தெரிவித்திருந்தது.

இத்தொழில்நுட்பத்தின் மூலம் முப்பரிமாண திரைப்படங்கள், கேம்கள், அல்ட்ரா எச்.டிரியல் டைம் ஸ்ட்ரீமிங் ஆகியவற்றை எவ்வித தங்குதடையுமின்றி மேற்கொள்ள முடியுமென செம்சுங் சுட்டிக்காட்டியிருந்தது. இதேவேளை தென்கொரியாவின் மிகப்பெரிய தொலைத் தொடர்பாடல் சேவை வழங்குனரான எஸ்.கே டெலிகொம் உலகின் அதிவேக கம்பியில்லா வலையமைப்பினை அடுத்த வாரம் அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது. இதன்மூலம் வழமையான எல்.டி.இ. வலையமைப்பின் வேகத்தைவிட இருமடங்கு வேகத்தில் தரவுகளை தரவிறக்கம் செய்துகொள்ள முடியுமென எஸ்.கே டெலிகொம் தெரிவிக்கின்றது.

மேலும் இது 3ஆம் தலைமுறை வலையமைப்பினைவிட 10 மடங்கு அதிக வேகமானதென எல்.டி.இ சுட்டிக்காட்டியுள்ளது. இச்சேவையானது ஆரம்பத்தில் சியோல் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்குமெனவும் பின்னர் நாடுபூராகவும் விரிவுபடுத்தப்படுமெனவும் எஸ்.கே டெலிகொம் தெரிவிக்கின்றது. உலகில் வேகமான வலையமைப்பு உபயோகிக்கும் நாடாக தென்கொரியாவும் ஒன்றாகும். அங்கு பல ஏற்கனவே 4ஜி எல்.டி.இ. தொழில்நுட்பத்தை உபயோகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு நாளிதழ்
ரூ.10/= மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொறுமைக்கும், நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு!

தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

"ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவிசெய்ய வேண்டும்" என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோதகத்தை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்! என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும் கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே இரு என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன். பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.



இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி. தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த மோதகத்தைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக்கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு சென்றாள் சிறுமி. "ஐயா! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது. பெற்றுக்கொள்ளுங்கள்!" என்றாள் அவள்.

"மகளே! உன் பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிருசாம்பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்" என்றார் செல்வர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.

எனவே, நாமும் பொறுமையாகவும், நேர்மையாகவும் இருந்தால் பெரியோர்களின் பரிசில்களைப் பெறலாம்.

## வாரம் ஒரு திருக்குறள்



குறிப்பறிதல்

**முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்ற துணர்வார்ப் பெறின்.**

உள்ளக் குறிப்பை நோக்கி உற்றதை உணரவல்லவரைப் பெற்றால், (அவரிடம் எதையும் கூறாமல்) அவருடைய முகத்தை நோக்கி நின்றால் போதும்.

குறள்:708

# மாணவர்களுக்கு மகாத்மாவின் மடல்!



காந்தியவாதியும் கோடீஸ்வரருமான சேத் ஜம்னாலால் பஜாஜின் மூத்தபுதல்வர் கமலநயன், மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லுமுன், காந்தியடிகளிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றார். அன்று காந்தியடிகள் மௌனவிரதம் இருந்து கொண்டிருந்தார். எனவே ஒரு காகிதத்தில் தனது ஆசியைத் தெரிவித்தார். அந்த மடலில் காந்தியடிகள் எழுதியிருந்தது:

சிரஞ்சீவி கமல்,

1.குறைவாகப் பேசு. 2. எல்லோரும் சொல்வதைக் கேள் எது சரியோ அதைச் செய். 3. ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காதே. குறிப்பிட்ட காரியத்தை குறிப்பிட்ட காலத்தில் செய். 4. ஏழையைப் போல் வாழ், பணக்காரன் என்று பெருமைப்படாதே. 5. செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்துக் கொள். 6. கருத்தோடு படி. 7. தினந்தோறும் முறையாக உடற்பயிற்சி செய். 8. உணவு விஷயத்தில் ஜாக்கிரதையாக இரு. 9. நாட்குறிப்பு எழுது. 10. புத்திசாலித்தனத்தைவிட இதய பலமே கோடி மடங்கு பெரியது.

எனவே அதனை விருத்தி செய். அதற்கு கீதை, இராமாயணம் முதலியவற்றைப் படிப்பது இன்றியமையாதது. 11. தினந்தோறும் முறையாக இரண்டு முறை பிரார்த்தனை செய். 12. ஒவ்வொரு வாரமும் நீ செய்யும் காரியங்களைக் குறித்து எனக்குக் கடிதம் எழுது.

பாபுவின் ஆசீர்வாதம்.

மகாத்மாவின் கடிதம் கமலுக்கு மட்டுமல்ல, இதைப் படிக்கும் எல்லா மாணவ மாணவியருக்கும்தான்!

# ஐயோ என்று குழறலாமா?

ஒரு மரவெட்டி மரத்தின் கிளைமீது அமர்ந்துகொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம். உமாதேவியார் பார்த்துவிட்டு, இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்து சாக அல்லவா போகிறான் என்று சிவபெருமானிடம் சொன்னாராம். அதற்கு அவர் சொன்னாராம், சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய் காப்பாற்று, என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம்.

இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்களாம். அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் "ஐயோ" என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் செத்துப்போனான்.

உமாதேவியார் என்ன இறந்துபோனானே என்றாராம். அதற்கு சிவன் சொன்னாராம், அவன் எமனின் மனைவி "ஐயோ" வை அல்லவா கூப்பிட்டான். அதான், ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்றாராம். அதான் "ஐயோ" என்று ஏன் சொல்லக்கூடாது என்பதற்காக ஒரு சின்ன கதை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.07.2013

வர்ணம் தீட்டும் போட்டி இல.1000
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 998

மா.அம்ருதா, கோவில் வீதி, மாத்தறை

பரிசுக்குரியவர்: 998

பாராட்டுக்குரியவர்கள்

01. எம்.சௌமிதா, கைதடி மத்தி, கைதடி.
02. த.யாழினி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
03. தி.சஞ்சய், 3ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
04. மு.கோபிராம், பூவரசங்குளம், வவுனியா.
05. எம்.எஸ்.லஹீர், தர்ஹாநகர்.
07. பி.அபினாஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
08. கா.கனிஷ்ரன், தாழ்வுபாடு, மன்னார்.


## பூவின் 7 பருவங்கள்


- ★ அரும்பும் நிலையில் அரும்பு
- ★ மொக்கு வீடும் நிலை மொட்டு
- ★ முகிழ்க்கும் நிலை முகை
- ★ மலரும் நிலை மலர்
- ★ மலர்ந்த நிலை அலர்
- ★ வாடும் நிலை வீ
- ★ வதங்கும் நிலை செம்மல்



## புதிர் வட்டத்துள் சிக்குமா எண்கள்?

இங்குள்ள புகைப் படத்தில் ஒன்பது சிறிய வட்டங்கள் உள்ளது இதில் நீங்கள் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை நிரப்பவேண்டும். ஒரு எண்ணினை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். முடிவில் மூன்று மூன்று வட்டங்கள் உள்ள நான்கு நேர்கோடுகளின் கூட்டுத்தொகை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் முயற்சித்து பாருங்கள். இல்லையெனில் அருகிலுள்ள படத்தில் பதிலைப் பாருங்கள்.






## அறிவியல் துணுக்குகள்

1. பிளாஸ்டிக் உடைவதற்கு 500 ஆண்டுகள் ஆகின்றன.

2. உலகில் மிக கொடூரமான நில நடுக்கம் 1557இல் சீனாவில் நடந்தது. இதில் சுமார் 8 இலட்சம் மக்கள் இறந்தனர்.

3.சூரியனிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 8 நிமிடம் 30 வினாடிகள் எடுக்கின்றது.

4.சராசரியாக ஒரு மனிதன் ஐந்து முறை சிரிக்கின்றான்.

5.அல்பிரட் நோபல் (நோபல் பரிசுகள் இவர் பெயரால் கொடுக்கப்படுகின்றன) 1866ஆம் ஆண்டு டைனமைட்டை கண்டுபிடித்தார்.

6.எபோலா என்னும் வைரஸ் தாக்கினால், ஐந்தில் நான்கு மனிதர்கள் இறந்துவிடுவார்கள்.

7.உலகின் மிகச்சிறிய பறக்கும் பூச்சி, ஈயின் கண்ணைவிட சிறியது.

8.மிக வேகமாக விழும் மழைத்துளியின் வேகம் மணிக்கு 18 மைல்கள்.

9.பிறக்கும் 2000 குழந்தைகளில் ஒரு குழந்தை பற்களுடன் பிறக்கின்றன.

10. சில வகை சவுக்கு மரங்கள் ஒரு நாளைக்கு 3 அடி வளர்கின்றன.

11.சராசரியாக ஒரு மனிதன் 4850 வார்த்தைகளை 24 மணி நேரத்தில் பயன்படுத்துகின்றான்.

12.கரப்பான்பூச்சி தலையின்றி பத்து நாள் வரை உயிர் வாழும்.

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

165

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**வேறு** யாராவது சோதனை யிட்டால் மரியாதையாக இருக்காது என்பதால் தானே நேரடியாக அவர் உடலை தடவிச் சோதனையிட்டாள்.

தன் மனைவி தவிர வேறொரு பெண்ணின் கைகள் தன் உடலைத் தடவுவது சதுர்வேதிக்கு புதிய அனுபவம், வெட்கமாக இருந்தது.

ஒரு சிறிய ஒலிப்பதிவுக் கருவியும், கமராவும் அவரிடம் இருந்தன.



பூலான் சோதனையிட முன்பாகவே தன்னிடமிருந்த பிஸ்டலை அவளிடம் ஒப்படைத்திருந்தார்.

சோதனை முடிந்ததும் என்ன நினைத்தாளோ "இந்தாருங்கள் உங்கள் பிஸ்டல்!" என்று பூலான் நீட்டியபோது சதுர்வேதி லேசாக வியந்தார்.

"உங்களை நாங்கள் நம்புகின் றோம்!" என்றாள். "ஆனால் உங்கள் பொலிஸ் நாய்களை நம்பமாட்டோம்" சதுர்வேதி சங்கடப்பட்டார்.

"இதென்ன?" என்று கேட்டாள். அது ஒலிப்பதிவு கருவி. அதனை எப்படி இயக்குவது என்று சதுர் வேதி செய்து காண்பிக்க ஆர்வத் துடன் அதனைக் கவனித்தாள்.

"நீங்களும் நானும் நடத்தும் பேச்சுவார்த்தை இதில் பதிவாகும். இதனை முதலமைச்சர் அர்ஜுன் சிங்கிடம் போட்டுக் காண்பிப்பேன்" என்று விளக்கினார்.

அன்றைய பேச்சுவார்த்தை சுமு கமாகவே முடிந்தது. மதிய உணவை பூலான் குழுவினருடன் அமர்ந்து உட்கொண்டார் சதுர்வேதி.

மாலை 4 மணிக்கு சதுர்வேதி புறப்பட்டார். "மிகுதி விபரங்களை பின்னர் பேசிக்கொள்ளலாம். முத லில் பூலான் சரணடைவதை உண்மையாகவே அரசு விரும்புகிறதா என்பதை நாங்கள் அறியவேண்டும். அதற்குரிய ஏதாவது ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்!" என்று கூறியிருந்தான் மான்சிங்,

பூலானுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை பதிவு செய்யப்பட்டதைப் போட்டுக் காண் பித்தார் சதுர்வேதி.

தன் குரல் பதிவாகி ஒலிப்பதை குழந்தையின் குதூகலத்துடன் காது கொடுத்துக் கேட்டாள் பூலான்.

பயங்கரமான கொள்ளைராணி என்று பெயர் எடுத்த பூலானின் குழந்தைத்தன ஆர்வத்தைக் காண சதுர்வேதிக்கும் சந்தோசமாக இருந்தது.

"உங்களை ஒரு படம் எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார்.

மறுத்துவிட்டாள் பூலான்தேவி. நான் சரணடையும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், தேவையானளவு படம் பிடித்துக் கொள் ளுங்கள். இப்போது வேண்டாம் என்று விட்டாள்.

பூலானின் முன்னெச்சரிக்கை உணர்வு சதுர்வேதியைப் பிரமிக்கச் செய்தது.

"நான்கு நாட்களில் திரும்பி வருகி றேன். அதுவரை இங்கேயே இருங்கள்!" என்று சதுர்வேதி போகும்போது கூறி விட்டுப் போனார்.

பூலான் தலையாட்டினாள். சதுர் வேதி சென்றதும், உடனடியாக தன் ஆட்களை அழைத்துக் கொண்டு காட் டுக்குள் சென்றுவிட்டாள் பூலான்.

"சதுர்வேதியை நம்பலாம்; நம்புவ தற்கும் அளவு இருக்கவேண்டும். என்னதான் இருந்தாலும் பொலிஸ்காரன் பொலிஸ்காரன்தானே! என்று மான் சிங்கிடம் கூறினாள் பூலான்.


காட்டுப்பகுதியில் இருந்த கோவில் ஒன்றில் சாமியார் ஒருவர் இருந்தார். அவர் குறிசொன்னால் தப்பாது என்று நம்பிக்கை இருந்தது.

பூலானும் அந்தச் சாமியார் பற்றி கேள்விப்பட்டு சில தடவைகள் சந்தித் திருந்தாள். தான் சரண டைவது நல்லதா என்று ஆருடம் பார்க்க விரும் பிய பூலான் அவரிடம் சென்றாள்.

"இதுதான் மகளே தக்க தருணம் சரணடைந்து விடு. ஒளிமயமான எதிர்காலம் உனக்காக காத்திருக்கிறது!" என்று கூறிவிட்டார் சாமியார்.

அதன் பின்னர்தான் பூலானுக்கு சரணடையலாமா? கூடாதா என்று மன ஊசலாட்டம் விலக்கியது.

எனினும் சரணடைய முன்பாக பொலி ஸாரிடம் சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வால் மிகப் பாதுகாப்பாகவே நடமாடினார்கள்.



காட்டுக்குள் மூன்று நாட்கள் பயணம் செய்து எட்டாவா மாவட்டக் கிராமம் ஒன்றிற்கு சென்றனர்.

காட்டு வழியாக செல்லும்போதே, இடைக்கிடையே சாலைக்கு வந்து லொறிகளை வழிமறித்து கொள்ளை யடித்தனர்.

அதனால் பெரும் தொகையான பணம் கையில் இருந்தது.

தாம் சென்ற கிராம மக்களுக்கு மனம் குளிர வாரி வழங்கினாள் பூலான்.

பூலான் குழுவினர் அந்தக் கிராமத்தில் இருப்பதை எட்டாவா பொலிஸ் அதிகாரி அறிந்துகொண்டார்.

அவர் பூலானைப் பிடிப்பதற்கு பொலிஸ் படையை அனுப்புவதற்கு பதிலாக ஒரு தூதரை அனுப்பிவைத் தார்.

தூதர் சொன்ன செய்தி பூலா னைக் குழப்பியது.

எட்டாவா நகரின் பொலிஸ் பொறுப்பதிகாரி அனுப்பிய ஆள் பல சோதனைகளைக் கடந்தே பூலானை சந்திக்க வேண்டி இருந் தது.

மான்சிங் அவனை முதலில் நம்பவில்லை. துருவித் துருவி கேள்வி கள் தொடுத்தான்.

இறுதியில் அவனது உடம் பெல்லாம் தடவிப் பார்த்துவிட்டு பூலானிடம் அழைத்து வந்தான்.

"சதுர்வேதியை நம்பவேண்டாம் பதவி உயர்வுக்காகவும், அரசாங்கத் திடம் நல்ல பெயர் எடுப்பதற்கா கவும் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிடும் ஆள்தான் சதுர்வேதி. என்னை நீங்கள் நம்ப லாம். என் மூலமாக சரணடைந்தால், உங்களுக்கு ஒரு தொல்லையும் வராமல் பார்த்துக்கொள்வேன்! என்று கூறுமாறு எட்டாவா பொலிஸ் பொறுப்பதிகாரி அந்த ஆளை அனுப்பியிருந்தார்.

பூலான் அந்த ஆளை வெறித்துப் பார்த்தாள்.

என்னடா நினைத்து கொண்டிருக் கின்றான் உங்கள் அதிகாரி? பயந்து நடுங்கி சரணடைய அலை கிறேன் என்றா நினைத்துவிட்டான் கழுதை. அவன் உண்மையான ஆண்மகனாக இருந்தால் நேராக வந்திருக்க வேண்டியதுதானே!

கழுதையில் ஏற்றி திருப்பி அனுப்பி வைப்பாள் இந்த பூலான். போடா அவன் ஆண்மகன் என்று முதலில் நிரூபிக்கச் சொல்லு!"

பூலானின் கோபத்தை பார்த்ததும் எதிரே நின்றவனுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுத்து விட்டது. ஆளை விட்டால் போதும் என்றிருந்தது.

"போடா!" என்றான் மான்சிங். பூலானை நோக்கி கைகூப்பிவிட்டு ஏறக்குறைய ஓட்டம் பிடித்தான்.

எட்டாவாவில் இருந்து அன்றே திரும்பிவிட்டனர் பூலான் குழுவினர்.

திரும்பிவரும்போது இடையே பொலிஸ் கோஷ்டி ஒன்றுடன் மோத வேண்டி ஏற்பட்டது.

பொலிஸாருக்கு அவர்கள் பூலான் கோஷ்டியினர் என்று தெரியாது. வேறு யாரோ கொள்ளையர் என்று நினைத்து துரத்தினார்கள்.

பூலான் குழுவினரும் திருப்பிச் சுட்டனர். மான் சிங்கின் குறி தவ- றாத சூட்டில் இரண்டு பொலிஸார் காயப்பட்டனர். ஏனையோர் பயந்து பின்வாங்கினார்கள்.

மறுபடியும் பரசுராமின் பண்ணைக்கே திரும்பி வந்தனர். பரசுராம் அவர்களை மகிழ்ச்சி யுடன் வரவேற்றார்.

**திருப்பங்கள் தொடரும்...**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**
முரசு வாசகர்களின் உரிமையான
வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம்
(முரசு 1021 - கு.எ.போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில்
வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை
ரூபா 1000/= ஆக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான
செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 529

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | ■ | 17 | 18 |
| ■ | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி
23.07.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 529
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு,
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 527- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா (1) | து (2) | ளை (3) | ■ | ■ | லி (6) |
| ன (7) | ■ | ர (9) | ■ | ன் (11) | மா (12) |
| ச (13) | க் (14) | க (15) | ர (16) | வா (17) | க (18) |
| வா (19) | கு (20) | ■ | ண் (22) | ■ | ■ |
| வி (25) | தா (26) | த் (27) | சு (28) | ரி (29) | ப (30) |
| ■ | ■ | ■ | டி (34) | நா (35) | ■ |

**இடமிருந்து வலம்**

01. பத்தொன்பது
07. விண் மீன் அல்லது ஒரு பறவையினம் (திரும்பியுள்ளது)
10. சிங்கம் அல்லது ஒரு சிற்றுண்டி வகை. (திரும்பியுள்ளது)
13. அறிஞன் அல்லது இசையுடன் சேர்ந்து வரவேண்டியது.
17. விவாகமான நிலை. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
20. இலங்கை பத்திரிகை ஆசிரிய சங்கத்தின் புதிய தலைவர். (திரும்பியுள்ளது)
27. சக்தி அல்லது பலம்
31. உலகின் ஆழமான. அழகிய. நன்னீர்ஏரி இது.

**மேலிருந்து கீழ்**

01. சமானம்.
02. ஓயாத நடை அல்லது காற்று. (குழம்பியுள்ளது)
04. அரசுக்கு நாம் இது செலுத்துவோம்
05. அபயம் அல்லது தஞ்சம். (குழம்பியுள்ளது)
12. வட இந்திய உத்தர காண்டின். இந்தப் பகுதியில் பெரிய அனர்த்தம் ஏற்பட்டது.
21. ஒரு பறை வகை அல்லது ஊதுகொம்பு. (குழம்பியுள்ளது)
22. சக்கரம் (குழம்பியுள்ளது)
25. சில்லறை அல்லது ஒரு கோபுரத்தையும் குறிக்கும். (திரும்பியுள்ளது)


குறுக்கெழுத்துப் போட்டி இல. 527 இற்கான
சரியான விடைகளை அனுப்பி
1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**ம.திருக்குமரன், அட்டன் றோட், கினிகத்தேன.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. எம்.ஆர்.சலீம், மஹ்ருப் நகர், கிண்ணியா -03.
02. து.சனாமிகா, வன்னியார் வீதி, நீந்தவூர் -02.
03. மு.தர்மேந்திரன், ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
05. தா.பிரியந்தி, கொட்டஹேன, கொழும்பு -13.
06. தீ.சாந்தினி, புது வீதி, உதளம், மன்னார்.
07. ஆர்.மரியகொறற்றி, 154ம் கட்டை, பொன்நகர், கிளிநொச்சி.
08. சா.பிரிந்துஜன், வாகரை, மட்டக்களப்பு.
09. மா.சைந்தவி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
10. பொ.அம்பிகா, வீரகாளியம்மன் கோயிலடி, நல்லூர்.




## நந்தினியின் 'கொலை நோக்கு பார்வை'

திருதிரு துறுதுறு படத்தின் இயக்குனர் நந்தினி இயக்கும் புதிய படம் கொலை நோக்கு பார்வை. இப்படத்தில் மிர்ச்சி சுசியின் கணவர் கார்த்திக்குமார், கன்னட படநாயகி ராதிகா ஆப்தே இணைந்து நடித்துள்ளார். இசையமைப்பாளர் அஸ்வத்தின் இசையில், மதன் கார்க்கி பாடல்களை எழுதியுள்ளார். இப்படத்தில் பேய் பாடல் ஒன்றை பாடியுள்ளாராம் ஆண்ட்ரியா. இப்பாடல் நன்றாக வரவேண்டும் என்பதற்காக அதிகமாகவே பங்காற்றியுள்ளாராம். படத்தின் சூழலுக்கு ஏற்றவாறு பாடல் அமைந்துள்ளது. நாங்கள் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் படத்தின் இயக்குனர் நந்தினி.

## விக்ரமிற்கு ஷங்கர் போட்ட கோடு

கொலிவூட்டில் நண்பன் படத்தை தொடர்ந்து ஷங்கர் இயக்கும் 'ஐ' திரைப்படத்தில் நாயகனாக விக்ரம் நடிக்கிறார்.

இப்படத்தில் விக்ரமிற்கு ஜோடியாக எமி ஜாக்ஷன் நடிக்கிறார். இவர்களுடன் கொமடிக்கு சந்தானம், அக்ஷனுக்கு சுரேஷ் கோபி என்று மேலும் பலர் நடிக்கின்றனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கும் இப்படத்தைக் குறித்து இதுவரை வெளிவராத முக்கிய தகவல் ஒன்று வெளிவந்துள்ளது. அதாவது இப்படத்தில் விக்ரம் 85 வயது முதியவர் வேடம் ஏற்று நடிக்க இருக்கிறாராம். அதுவும் 85 வயது முதியவர் வேடத்திற்கு உடம்பு மட்டும் வெயிட் ஏறி ஜிம் பாய் மாதிரி இருக்கவேண்டும் என்று கூறிவிட்டாராம் ஷங்கர். இதற்காக ஜிம்மே கதியென்று கிடக்கும் விக்ரம் ஜிம்மைவிட்டால் வீடு, வீட்டைவிட்டால் ஜிம் என்று கடந்த 3 மாதங்களாக தனது கெட்டப்பை படு சீக்ரெட்டாக வைத்துவருகிறார்.

அத்துடன் விக்ரமை பொது நிகழ்ச்சிகள் எதிலும் தலைகாட்டக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாராம் ஷங்கர். இதனால்தான் விக்ரம் கடந்த 2 மாதங்களாக எந்தப் பொது நிகழ்ச்சி களிலும் தலை காட்டுவதில்லை என்று கூறப்படுகிறது.



## கொலிவூட்டில் கலக்கும் விஜய்

கொலிவூட்டில் இளையதளபதி விஜய் இதுவரை நடித்த படங்களில், அதிரடி யான விளம்பரங்களுடன் வெளியாக இருக்கிறது தலைவா.

அதேபோல், தமிழில் வெளியாகிற அதே நாளில் தெலுங்கிலும் தலைவா படத்தை வெளியிட உள்ளனர்.

ஏற்கனவே விஜய் நடித்த நண்பன், துப்பாக்கி ஆகிய படங்கள் அங்கு பெரிய அளவில் வசூல் சாதனை புரிந்ததால், தெலுங்கு ரைட்ஸே பெரிய தொகைக்கு விற்பனை செய்துள்ளார்களாம்.

அதேபோல் மலையாளத்திலும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்நிலையில், தலைவா படத்தை இந்தியிலும் அடுத்து ரீமேக் செய்ய அப்படத்தின் தயாரிப்பாளர் சந்திரபிரகாஷ் ஜெயின் திட்டமிட்டுள்ளா ராம். தற்போது தனுஷ் ராஞ்சனாவில் இந்தியில் கால்பதித்ததைத் தொடர்ந்து அடுத்து ஜக்போட் என்ற படம் மூலம் பரத்தும் பொலிவூட்டில் என்ட்ரி கொடுக்கி றார். இதைய டுத்து விஜய்யும் தலைவா ரீமேக் மூலம் இந்தியில் என்ட்ரி கொடுப்பார் என்று கூறப்படு கிறது. ஆனால், தலைவா படம் ரிலீசான பின்புதான் இந்தி பதிப்பில் யார் யார் நடிக்கிறார்கள் என்கிற விபரம் முழுமையாக வெளியிடப்படுமாம்.



செட் போ
வெளியாகு
அதிர்ந்து
வரும் என்


## தனுஷின் பட பாகிஸ்தானி

தனுஷ்- சோனம் கபூர் ஆகியோரின் ராய் இந்தியில் தயாரித்துள்ள படம் ரா

இப்படம் அண்மையில் வெளியாகி ம நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலை பாகிஸ்தான் சினிமா தணிக்கை குழு த இதுகுறித்து தணிக்கை குழு அனுப்பிய ராஞ்சனா படத்தில் முஸ்லிம் பெண் ஒரு காதலிப்பது போன்று சித்தரிக்கப்பட்டுள்ள கொள்ள முடியாது, எனவே இப்படத்தை தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக

இத்தகவலை பாகிஸ்தானில் வெளியிட ஐ.எம்.ஜி.சி. குளோபல் என்டர்டெயின்மென்ட் தலைமை நிர்வாகி அம்ஜத் ரீத் தெரிவித்து






## தொடர்கிறது பூலோகம்

ஜெயம் ரவி - த்ரிஷாவின் நடிப்பில் வேகவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது பூலோகம். வடசென்னையில் பிரபலமாக திகழ்ந்த குத்துச் சண்டை வீரன் ஒருவனின் கதை தான் இந்தப் படம். இதற்காக பிரத்தியேக பயிற்சிகளையும் எடுத்துக்கொண்டார் ஜெயம் ரவி. பாதி படம் முடிவடைந்த நிலையில் பணப் பிரச்சினை ஏற்பட்டதால் படப்பிடிப்பு நிறுத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து ஜெயம் ரவியும், த்ரிஷா அடுத்த படங்களில் நடிக்க சென்றனர். ஆனால் மீண்டும் பணம் ரெடியானபோது, ரவி- த்ரிஷாவின் கால்ஷீட் கிடைக்கவில்லை. இந்நிலையில் சில மாதங்கள் அவர்களுக்காக காத்திருந்து தற்போது மீண்டும் படப்பிடிப்பை தொடங்கி உள்ளனர்.




## காதல் வலையில் காஜல்!

முன்னணி நடிகையாக உலா வந்து கொண்டிருக்கிறார் காஜல் அகர்வால். முன்னணி ஹீரோக்களுக்கு கூட கால்ஷீட் கொடுக்க முடியாத அளவுக்கு பிஸியாகி விட்டார். குறிப்பாக தெலுங்கில் பவன் கல்யாண் படத்தையும், தமிழில் கமல்ஹாசன் படத்தையும் நிராகரித்து விட்டார். தற்போது தமிழில் கார்த்தியுடன் ஆல் இன் ஆல் அழகுராஜா, விஜய்யுடன் ஜில்லா படங்களுடன் நடிப்புக்கு முழுக்குப் போடும் முடிவில் உள்ளாராம் காஜல். இதற்குக் காரணம் ஆந்திராவின் பெரும் பணக்காரரான ஒரு தயாரிப்பாளர் காஜலின் காதலில் சிக்கிக் கிடப்பதுதானாம்.

## சூர்யா ஆரம்பிக்கும் 2D Entertainment தயாரிப்பு நிறுவனம்

தமிழ் திரையுலகின் பிரம்மாண்ட தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்று ஞானவேல்ராஜாவின் ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம்.

இவர் சூர்யா, கார்த்தியின் உறவுக்காரர் ஆவார். சூர்யாவின் கால்ஷீட் திகதிகள் கேட்டு வரும் முன்னணி இயக்குனர்களை, அப்படியே கார்த்தியின் கால்ஷீட் திகதிகள் கொடுத்து படத்தை தயாரித்துவிடுகிறதாம் ஸ்ரூடியோ க்ரீன்.

அதாவது முதலில் வெங்கட் பிரபுவும், ராஜேஷும் சூர்யாவின் திகதிகள் கேட்டுத்தான் சென்றார்களாம்.

ஆனால் இருவருமே தற்போது கார்த்தி நடிக்கும் படத்தை இயக்கிவருகின்றனர். அத்துடன் இயக்குனர் ஹரி இயக்கும் அடுத்த படத்திற்கும் கார்த்திதான் நாயகனாம். இதற்கிடையே நடிகர் சூர்யாவும் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை தொடங்க இருக்கிறார். இந்நிறுவனத்திற்கு D - Diya, D - Dev எனத் தனது இரண்டு குழந்தைகளின் முதல் எழுத்தையும் வைத்து 2D Entertainment என்று பெயரிட்டு இருக்கிறார்.

இதன்மூலம் சிறு பட்ஜெட் படங்களை தயாரிக்கவும் முடிவுசெய் துள்ளாராம்.



## ஷாருக்கானுடன் குத்தாட்டம் போடும் ப்ரியாமணி

தமிழ் திரையுலகில் பருத்தி வீரன் திரைப்படத்தின் மூலம் ரசிகர்களுக்கு கிராமத்து விருந்தானவர் ப்ரியாமணி. பருத்திவீரனை தொடர்ந்து தமிழில் பல மொடர்னான கதாபாத்திரத்திலும் ஏற்று நடித்துள்ளார். அதன் பின்பு மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்ற ஒதுங்கி கொண்ட இவருக்கு தற்போது வாய்ப்புகள் எதுவும் இல்லை. சமீபத்தில் சென்னை எக்ஸ்பிரஸ் திரைப்படத்தில் நடிகர் ஷாருக்கானுடன் குத்தாட்டம் போட்டிருக்கின்றார். இப்பாடலுக்கு பிரமாண்டமான
...ட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை எக்ஸ்பிரஸ் படம் பொலிவூட்டில்
...ம்போது அங்கு படம்பார்க்கும் ஒவ்வொரு ரசிகர்களும் எனது ஆட்டத்தைப் பார்த்து
...பாவார்கள். அதன்பின்பு கண்டிப்பாக இந்தியில் இருந்து என்னைத் தேடி படவாய்ப்புகள்
...று நம்பிக்கையுடன் கூறுகின்றார் ப்ரியாமணி.

## ...த்துக்கு ...ல் தடை

... நடிப்பில், ஆனந்த்
...ஞ்சனா.
...க்கள் மத்தியில்
...லையில் இப்படத்திற்கு
...டை விதித்துள்ளது.
...கடிதத்தில்,
...வர், இந்து பையனை
...து. இதனை ஏற்றுக்
... வெளியிட
...கப்பட்டுள்ளது.
... உரிமை பெற்ற
... நிறுவனத்தின்
...ள்ளார்.

## கதாநாயகிக்கு கிடைத்த ஏமாற்றம்

தில்லு முல்லு படம் வெற்றி அடைந்தால், கொலிவூட்டில் முகாமிட திட்டமிட்டிருந்தார் இஷா தல்வார்.

அவர் நினைத்தபடியே தில்லு முல்லு படம் வெற்றி அடைந்தது. எனவே கொலிவூட்டில் வெற்றிக்கொடி நாட்டவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டாராம்.

இதற்கிடையே தில்லு முல்லு டீம் இணைந்து தற்போது புதிய படத்தை எடுக்க முடிவுசெய்துள்ளார்கள்.

இதனை அறிந்த இஷா தல்வாருக்கு அளவில்லாத மகிழ்ச்சி, தானும் அப்படத்தில் இடம்பிடித்துவிடலாம் என நினைத்துக் கொண்டிருந்தாராம். ஆனால் ஹீரோயின் தவிர அனைவருமே இருக்கின்றனர் என அறிந்த இஷா, மிகுந்த சோகத்தில் இருக்கிறாராம்.

அத்துடன் தன்னை மட்டும் நீக்கியதற்கான காரணம் தெரியாமல் குழம்பிப் போயுள்ளாராம்.

## ஈழத்துக் கவிஞர்கள்

### மகா வித்துவான் பிரம்மஶ்ரீ
# ந.வீரமணி ஐயர்



வீரமணி ஐயர் ஒக்டோபர் (15, 1931 - ஒக்டோபர் 8, 2003), ஈழத்துக் கவிஞரும் கர்நாடக இசைக்கலைஞரும் ஆவார். பாபநாசம் சிவன் அவர்களின் மாணவர். புகழ்பெற்ற 'கற்பகவல்லி நின் பொற்பதம்' என்ற பாடலை இயற்றியவர்.

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த ம.த.நடராஜ ஐயர், சுந்தராம்பாள் தம்பதியினருக்கு 1931 ஒக்டோபர் 15 இல் இரண்டாவது புதல்வனாகப் பிறந்த வீரமணி ஐயர், தனது சிறுவயதுக் கல்வியை இணுவில் சைவப் பிரகாச வித்தியாலயத்திலும், (தற்போதைய இணுவில் இந்துக் கல்லூரி) உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். அங்கு படிக்கும்போது சிறந்த மாணவனுக்கான விருதைப் பெற்றவர்.

கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு மேல் படிப்புக்காக இந்தியா சென்ற இடத்தில், இசை, நடனம், நாடகம் என்பனவற்றால் கவரப்பட்டு, திருமதி ருக்மணிதேவி அருண்டேல் (பரதநாட்டியம்), எம். டி. ராமநாதன் (இசை), பாபநாசம் சிவன் (சாகித்திய குரு) ஆகியோரிடம் பயின்றார்.

**பாடல்கள் இயற்றல்**

தாய்நாடு திரும்பி, தான் படித்த மானிப்பாய் இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராக பணிபுரிந்தார். சில ஆண்டுகளின் பின்னர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரை யாளராக இணைந்து 33 ஆண்டுகள் பணியாற்றி, ஏராளமான இசை, நாட்டிய ஆசிரியர்களை உருவாக்கினார். ஏராளமான சாகித்தியங்களையும், நாட்டிய நாடகங்களையும், ஆலயங்கள் மீதான பாடல்களையும் இயற்றினார்.

"கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்..." என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இராகத்தை பல்லவியில் கொண்டமைந்து நான்கு இராகங்கள் முத்திரை அமைக்கப் பெற்ற இவரது இராகமாலிகை கீர்த்தனை தென்னிந்தியப் பாடகர் டி. எம். சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பெற்று உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

**இறுதி நாட்கள்**

கர்நாடக இசை, நடனம் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா தகைமைகளைக் கொண்டிருந்த வீரமணிஐயர் அவர்கள் தனது அரச பணியின் நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1996 ஆம் ஆண்டு அவரது மனைவியார் ருக்மணி அம்மையார் காலமானார். என். வீரமணி ஐயர் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காலமானார்.

**விருதுகளும் பட்டங்களும்**

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவருக்கு நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில் 'சாகித்திய சாகரம்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1982 ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை பொன்விழாவில் கவிமாமணி என்ற சிறப்பு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இயல் இசையில் இவருக்கு இருந்த மேன்மையால் இயலிசை வாரிதி, மகா வித்துவான் என்ற சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

1999 ஒக்டோபர் 6 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ முதுமாணி (எம்.ஏ.) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

**இயற்றிய பாடல்கள்**

நல்லூர் முருகன் பாடல்கள்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் பாடல்கள்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மீதான பாடல்கள்

கோண்டாவில் சிவகாமியம்மன் பாடல்கள் - பாடியவர்: சீர்காழி எஸ்.சிவசிதம்பரம்

காரைநகர் திக்கரை முருகன் பாடல்கள்.

சுட்டிபுரம் கண்ணகை அம்மன் பாடல்கள் - பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்.

**இயற்றிய சாகித்தியங்கள்**

கற்பகவல்லி நின் பொற்பதங்கள் (ராகமாலிகை)- பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்

சின்ன வயதினிலே (சாகித்யம்) - பாடியவர்: சுதா ரகுநாதன், சரஸ்வதி வீணை (ராகமாலிகை) - பாடியவர்: நித்யஶ்ரீ மகாதேவன், தசாவதாரம் ( ராகமாலிகை), என் முகம் பாராயோ சண்முகனே (விருத்தம்)- பாடியவர்: மகாராஜபுரம் சந்தானம், ஏனடா முருகா, என்னடி பேச்சு சகியே, கஜமுகா, குஞ்சரன் சோதரா, குழல் ஊதி விளையாடி, மட்டுநகர், நவரச நாயகி, சாரங்கன் மருகனே, வண்ண வண்ண, கற்பக விநாயகனே, தாமரை இதழிலே நாதம் கேட்குதடி, நயினையம்பதி.

**வெளி இணைப்புக்கள்**

கிடுகுவேலி - பிரம்மஸ்ஶ்ரீ ந. வீரமணி ஐயர்.

கதகளி - வீரமணி ஐயரின் கட்டுரை.

20/21ம் நூற்றாண்டின் 100 தமிழர்கள் - யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயர்.

கற்பகவல்லியும் கவிமாமணி வீரமணி ஐயரும் - மலைநாடான் பதிவு.

கொஞ்சு தமிழில் மிஞ்சி விளையாடிய சந்தக் கவிஞர் கவிமாமணி பிரம்மஶ்ரீ ம.த.ந. வீரமணிஐயர்.

***

## தேன் கிண்ணம்



### திருத்திய தீர்ப்பு

அப்ரார் ஏ.அஸீஸ்,

சூரியன் உதித்த போது
மலரும் தாமரையாய்
சந்திரன் உதித்தபோது
கரையும் சந்திரக்கல்லாய்
காதலன் வரவுக்காய்
காத்திருந்த காரிகையே
தந்தை நிந்தன் காதலுக்கு
தந்த தடை யுத்தரவு
மடை திறந்த வெள்ளமாய்
மனமதை ஆட்கொள்ள
கடமையே கண் என்றாக
மடமையே அது என்றானது
விடை காணா கேள்வியாய்
தடையிட்டே தவிக்கும் கன்னியே!
விரக்தியின் விளிம்பதில்
விக்கித்து நிற்கும் பேதையே
உரிமைகள் ஊஞ்சலாட
உறவுகள் ஊமையாகலாமா?
மதிக்க வேண்டியவரை மிதித்து
மணவறை பந்தம் புகலாமா?
புரிந்துணர்வதை விட்டுக்கொடுத்து
புத்துணர்வு பெற்றவளாய் வாழம்மா?
தீர்ப்பதனை திருத்தியே நீ
திறம்பட வாழ
திருத்தமாய் முடிவு எடம்மா!

### (சீ) தனம்

விலைபோகும்
சீதனச் சந்தையில்
விலை போகா
மங்கையிவளின்
நாட் குறிப்பேட்டில்
மணநாளும்
மாங்கல்யமும்
கடந்து செல்கின்றது...

சீர்வரிசையின்
இடை வெளிகளை
தோல்வியும்
தோஷங்களும்
இயல்பாக்கி கொண்டதால்
முகூர்த்தமும்
மூன்று முடிச்சும்
முதிர்கன்னியின்
வாழ்வை...
கன்னி கழித்துப்போகின்றது.

வரன் வருவார்
வகை தொகையின்றி
தனங் கேட்டு
பேரம் பேசுவார்
தர மறுத்தால்
வந்த வேலை
முடிந்ததென்று
வழி மாறிச் செல்வார்.

அவளும்...
அவளது
அபிலாஷைகளும்
இப்படியே
அடுத்த
பெண் பார்க்கும்
படலத்திற்குள்...?



க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

### விலகிப் போகாதே!

கைப்பிடி இதயத்தில்
கோடி கோடி
விதை காதலாய் விதைத்திட்டாய்...
பார்வை சொற்பமும்
வருகை கொஞ்சமும்
கிடைத்தால் வளம் பெறுமல்லவா...
என் இதயம்

உந்தன் பக்கம் வருகின்றப் போ
வெறுப்புப் பார்வை பார்க்கிறாய்
நொருங்கிப் போகிறேன்...

ஓர் வார்த்தையும் பேசாது
கூர்வள் தீட்டி
குத்துகிறாய் விழிகளால்...

மார்போடு சாய்ந்து
மழலையாக ஆசை
அதற்கேனும் இடமில்லை
விஷப்பால் ஊற்றுகிறாய்

எப்படி என் காதலை வளர்ப்பது
நெருங்கி வருவாயோ
நெடு வான் பறக்கணும்.

என்.எம்.கலீம், பொத்துவில்-20



### உன்னை மறவோம் தாயே!

எங்கள் உயிர் விளக்கே...!
பொங்கி வந்த உதயமே!
அன்னை நீ எங்கள் இதயமே!

அன்னையே நீ எங்கள் அமுதமே!
தங்கமென இப்பொழுதும்
மின்னுகின்ற அற்புத உறவே...!
எங்கு சென்றுவிட்டாயோ!
ஏக்கம் எம்மை வாட்டுதம்மா...!!

உன்னில் நாங்கள் கண்டதெல்லாம்
பாசத்தின் வைரமே
அந்த வைரக் குவியலில் – நீ
என்றும் ஓர் சிகரமே!

ஆணிவேரே நீ ஆட்டம் கண்டுவிட்டாய்
அதனால் நாம் ஆட்டம் கண்டோமே!
ஆருயிரே அன்னையே!

மண்ணில் உள்ள நாட்கள் வரை
உன்னை எங்கள் மனம் மறவாதம்மா...
விண்ணிலுள்ள ஆண்டவனே!
உன்னிடம் வரும் அம்மா அவர்க்கு
ஆத்ம சாந்தி தர வேண்டும்...!

கே.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.

# உடலுக்கு வேண்டாத பச்சை குத்தல்!



**தற்போதைய** கலாசாரத்தில் டாட்டூஸ் வரைவது(பச்சை குத்துவது) ஒரு நாகரிகமாகிவிட்டது. இதனால் என்ன பாதிப்புவரும் என்று யாரும் உணருவதில்லை. 18 முதல் 30 வயது வரை உள்ள ஆண்களும், பெண்களும் கண்மூடித்தனமாக அழகை மேலும் கூட்டுவதற்காக உடலில் ஆங்காங்கே வண்ண வண்ணமாக டாட்டூஸ் எனப் படும் பச்சை குத்திக் கொள்கின்றனர்.

சமீப கலமாக பச்சை குத்திக் கொள் வதினால் அதிக பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறதென்று தோல்நோய் மருத்துவர் கூறுகின்றார். பல்வேறு வண்ணங்களில் பச்சை குத்தும்போது இவற்றில் சேர்க் கப்படும் இராசாயன பொருட்களால் பக்ரீரியாக்கள் அதிகம் தொற்றி, தோல் அரித்து, வீக்கம் ஏற்படுத்துகிறது. ஒரு முறை பச்சை குத்தினால் அதை நீக்க அறுவை சிகிச்சைதான் செய்வேண்டும்

இதுமட்டுமல்லாமல் தோல் வியாதி, ஹெபட்டிஸ் சி, அரிப்பு, போன்ற நோய்கள் தாக்கும் அபாயம் உள்ள தென்றும், பக்ரீரியாக்கள் சேர்ந்து ஒவ்வாமையை ஏற்படுத்தி சிலருக்கு தோல் உரியவும் செய்கின்றது என கூறுகின்றனர் மருத்துவர்கள். எனவே டாட்டூஸ் பிரியர்களே உபயோகிப்பதற்கு முன் ஒரு முறைக்கு பலமுறை யோசியுங்கள் என தோல் நோய் மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# மா மரத்தில் மறைந்திருக்கும் மருத்துவம்



**மாம்பழத்தை** சுவைப்பதில் நாங்கள் யாரும் பின்னிற்பதில்லை. ஆனால் மாமரத்தி னுடைய ஏனைய பகுதிகளில் மறைந்திருக் கும் மருத்துவக் குணங்கள் எமக்கு தெரிவ தில்லை.

மாம்பூவை நிழலில் உலர்த்தி எடுத்து பொடித்து நீர்விட்டு கொதிக்க வைத்து குடிநீராக அருந்தினால், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு போன்றவை நீங்கும். அதேபோன்று, மாம்பட்டையைக் குடிநீர் செய்து அருந்தினால் சருமம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏதும் அணுகாது. மா வேப்பட்டை வயிற்றுப்புண், குருதிக்கழிச்சல் போன்ற வற்றை நீக்கும்.

பித்த வெடிப்பினால் கால் வலி ஏற்படுவ தோடு பாதங்கள் பார்ப்பதற்கே அருவருப்பு காணப்படும். கால் பித்தவெடிப்பு உள்ள பகுதியில் மாம்பிசினைத் தடவிவந்தால் பித்த வெடிப்பு குணமாகும். தேமல், படை உள்ளவர்கள் மாம்பிசினை மாம்பழச்சாறுடன் கலந்துபூசினால் தேமல், படை நீங்கும்.

அதேபோன்று, மாங்காயை சமைத்துச் சாப்பிடுவது நல்லது. அல்லது ஊறுகாய் செய்து சாப்பிடலாம். மாங்காய் அதிகம் சாப்பிட்டால், பசியின்மை, புண் ஆறாமை, பல் கூச்சம், சிரங்கு போன்றவை உண்டாகும்.

மாம்பழம் அதிக விற்றமின் சத்துக்கள் நிறைந்தது. இதனை கிடைக்கும் காலங்களில் அளவோடு சாப்பிட்டு வந் தால் சிறந்த பயனை அடையலாம். கோடைகாலத்தில் அதிகம் விளையும் மாங்கனி மிகுந்த சுவை கொண்டது. மலச்சிக்கலைப் போக்கும், ஜீரண சக்தியை அதிகரிக்கும்; வயிற்றுப்புண், வாய்ப் புண்ணை ஆற்றும். மூலநோயின் பாதிப் பைக் குறைக்கும்.

மாங்கொட்டை பருப்பை எடுத்து காயவைத்து பொடித்து கஷாயம் செய்து மாதவிலக்குக் காலத்தில் அருந்தினால், அதிக உதிரப்போக்கு கட்டுப்படும். வெள்ளைபடுதல் குணமாகும். வயிற்றுப் புழுக்கள் நீங்கி, வயிற்றுப்புண் ஆறும். வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு குணமாகும். மாம்பருப்பை எடுத்து பொன்னிறமாக வறுத்துத் தூள் செய்து 1 கரண்டி அளவு எடுத்து தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் சரும எரிச்சல் நீங்கும்.

மாம்பட்டையைக் குடிநீர் செய்து அருந்தினால் சருமம் சம்பந்தப்பட்ட நோய்கள் எதுவும் அணுகாது. மா வேர்பட்டை வயிற்றுப்புண், குருதிக் கழிச்சல் போன்றவற்றை நீக்கும்.



# மகரந்தத்தின் மகத்துவம்

தேனீயின் மகரந்தமானது உலகம் முழுவதும் மருத்துவத்திற்கு பயன்படுத்தப் படும் ஒரு சிறந்த மருந்தாகும். தேனீயின் மகரந்தமானது பெரிய தேனீக் களின் மூலம் உருவாக்கப்பட்டு இளம் தேனீக்களை வளர்க்க மகரந்தத்தை உணவாக வழங்குகிறது. இயற்கையின் மிக முக்கியமான ஊட்டமளிக்கும் உணவாக கருதப்படுகிறது. இந்த மகரந்த உணவானது மனிதனுக்கு தேவைப் படும் அனைத்து ஊட்டச்சத்துகளையும் கொண்டுள்ளது. தேனீ சேகரிக்கும் மகரந்தத்தில் புரதம் சுமார் 40வீதம், இலவச அமினோ அமிலங்கள், விற்றமின், போலிக் அமிலம் போன்றவை நிறைந்துள்ளது.

தேனீயின் மகரந்தம் முழுமையான இயற்கை உணவு, இதில் முழுமையாகவே விலங்கு சம்பந்தப்பட்ட சிறு பொருட்களைக்கூட கொண்டிருக்காது. மகரந் தமானது விலங்குகளின் மூல ஆதாரங்களைவிட புரதங்களை அதிகம் கொண் டுள்ளது. அதாவது இதில் மாட்டிறைச்சி, முட்டை, சீஸ் போன்றவற்றை விட அதிக அமினோ அமிலங்களை கொண்டுள்ளது.

இதன் புரதத்தில் பாதிக்கு மேலாக அமினோ அமிலங்களை கொண்டுள்ளதால் அப்படியே பயன்படுத்தலாம். ஒரு தேநீர் கரண்டி மகரந்தத்தை தயாரிக்க ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்தை செலவிடுகிறது. ஒரு தேநீர் கரண்டி மகரந்தத்தில் 2.5 பில்லியன் தானியங்கள் உள்ளது.

தேனீயின் மகரந்தம் அதிக ஊட்டச்சத்துகளை கொண்டுள்ளதால் மனித னுக்கு தேவையான இயல்பான ஆற்றலை வழங்குகிறது. இதில் காபோவைதரேட், புரதம், விற்றமின் பி கொண்டுள்ளதால் உடல் உறுதியை மேம்படுத்தி சோர்வை நீக்கி நாள் முழுவதும் சுறுசுறுப்பை தருகிறது.

அதேபோன்று, இதில் காணப்படுகின்ற தேனீயின் மகரந்தம் தோலில் ஏற்படும் தடிப்பு, ஒவ்வாமை, எக்ஸிமா, பொதுவாக தோல் எரிச்சல், போன்ற வற்றை சரிசெய்ய மேற்பூச்சி பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. இது அமினோ அமிலங்கள் மற்றும் விற்றமின்கள் கொண்டுள்ளதால் தோலை பாதுகாத்து செல்களின் மறு உருவாக்கத்திற்கு உதவுகிறது.

**சுவாச அமைப்பு**

நுரையீரல் திசுக்களின் காரணமாக உருவாகும் ஆரம்பகட்ட ஆஸ் மாவை தடுக்கும். ஏனெனில் ஆஸ்மாவை தடுப்பதற்கு தேவையான அண்டியாக்ஸிடண்ட்களை அதிகளவு கொண்டுள்ளது. இருதய அமைப்புக்கு ஆதரவு புரிகிறது. ஒட்சிசனேற்ற எதிர்பொருட்களை அதிகளவு கொண்டுள்ளதால் இரத்த நாளங்கள், இரத்த ஓட்ட பிரச்சினைகள், கொழுப்பு அளவுகளை சரிசெய்து இருதய அமைப்புக்கு ஆதரவுதருகிறது. மேலும் பக்கவாதம், மாரடைப்பைத் தடுக்கிறது.

**செரிமான அமைப்பு**

இதில் ஆரோக்கியமான விற்றமின்கள், தாதுக்கள், புரதம் ஆகிய வற்றை கூடுதலாக கொண்டுள்ளதால் செரிமானத்தை சரிசெய்கிறது. ஏனெனில் தேனீயின் மகரந்தம் செரிமானத்திற்கு உதவும் என்சைம்களை கொண்டுள்ளது. என்சைம்கள் நமது உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் கிடைக்க செய்கிறது. மேலும் ஒவ்வாமைகளை குணப்படுத்தும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

**மலட்டுத்தன்மை**

தேனீயின் மகரந்தம் கருப்பையின் செயற்பாட்டை தூண்டி முட்டை களை மீளுருவாக்கும் செய்கிறது. எனவே கர்ப்பத்தை தூண்டுவதற்கு பெரிதும் உதவுகிறது. இது ஒரு வகையிலான ஹோர்மோன் பூஸ்டர், பாலுணர்வூக்கி எனவும் அழைக்கின்றனர். புரோஸ்டேட்க்கு உதவிபுரிகிறது. அதாவது புரோஸ் டேட் மிகைப்பெருக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆண்கள் தேனீயின் மகரந்தம் மூலம் நிவாரணம் காணலாம். மேலும் வீக்கத்தை குறைத்து சிறுநீர் கழிப்பை அதிகப்படுத்துகிறது.

# அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு



**எதுவுமே** அளவுடன் இருந்தால்தான் நல்லது என்று பெரியவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் உடலுறவு மட்டும் உடல் ஆரோக்கியம் இடம் கொடுக்கும்வரை வைத்துக்கொள்ளலாம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா?

உடலுறவும் சில நேரங்களில் உயிரையும் குடிக்குமாம். அதாவது, ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிக வயது வித்தியாசம் இருக்கும் பட்சத்தில் அவ்வர்கள் உறவு கொள்ளும்போது அதுவே ஆபத்தாகி திடீர் மரணங்கள் ஏற்படும். இதயத்துடிப்பு அதிகரித்து, இரத்த அழுத்தம் கூடுவதோடு ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு திடீர் மரணம் ஏற்பட வாய்ப்பிருக்காம்.

தாம்பத்திய உறவுக்கு முன்னதாக தம்பதியர் மது அருந்துவதும், புகைப்பதும் கூட உயிருக்கு ஆபத்துதானாம். ஒரே நாளில். அதிக முறை உச்சத்தை எட்டு வதும் ஆபத்துதானாம். ஐந்து முறை, பத்துமுறை உச்சத்தை எட்டியதாக கற்பனைக் கதைகளைப் படித்துவிட்டு அதற்கு முனைவது தவறு என்கிறார்கள். மது அல்லது போதைப்பொருள் தரும் வேகத்தில் உறவின்போது வன்முறையான செயல் களில் ஈடுபடுவதும் திடீர் மரணம் சம்பவிக்க காரணமாகிறது. அதிக மன அழுத்தம், இதயம் தொடர்பான நோய்களை உடையவர்கள் அதிக செக்ஸை தவிர்க்க வேண்டும். அதிக தூரம் பயணம் செய்துவிட்டு அதே வேகத்தோடு உறவில் ஈடுபடுவதும் ஆபத்தானதாம்.




# மனைவியை கணவன் வெறுக்கின்றாரா?

**பொது**வாக ஆண்கள் சில அற்ப காரணங்களுக்காக பெண்களை கைவிடுவார்கள். அப்படி நடக்கும் பட்சத்தில் பெண்களுக்கு வாழ்க்கையை வழிநடத்த, அவர்கள் தனித்துப் போராட வேண்டியிருக்கும். ஆண்கள் பெண்களை கைவிட பல காரணங்கள் உள்ளன.

பெண்களின் மேல் ஈடுபாடு குறைதல், வேறு ஒரு பெண்ணின் மீது ஈடுபாடு அல்லது மீண்டும் காதலில் விழுதல் எனச் சில உதாரணங்கள். அடக்கியாளுகின்ற பெண்கள், ஆண்களை கட்டுப்பாட்டில் வைக்க விரும்பும் பெண்கள் இந்த நிலைக்கு ஆளாவது உண்டு.



எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யாத பெண்களையும் ஆண்கள் கைவிட வாய்ப்புகள் அதிகம். பெண்கள் ஆண்களை புரிந்துகொள்ளாமல் அவர்களை அடக்கி ஆள முயற்சி செய்யும்போது திருமண பந்தம் உடைகிறது. இப்படிப்பட்ட உறவுகளில் கணவன் மனைவிக்கிடையே காதல் என்னும் உணர்வு கண்டிப்பாக இருக்காது.

இப்படி இந்த உறவு தோல்வியடைவதால், ஒரு ஆண் இன்னொரு பெண்ணை தேடிப்போகும் சூழல் ஏற்படுகிறது. தங்களுக்கு திருமணம் ஆனபோதும்கூட வேறு பெண்களை தேடும் சுபாவம் உடையவர்கள் ஆண்கள்.

பெண் தன் கணவனை இழக்க, அவளின் பொறாமை குணம்கூட காரணமாக அமையலாம். தன் கணவன் மேல் அடிக்கடி சந்தேகப்படுவது, கணவரை எரிச்சல் அடைய செய்து உறவையே முறியடிக்கச் செய்யும். ஆண்கள் தன் உணர்வையும், கருத்தையும் புரிந்துகொள்ளாத மனைவியை கைவிட்டு, தன்னை நன்கு புரிந்து தன் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் பெண்ணை நாடிச்செல்வர். தன்மீது மனதார நம்பிக்கை வைக்கும் ஒரு பெண்ணைத்தான் ஆண்கள் எப்பொழுதும் விரும்புவார்கள்.

ஒரு ஆண் சிறு வயது பெண்ணையோ அல்லது கவர்ச்சிகரமான பெண்ணை பார்த்தாலோ மனதை பறிகொடுக்கும் நிலைமை வரலாம். மற்றொரு பெண்ணோடு புது உறவை வளர்க்கக் காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அப்படிப்பட்ட தருணத்தில் எந்த ஒரு ஐயஉணர்வும் இல்லாமல் தன் மனைவியையோ அல்லது காதலியையோ அவர்கள் கைவிடக் கூடும். அடக்கியாளுகின்ற பெண்களை ஆண்களுக்கு பிடிக்காது. மனைவி எப்பொழுதும் தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை ஆண்கள் விரும்பமாட்டார்கள். இத்தகைய காரணத்தாலும் பெண்களை கைவிடுகின்றனர்.

# பெண்களே நீங்கள் இரவில் பணி செய்பவரா?



**கனடாவை** சேர்ந்த உடலியல் ஆராய்ச்சியாளர்கள், இரவுப்பணியில் இருக்கும் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஆய்வு செய்தனர். பெண்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும் மார்பகப் புற்றுநோய் குறித்து இதில் தீவிரமாக ஆராயப்பட்டது. கனடாவின் வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா, கிங்ஸ்டன், ஆன்டாரியோ நகரங்களில் மார்பகப் புற்றுநோய் பாதித்த 1,134 பெண்களிடமும், அதே வயதில் நோய் பாதிக்காத 1,179 பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் தெரியவந்துள்ளதாவது:

ஆய்வில் பங்கேற்ற பெண்களில் 3இல் ஒருவர் தொடர்ந்து இரவுப்பணியில் வேலை பார்ப்பவர். 15 முதல் 29 வயது வரையில் அதாவது 14 ஆண்டுகள் வரை தொடர்ந்து இரவுப் பணிக்கு சென்றுவந்த பெண்களுக்கு எந்த பாதிப்பும் தெரியவில்லை.

ஆனால், 30 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள், தொடர்ந்து இரவுப் பணியில் இருந்த பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்க்கான வாய்ப்பு 2 மடங்காக இருந்தது. இதற்கு முக்கிய காரணம், உடல் சுரப்பிகள்தான் என்று தெரியவந்துள்ளது.

அதாவது தூங்காமல் வேலை செய்வதால், உடலில் தூக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சுரப்பியில் பாதிப்பு ஏற்படுகிறது. தூக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் தூக்கத்தை வரவழைக்கவும் உதவும் மெலடோனின் சுரப்பு குறைய ஆரம்பிக்கிறது. இதனால் உடல் பாதிக்கப்படுகிறது. மேலும் விற்றமின் டி. குறைவது, உடல் கடிகாரத்தில் மாற்றம் ஏற்படுவது, வாழ்க்கை முறை மாற்றம் ஆகிய அனைத்தும் மார்பகப் புற்றுநோய் மற்றும் உடலில் கட்டிகள் போன்றவற்றுக்கு முக்கிய காரணமாகின்றன. இவ்வாறு ஆய்வில் தெரியவந்துள்ளது.

## சமையல் குறிப்புகள்

சாம்பாரை இறக்கும்போது, அதில் வறுத்துப் பொடித்த மல்லித் தூளைத் தூவி இறக்கினால், கும்மென்று வாசனை தூக்கும்.

வடை, பகோடா செய்யும்போது, ஒரு தேக்கரண்டி ரவை கலந்துசெய்தால், பகோடா மொறுமொறுப்பாக இருக்கும்.

இட்லிக்கு அரைக்கும்போது, சிறிது வேர்க்கடலை சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டால், சுவை கூடுதலாகும்.

இரவில் பால் குடிக்கும் பழக்கம் இருந்தால், பாலில் 6 பூண்டுப் பற்களை போட்டுக்காய்ச்சி குடித்தால், கொழுப்பு(கொலாஸ்ட்ரோல்)பிரச்சினையே வராது.

பால் வைக்கும் பாத்திரம் எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். அப்போதுதான் பால் கெடாமல் இருக்கும். பாலுடன் இரண்டொரு நெல் மணிகளைப் போட்டு வைத்தால், காலையில் கறந்த பால் இரவுவரை கெடாமல் இருக்கும்.

மோர் மிளகாய் தயாரிக்கும்போது அத்துடன் பாகற்காய்களையும் வில்லைகளாக அரிந்துபோட்டு வற்றலாக்கலாம். பாகல் வற்றல் காரமுடனும், மிளகாய் சிறு கசப்புடன் சுவை மாறி ருசியாக இருக்கும்.

காய்கறிகள் எதுவாக இருந்தாலும் அவற்றை நறுக்கத் தொடங்குமுன் கைவிரல்களில் லேசாக எண்ணெய் தடவிக்கொண்டு நறுக்குவது நல்லது. வேலை முடிந்ததும் சிகைக்காய் போட்டுக் கழுவிவிடவும். விரல்கள் கறுத்துப்போகாமல் இருக்க இது உதவும்.

# தாய்ப்பால் சுரக்க பூண்டு

**பிரசவம்** ஆன பெண்களுக்கு பொதுவாக குழந்தை பெற்ற பெண்கள், தினமும் சத்தான அதேசமயம் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவை தேர்வு செய்து உண்ணவேண்டும். குழந்தைக்கு பால் கொடுக்கவேண்டும் என்பதால் பால் சுரப்பதற்கு உதவும் உணவுகளையும் அதிகமாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அதனால்தான் குழந்தை பிறந்த பின்பு பால் அதிகம் சுரக்கக் கூடிய உணவு வகைகளை சாப்பாட்டில் சேர்த்துக்கொள்வார்கள். பால் அதிகம் சுரக்க உதவுவதில் தலையான ஒன்று பூண்டு. எனவே தினந்தோறும் இரவில் பாலில் பூண்டு போட்டு காய்ச்சிக் குடித்தால் தாய்ப்பால் பெருகுவதுடன் வயிற்று உப்புசம், பொருமல் எதுவும் வராது. கர்ப்பப்பையில் சேர்ந்துள்ள அழுக்கை அகற்றும் தன்மை பூண்டிற்கு உண்டு.





# புருவங்களை பராமரிக்க எளிய வழிகள்

பெண்களுக்கு முதன்மையான அழகு கண்கள்தான். கண்களை மட்டும் நன்றாக அலங்கரித்துவிட்டால் பாதி அழகு வந்துவிடும். அந்த கண்களின் அழகை பிரதிபலிக்க உதவுவது புருவங்கள்.

*புருவங்களின் முடி வளர விளக்கெண்ணெய் உதவுகிறது. இதற்கு விளக்கெண்ணெய், பாதாம் எண்ணெயும், ஒலிவ் எண்ணெய் அல்லது அரோமா எண்ணெய் சமஅளவு கலந்து புருவத்தில் மசாஜ் செய்யலாம். இது புருவங்களில் உள்ள உரோம வளர்ச்சிக்கு உதவுவதுடன் அப்பகுதியில் இரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது.

* எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பாக இரண்டு, மூன்று முறை கிள்ளிவிடுவது போல் அழுத்தம் கொடுக்கவேண்டும். மசாஜ் செய்வதால் முடி அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர உதவிசெய்கிறது.

* தினசரி குளிக்கச் செல்லும் முன்பு புருவங்கள் மேல் எண்ணெய் தடவி ஊறியபின்பு குளிக்கலாம். இது புருவங்களை அழகுபடுத்துகிறது. புருவங்களை எப்போதும் திரெடிங் முறையில் அகற்றுவதே நல்லது. சில பெண்கள் வாக்சிங் முறையில் புருவங்களில் உள்ள முடிகளை அகற்றுகின்றனர் இது தவறானது. இவ்வாறு செய்வதால் தசைகள் சுருங்கி தொய்ந்துபோகிறது.

* பிளேடு பயன்படுத்தி சிலர் புருவ முடிகளை சேப் செய்கின்றனர். இது மிகவும் ஆபத்தானது. அவ்வாறு அகற்றுபவர்களுக்கு புருவங்களில் முடி விரைவாகவும், மிகவும் திக்காகவும், தாறுமாறாகவும் முறையற்றும் வளரும்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375) இப்போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-376**

**கேள்வி: பெண்கள் இரவில் தூங்காமல் வேலைசெய்வதால் ஏற்படும் நோய் எது?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-23.07.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 376
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 374 இற்கான விடை :- பிராஜஸ்ரோன் எனும் ஹோர்மோன்கள்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- ம.தேன்மொழி, இல.33, விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி.

376

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

தே.அ. அட்டை இல : ____________________

விடை : ____________________

____________________

கையொப்பம் : ____________________

இந்த உண்மைகளை அம்பலப்படுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்தார்.

2008ஆம் ஆண்டு பராக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அவருக்கு ஓரளவு நம்பிக்கையூட்டியது. ஒபாமா நிர்வாகத்தில் இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சீர்திருத்தப்படும் என்று நம்பினார்.

2009ஆம் ஆண்டு சி.ஐ.ஏ.வை விட்டு விலகி ஒரு தனியார் நிறுவனத்தில் சேர்ந்தார். ஜப்பானில் உள்ள இராணுவ தளத்தில் செயற்படும் தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் பிரிவில் வேலை செய்ய அனுப்பப்பட்டார். பூஸ் அலன், டெல் போன்ற நிறுவனங்களின் ஊழியராக தேசிய பாதுகாப்பு ஆணையத்தில் பணி செய்தார். மாற்றப்படும் என்று அவர் நம்பிய கொள்கைகள் ஒபாமாவின் ஆட்சியிலும் தொடர்வதை பார்த்து அவர் பெரிதும் ஏமாற்றமடைந்தார். மனித குல வரலாற்றிலேயே மிக முக்கியமான கண்டுபிடிப்பு என்று அவர் கருதிய இணையத்தின் மதிப்பையும், அடிப்படை உரிமைகளையும் அமெரிக்க அரசின் வேவு பார்த்தல் அழித்து வருவதை உணர ஆரம்பித்தார்.

மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவரது உறுதி வளர்ந்தது. தவறுகள் நடப்பதைப் பார்க்கும் போது, "வேறு யாராவது வந்து நிலைமையை சரி செய்வார்கள் என்று காத்திருக்க முடியாது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தலைவர்கள் வருவார்கள் என்று காத்திருக்க முடியாது. நாமே செயற்படுவதுதான் தலைமைப் பண்பு" என்று புரிந்து கொண்டதாக கூறுகிறார் ஸ்னோடன். அடுத்த மூன்று ஆண்டுகளில் தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் வேவு பார்க்கும் நடவடிக்கைகள் எவ்வளவு விரிவானவை, அனைத்தும் தழுவியவை என்பதை புரிந்து கொண்டார். உலகில் நடக்கும் ஒவ்வொரு உரையாடலையும், ஒவ்வொரு செயற்பாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற திட்டத்துடன் அவர்கள் செயற்படுகிறார்கள்.

## அத்துமீறிய அதிகாரம் அம்பலப்படுத்தப்பட வேண்டும்

அமெரிக்க உளவுத் துறை உலகெங்கிலும் உள்ள பொது மக்களை வேவு பார்ப்பது தொடர்பான ஆவணங்களை பத்திரிகைகளுக்கு வெளியிட அவர் முடிவு செய்தார். தனது நடவடிக்கைகளுக்காக தான் துன்புறுத்தப்படலாம் என்று அவருக்கு தெரிந்திருந்தது. ஆனால், தான் பெரிதும் நேசிக்கும் இந்த உலகை ஆண்டு கொண்டிருக்கும் ரகசிய சட்டங்கள், தடுத்து நிறுத்த முடியாத நிர்வாக அதிகாரம் போன்றவை சிறிதளவாவது அம்பலப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

"பணத்தை விட முக்கியமான பல விஷயங்கள் உள்ளன. எனக்கு பணத்தாசை இருந்தால் இந்த ஆவணங்களை பல நாடுகளுக்கு விற்று நினைத்துப் பார்க்க முடியாத அளவு பணத்தை சம்பாதித்திருக்கலாம். ஆனால், அரசு அளவுக்கு மீறிய அதிகாரங்களை தன் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறது. அவற்றின் மீது பொதுமக்களுக்கு எந்த கட்டுப்பாடும் இல்லை. இந்த அமைப்பில் பணி புரியும் என்னைப் போன்றவர்கள் பல வரம்பு மீறல்கள் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மக்கள் முன் அம்பலப்படுத்துவதுதான் தன் நோக்கம்" என்கிறார் அவர்.

"நான் எந்தத் தவறும் செய்ய வில்லை என்று எனக்குத் தெரியும். அதனால், மறைந்து வாழும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால், விவாதம் என்னை மையமாக கொண்டு நடக்கக் கூடாது. அமெரிக்க அரசின் செயல்களை மையமாக கொண்டிருக்க வேண்டும்" என்கிறார் அவர்.

ஹாங்காங் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோது ஸ்னோடன், யாராவது ஒட்டுக் கேட்டு விடக் கூடாது என்று தன் அறைக் கதவுகளை தலையணைகளால் பொதிந்து வைத்திருந்தார். அவரது மடிக்கணினியில் பாஸ்வேர்ட் உள்ளிடும் போது தலையை ஒரு சிவப்புப் போர்வையால் போர்த்திக் கொள்கிறார். அவரது பயங்களுக்கு காரணம் இருக்கிறது. அவர் 10 ஆண்டுகளுக்கு மேல் அமெரிக்க உளவுத் துறையில் வேலை செய்திருக்கிறார். உலகின் மிகப்பெரிய, மிக ரகசியமான உளவு அமைப்பான அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆணையம் அவரை தேடிக் கொண்டிருக்கிறது என்று அவருக்குத் தெரியும்.

"தன்னை கைது செய்து அனுப்புமாறு அமெரிக்க அரசு சீன அரசிடம் கேட்கலாம் அல்லது சீன அரசு அவரை பிடித்து ரகசிய இடத்துக்கு கொண்டு போய் தகவல்களை கறக்க முயற்சிக்கலாம் அல்லது திடீரென பிடித்துக் கட்டப்பட்டு, விமானத்தில் அமெரிக்காவுக்கு கடத்தப்படலாம். சி.ஐ.ஏ மூலம் அவர் அழிக்கப்பட்டு விடலாம் சி.ஐ.ஏ உளவாளிகளோ, அவர்களுடன் சேர்ந்து பணியாற்றும் பிற நாட்டு உளவாளிகளோ அவரை வேட்டையாட வரலாம். அல்லது ஹாங்காங்கின் புகழ்பெற்ற டிரையாட் எனப்படும் மாபியா கும்பல்களுக்கு பணம் கொடுத்து அவரை கொல்ல வைக்கலாம்" எனும் பயங்கள் அவரிடம் இருந்திருக்குமோ?

அவரது ஹோட்டல் இருக்கும் அதே சாலையில்தான் ஹாங்காங் சி.ஐ.ஏ அலுவலகம் (ஹாங்காங் அமெரிக்க தூதரகம்) உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அரசு அமைப்பின் ஊழல்களை அம்பலப்படுத்தியவர்களை ஒபாமா அரசு அடக்கி ஒழித்ததை ஏற்கனவே பார்த்திருக்கும் ஸ்னோடன், தான் தெரிந்தே இந்த முடிவை எடுத்ததாக சொல்கிறார். அவரது குடும்பத்துக்கு இதனால் ஏற்படப் போகும் தொல்லைகளைக் குறித்து எதையும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக அவர் வருந்துகிறார். அதுதான் அவரை தூக்கம் இழக்கச் செய்கிறது.

வரலாறு முழுவதும் சர்வாதிகார, சுரண்டல் அமைப்புகளை கட்டி எழுப்பும் ஆளும் வர்க்கங்களுக்கான சவப்பெட்டி ஸ்னோடன் போன்ற சராசரி மனிதர்களால்தான் தயாரிக்கப்படுகின்றன. அமெரிக்க ஏகாதி பத்தியமும் அதன் அடக்குமுறை சாம்ராஜ்யமும் தம் வீழ்ச்சி காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

தொலைபேசிகள், மின்னஞ்சல்களையும், பிற ஆவணங்களையும் அமெரிக்க அரசு வேவு பார்த்ததா?

அமெரிக்கரான இவர் இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்து சர்வதேச கவனம் பெறுவார். அமெரிக்காவின் மிக முக்கிய எதிரி என அறிவிக்கப்படுவார்.

எட்வர்ட் ஜோசப் ஸ்னோடன். அமெரிக்கரான இவர் இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்து சர்வதேச கவனம் பெறுவார். விரைவில் அமெரிக்காவின் மிக முக்கிய எதிரி என அறிவிக்கப்படுவார். பின்லாடனை விட மோசமான தீவிரவாதியாகவும், அமெரிக்க மக்களின் உயிர் பறிக்கும் அரக்கனாகவோ அல்லது பெண் பித்தர், மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் குற்றம் சாட்டப்படலாம்.

ஏன் என்றால் அவர் செய்த செயல் அப்படிப்பட்டது! அமெரிக்கா தன் சொந்த நாட்டு மக்களையே வேவு பார்த்ததை வீதியில் போட்டு உடைத்தவர் அமெரிக்க அரசு கைபிசைந்து கொண்டு மக்கள் முன் தலை குனிந்து நிற்கும் நிலையை ஏற்படுத்தியவர். சென்ற வாரங்களில், அமெரிக்க அரசு "தேசிய பாதுகாப்பு" என்னும் பெயரில் அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்படும் தொலைபேசி, செல்பேசி உரையாடல்களை வேவு பார்த்தது, பலரின் மின்னஞ்சல்களையும், பிற ஆவணங்களையும் இணைய சேவை நிறுவனங்களில் இருந்து எடுத்து சேமித்தது ஆகியவற்றை நிரூபிக்கும் ஆவணங்கள் ஊடகங்களில் வெளியாகின.

அமெரிக்க மற்றும் உலக மக்கள், தினமும் தொலைபேசி, செல்பேசிகளில் பேசிக்கொள்ளும் உரையாடல்கள் முதல் அவர்களது இணையத் தகவல் பரிமாற்றங்கள் என சகலத்தையும் வேவு பார்த்துள்ளனர் அமெரிக்க உளவுத் துறையினர். இதற்காக தனிபிரிவுகளை ஏற்படுத்தி பல மில்லியன் டாலர்களை செலவு செய்து இந்த வேலைகள்ளை செய்துள்ளனர்

ஸ்னோடன் 2003ஆம் ஆண்டு ஈராக்கில் "ஜனநாயகத்தை நிலைநாட்டும் கடமையில் பங்கேற்கும்" கனவுகளுடன் சிறப்பு ராணுவப் படைகளுக்கான பயிற்சித் திட்டத்தில் சேர்ந்தார். ஆனால், சீக்கிரமே அவர் ராணுவத்தின் உண்மை முகத்தை தெரிந்து கொண்டார். "பயிற்சியாளர்களில் பெரும்பகுதியினர் மக்களுக்கு உதவும் நோக்கம் கொண்டவர்கள் இல்லை, ஈராக் மக்களை கொல்வதைப் பற்றி மட்டும்தான் பேசினார்கள்" என்கிறார் அவர். பயிற்சி காலத்தில் ஒரு விபத்தில் கால்கள் முறிந்ததால் ராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மேரிலாண்ட் பல்கலைக் கழகத்தில் இருக்கும் தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் ரகசிய அலுவலகத்தில் பாதுகாவலராக சேர்ந்திருக்கிறார். பின்னர் அமெரிக்க உளவுத் துறையின் தகவல் தொழில் நுட்ப பாதுகாப்பு துறையின் கீழ் ஜெனீவாவில் பணி புரிந்திருக்கிறார்.

## அப்பாவி மக்களை வேவு பார்ப்பது தனிமனித சுதந்திரத்திற்கு எதிரானது

அவரை முதலில் சுவிஸ் வங்கிகளை வேவு பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள். அவரும் கணினி உதவியுடன் பல்வேறு ஆவணங்கள், உரையாடல்களை சேகரித்துக் கொடுக்கும் வேலை செய்துள்ளார். இது சரிதான், ஊழல் செய்யும் அரசியல்வாதிகள் முதல் பல்வேறு சமூக விரோதிகளை தான் நாம் கண்காணிக்கிறோம் என்று பெருமிதம் கொண்டார். ஆனால் மெல்ல அவர் சேகரிக்கும் தகவல்களும் ஆவணங்களும் சாதாரண அமெரிக்க குடிமக்களின் உரையாடல்கள் மற்றும் மின்னஞ்சல் தகவல்கள் என தெரிய வந்தபோது அதிர்ச்சியடைந்தார் குற்றவுணர்வு கொண்டார். இதனால் அமெரிக்க அதிபரை குற்றவாளி என நினைத்தார். புஷ் நிர்வாகம் செய்யும் தவறுகள் தான் இவை, அடுத்து சில மாதங்களில் எப்படியும் புஷ் மாறி வேறு ஒரு அதிபர் வரும் போது தவறுகள் சரிசெய்யப்படும் என சமாதானம் செய்து கொண்டார்.

2009ஆம் ஆண்டு ஜப்பானில் உள்ள தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் அலுவலகத்தில் ஒரு ஒப்பந்த ஊழியராக சேர்ந்தார். ஒபாமா அதிபர் ஆன ஆரம்ப நாட்களில் இந்த வேலைகள் தொடர்ந்தாலும் இத்தகைய கொள்கைகள் மெல்ல மாற்றப்படும் என காத்திருந்தார். ஆனால் ஒபாமா பதவி காலத்தில் இந்த தகவல்கள் சேகரிப்பு விஸ்தரிக்கப்பட்டது. முன்பு குறுகிய அளவில் இருந்த வேவு பார்க்கும் வேலை அமெரிக்க மக்கள் மீது முழுவதுமே திரும்பியது. அதிபர் மாற்றம் ஒன்றுமே செய்யவில்லை, எத்தனை அதிபர் மாறினாலும் அமெரிக்க நிர்வாகம் மக்களுக்கு எதிரானது என்பதை கண்டுணர்ந்தார்.

"அப்பாவி மக்களை வேவு பார்ப்பது தனி மனித சுதந்திரத்திற்கு எதிரானது அரசு நிர்வாகம் வெளிப்படையாக இருக்க வேண்டும் அமெரிக்க நிர்வாகம் வெளிப்படையானது இங்கு மக்களுக்கு கருத்து சுதந்திரம் பொங்கி வழிகிறது" என அமெரிக்க அரசின் சகல முழக்கங்களும் பொய்யானவை என்பது ஸ்னோடனை கடும் குற்றணர்வு அடைய செய்தது.

கடைசியாக ஹவாயில் உள்ள தேசிய பாதுகாப்பு ஆணையத்தில் பூஸ் அலன் என்ற ஒப்பந்த நிறுவனத்தின் ஊழியராக வேலை செய்திருக்கிறார். அமெரிக்க அரசின் "பெரிய அண்ணன் கண்காணிப்பு" அடக்குமுறையை மக்களுக்கு எப்படி தெரியப்படுத்தலாம் என யோசிக்கிறார். அமெரிக் காவில் மக்கள் மீதான நிறுவனங்களின் அடக்குமுறைகளை எதிர்த்து போராடுபவர்கள் விசில் ப்ளோவர்ஸ் (whistle blowers) என அழைக்கப்படும் அம்பலப்படுத்துபவர்கள். இவர்கள் மக்களுக்கு தெரியாமல் அரசும் கார்ப்பரேட் நிறுவனங்களும் செய்யும் ஊழல்களை, தமக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை பொருட்படுத்தாமல், மக்களுக்கு அம்பலபடுத்துகிறவர்கள். ஒபாமா ஆட்சியில் இந்த அம்பலப்படுத்துபவர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர் அழிக்கப்பட்டனர்.

அதனால் ஸ்னோடன் அமெரிக்காவின் மிக முக்கிய உளவுநிறுவனமான சி.ஐ.ஏ.வின் கீழ் இயங்கும் தனிப்பிரிவின் பல ஆயிரம் ஆவணங்களை வெளியில் கொண்டு வருவதன் பின் உள்ள ஆபத்தை நன்கு உணர்ந்திருந்தார். தான் வாழ்நாள் முழுவதையும் சிறையில் கழிக்க நேரிடலாம் என்பதை புரிந்து கொண்டிருந்தார். ஆனால், ஸ்னோடனுக்கு அமெரிக்காவின் உளவுத்துறையும் உள்துறையும் பல்வேறு கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் அவமானப்பட்டு நின்றன.

விக்கிலீக்ஸ் ஆதர்சமாக இருந்தது. அமெரிக்க ராணுவம் ஈராக்கில் செய்யும் அட்டூழியங்களை விக்கிலீக்ஸ் உதவியுடன் வெளிகொண்டு வந்த ப்ராட்லி மேனிங் என்பவரின் செய்கை அவருக்கு வழிகாட்டியது. ப்ராட்லி மேனிங் அமெரிக்க அரசால் கைது செய்யப்பட்டு அல்கைதாவிற்கு உதவியதாக ஒரு பொய் வழக்கில் விசாரிக்கப்பட்டு வருகிறார். மரண தண்டனை வழங்கக் கூடிய வழக்கு அது.

ஸ்னோடன் அமெரிக்க அரசு மக்களை வேவு பார்ப்பது தொடர்பான தகவல்களை சேமித்தார். ஆயிரக்கணக்கான உரையாடல்கள் பதிவுகளையும் ஆவணங்களையும் தனது அறைக்கு கொண்டு வந்தார். தான் மருத்துவ மனைக்கு செல்ல வேண்டும், உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது என இரண்டு வாரம் விடுப்பெடுத்துக் கொண்டார். தகவல்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஹாங்காங் சென்று அங்கிருந்தபடி தகவல்களை வெளி உலகிற்கு அம்பலப்படுத்தினார்.

முதலில் தன் பெயரை அவர் வெளியிட வில்லை, அமெரிக்க அரசு உலகம் முழுவதிலும் மக்களை வேவு பார்க்கும் வேலையை செய்வதை ஊடகங்கள் செய்திகளாக வெளியிட்டன. பரபரப்பு பற்றிக்கொண்டது. அமெரிக்காவின் உளவுத்துறையும் உள்துறையும் பல்வேறு கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் அவமானப்பட்டு நின்றன. அமெரிக்க அதிபர் ஒபாமா, இப்படி வேவு பார்ப்பது தேசிய பாதுகாப்பிற்கு தேவையானது என்று சப்பைக்கட்டு கட்டினார்.

ஒரு வாரத்திற்கு பிறகு இந்த ஆவணங்களை வெளிக்கொண்டு வந்தது யார் என்ற கேள்விக்கு விடை தரும் விதமாக ஸ்னோடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். அவர் மிக தெளிவாகவே இருக்கிறார் அவரின் கருத்தும் மிக தெளிவாகவே இருக்கிறது."நான் யாரையும் புண்படுத்தவோ, நாட்டைக் காட்டிக்கொடுக்கவோ இந்த வேலையை செய்யவில்லை, நான் கவனமாக ஆவணங்களைப் பரிசோதித்து யாருக்கும் ஆபத்து ஏற்படுத்தாத தகவல்களையும் ஆவணங்களையும் மட்டுமே வெளியிட்டுள்ளேன். ஆனால் என்னுடைய நோக்கம் அரசின் செயற்பாடுகள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பது மட்டும் தான்" என்கிறார்.

ஆனால், மக்களை பாதுகாப்பதற்காக மக்களை வேவு பார்க்கிறோம் என்கிறது அமெரிக்க அரசு.

தொடர்ச்சியாக பல கொலைகளையும், திட்டமிட்ட நம்பிக்கை துரோகங்களையும் செய்யும் கிரிமினல் ஒரு கட்டத்தில் யாரையுமே நம்பாமல் அனைவரையும் சந்தேகப்பட்டு மனநோயாளி போல் தன்னை காப்பாற்றி கொள்ள அலைவது இயல்பு தான். மூன்றாம் உலக நாடுகளில் தனக்கு வேண்டாத அதிபர்களை தீர்த்துக் கட்டுவது, வெளியுறவுத் துறை அதிகாரிகளை அவர்கள் இருக்கும் நாடுகளில் வேவு பார்க்கச் செய்வது, தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்களை சீர்குலைவு செயல்களுக்கு பயன்படுத்திக் கொள்வது, ஆட்சிக் கவிழ்ப்பு, சதி, அழிவு என சகல கிரிமினல் வேலைகளை செய்து வரும் சி.ஐ.ஏ யும் அமெரிக்க அரசும், இன்று யாரை நம்புவது என தெரியாமல் அனைவரையுமே சந்தேகப்படுவது இயல்பு தான்.

சோஷலிச நாடுகள் வெளிப்படையாக தம் வர்க்க சார்பை அறிவிக்கின்றன் "எந்த ஒரு அரசும் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்கான எந்திரம்தான் சோஷலிச அரசு என்பது பெரும்பான்மையினரான உழைக்கும் வர்க்க மக்கள், சிறுபான்மையினரான சுரண்டல் வர்க்கங்களை ஒடுக்குவது" என வெளிப்படையாக அறிவித்து விட்டு ஆட்சி நடத்துகின்றன. சோவியத் அரசு, பெரும்பான்மை உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக சுரண்டல் வர்க்கங்களுக்கு கருத்து சுதந்திரம் மறுக்கப்படும் என வெளிப்படையாகவே அறிவித்திருந்தது.

சோவியத் யூனியனின் இந்த கொள்கையை மக்கள் முன் திரித்துக் கூறி "சோவியத் யூனியனில் கருத்து சுதந்திரம் இல்லை, வெளிப்படையான நிர்வாகம் இல்லை, கம்யூனிஸமே தனிமனித சுதந்திரத்திற்கும் கருத்து சுதந்திரத்திற்கும் எதிரானது, ஆனால் அமெரிக்கா மாதிரியான முதலாளித்துவ அரசுகளோ தனி மனித சுதந்திரத்தை பேணிப்பாதுகாக்கின்றன. கருத்து சுதந்திரத்திற்கு முழு ஆதரவு தருகின்றன, வெளிப்படையான நிர்வாகம் நடத்துகின்றன எனப் பனிப்போர் காலத்தில் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தன மேற்கத்தய முதலாளித்துவ நாடுகள். இப்பிரசாரத்தில் உலக மானிடர் மயங்கினர். கண்டது கானல்நீரே!

ஜனநாயகம் என்று சொல்லப்படும் முதலாளித்துவ அமைப்பில் அரசு மேலும் மேலும் உளவு பார்க்கும் வேலையை அதிகரித்து வருகிறது. தமது நலன்களை பாதுகாப்பதற்காக, தாம் போலியாக முன் வைக்கும் கருத்துரிமை, தனி மனித சுதந்திரம் போன்றவற்றை வெளிப்படையாக பலி கொடுக்கின்றன முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள். ஸ்னோடன் போன்ற நேர்மையான குடிமக்கள் இந்த போலித்தனத்தை எதிர்த்து கேள்வி கேட்கும் போது தேள் கொட்டிய திருடன் போல விழிக்கிறது அமெரிக்க அரசு.



# ப ல்தரையில் துமலர்கள்

**நான்காவது** சுற்று மகளிர் ஒற்றையர் பிரிவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியவர்தான் ஜேர்மனியின் சபீனா லிஸிகி. செரினா வில்லியம்சை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கியவர் இவர்தான். தொடர்ந்து அரை இறுதிப் போட்டியில் போலந்தின் அக்னீஸ்கா ரட்வன்ஸ்காவைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இன்னொரு அரை இறுதியில் பெல்ஜியம் நாட்டின் கிர்ஸ்ரன் பிலிப்கென்ஸ்ஐத் தோற்கடித்து பிரான்சியமங்கை மகியன பலடோனி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். நாற்பத்தி ஐந்து ஆண்டு காலத்தில் கிராண்ட்ஸ்லாம் எதுவும் வெல்லாத இரண்டு பெண்மணிகள் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் சந்திப்பது இது இரண்டாவது தடவை என்று பதிவு செய்யப்படுகிறது. மேலும் 1999இல் ஜேர்மனியின் ஸ்ரெபி கிராப் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டபின், இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற ஜேர்மனிய மங்கை லிஸிக்கிதான்.

இதேவேளை மரியன் பலடோபி அறுபத்தி இரண்டே நிமிடத்தில் பிலிப் கென்சைத் தோற்கடித்து விட்டார். கடந்த முறை பலடோபி இந்தளவுக்கு முன்னேறி இருந்தாலும் வீனஸ் வில்லியத்தால் தோற்கடிக்கப்பட்டிருந்தார். ஆனால் அந்த அனுபவம் பலடோலிக்கு இம்முறை கைகொடுக்கக் கூடும்.

எது எவ்வாறாயினும் இந்தளவில் மகளிர் ஒற்றையர் விம்பிள்டன் சாம்பியன் யார் என்பது தெரிந்திருக்கும். இதுவரை காலமும் இல்லாத வகையில் பிரபல்யங்கள், மிகப் பிரபல்யங்கள் எல்லாம் துடைத்தெறியப்பட்ட புத்தம் புதியவர்கள் ரென்னிஸ் உலகில் வலம்வர ஆரம்பித்திருக்கும் நுளைவாயிலை 2013 விம்பிள்டன் ஏற்படுத்தி விட்டது என்பது இனிப்பான உண்மை.

# இது போதுமா!



விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத் தீவுகள் ஒரு நாள், மற்றும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் ஆட்டங்களுக்கான அணித்தெரிவின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சிலர் போய் இருக்கிறார்கள். ஆனால் இவ்வணித் தெரிவில் ஆச்சரியப் படும் வகையில் எதுவும் இல்லை. வழமைபோலவே ஒரு நாள் போட்டிகளுக்கு மிஸ்பா உல்ஹக் தலைவராகவும், இருபதுக்கு இருபது போட்டிகளுக்கு மொகமட் ஹபீஸ் தலைவராகவும் நியமிக் கப்பட்டுள்ளார்கள். சாம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் தோல்வியின் பின்னர் இவர்கள் இருவருமே நீக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.





இதற்கு மேலாக ஆச்சரியமாக இரு வகைப்போட்டிகளிலும் சாஹிட் அப்ரிடி சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். இவரைப் பற்றிக் கூறும்போது, முன்னாள் திறமையான வீரர் என்று கூறுவதா அல்லது எதிர்காலத் திறமைமிக்க வீரர் என்று கூறுவதா தெரியவில்லை. ஆனால் அவர் அணியில் இடம்பிடித்துள்ளார். மேலும், இறைமையான உமர் அக்மல் மீண்டும் அணிக்குள் குளம்பியிருப்பது நல்ல விஷயம். இதே வேளை புதிய அறிமுகங்களாக ஹரிஸ் சொஹய்ஸ் சுல்பிகார் பாபர்- விக்கெட்காப்பாளராக றிஸ்வான் அஹமட் என்போர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். எதிர்பார்த்தது போலவே இம்ரான் பர்கத் - சோயிப் மாலிக் - கம்ரன் அக்மல் மூவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். மேற்கிந்தியத் தீவுகள் அணி அண்மைக்காலத்தில் ஒரு நாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் அசத்தி வருகிறார்கள். பாகிஸ்தான் அணி எவ்வாறு சமாளிக்கப் போகிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# புதிய சிந்தனை

ஆஷெஸ் தொடர் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளை யில் அவுஸ்ரேலிய பயிற்சியாளர், மிக்கி ஆர்தர் அவுஸ்ரேலிய கிரிகெட் சபையால் திடீர் பதவி நீக்கம் செய்யப்பட்டபின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றவர் டரன் லீமன், இவரது வரவு அவுஸ்ரேலிய கிரிக்கெட் சாந்த சகல தரப்பினராலும் அமோகமாக வரவேற்கப்பட்டது. இந்நிலையில் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தை எதிர்கொள்ள இவரின் நடவடிக்கைகள் சிறந்தவையாக அமையும் என்றே நம்பப்படுகிறது. அதாவது முப்பத்தைந்து வயதான கிறிஸ்றொஜர்ஸ் அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கவுள்ளது முதலாவது அதிரடி. அதேவேளை ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான மற்றவர் ஷேன் வொட்சண் தான் என்று முன்னதாகவே தீர்மானித்து விட்டார். கிறிஸ் றொஜர்ஸ் உள்வாங்கப்பட்டக் காரணம் இவர் இங்கிலாந்து கவுன்டி ஆட்டங்களில் நிறைய விளையாடி இருப்பதாகும். முன்னதாக ஐந்து வருடங்களுக்கு முன்னாள் இந்தியாவுக்கு எதிராக ஓரே ஒரு டெஸ்ட் விளையாடியதே இவரது அனுபவம் இருந்தபோதிலும் பிரபல்யம் என்பதற் கட்பால் தேவையின் முக்கியத்துவம் கருதி சரியான முடிவொன்றை லீமன் எடுத்திருக்கிறார். என்றே கூறவேண்டும். இதுமட்டுமன்றி பயிற்சி ஆட்டங்களின் போது கூட அணியில் உள்ள அத்தனை வீரர்களையும் மாற்றி மாற்றிக் களம் இறக்கிக் கொண்டிருப்பது இவரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது. இன்னொரு வீரரான பத்தொன்பது வயதேயான அஸ்டன் அகர் நேதன் லயனுக்கு மாற்றாக பயிற்சிப்போட்டிகளில் களம் இறக்கப்பட்டுள்ளனார். எனவே ஆஷஸ் முதலாவது டெஸ்ட் தொடங்கும் போது எதிர்பாராத வகையில் அணி அமையவும் வாய்ப்புண்டு. லீமன் பிரபல்யத்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தயாராக இல்லை. மாறாக அதீத திறமை வெளிப்பாடு மட்டுமே கருத்தில் கொள்ளப்படும் என்கிறார்.



# சட்டம் கூர்மையானது



**மென்செஸ்ரர்** சிட்டி உதைபந்தாட்டக் கழக இளம் வீரர் மெல்பென் வோல்டர் இவர் இங்கிலாந்தின் 18 வயதிற்குட்பட்டோர் உதைப்பந்தாட்ட அணியின் தலைவராகவும் இருந்தவர். இவர் பதி-னாறு மாதச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஆனால் தவறுதலாக நான்கு மாதங்களில் விடுதலை செய்யப்பட்டு, தவறு கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் செய்த தவறுதான் என்ன? தன்னுடைய மேர்லிடஸ் பென்ஸ் காரை திவேகமாக ஓட்டிச்சென்று, இன்னொரு காருடன் மோதி அதில் இருந்த இருவரின் மரணத்திக்குக் காரணமாக இருந்தது தான். முப்பத்தியிரண்டு வயதான குல்வந்த் சிங்கும் அவரது சகோதரியான ராவெல் கவுரும் தான் கொல்லப்பட்டவர்கள். பாவம் அவர்கள் சீக்கியக் கோயிலுக்குச் சென்றுவிட்டு திரும்பி வரும் வழியிலேயே இந்த அசம்பாவிதம் நடைபெற்றுவிட்டது.

மெப்லென் பதின்ம வயதினரான இருந்தமையால் இவரது பதினாறு மாதச் சிறைத்தண்டனையில் பாதிக்காலம் சிறையில் கழித்தால் போதும் என்றும் கூறப்பட்டதோடு, இவர் எங்கிருக்கிறார் என்பதை எப்போதும் அறிந்துகொள்ளும்படி மின் கருவி ஒன்றை தன்னுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். (ELECTRONICTAG) என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் அதற்கும் குறைவான காலத்தில் எப்படி விடுவிக்கப்பட்டார் என்பது பற்றி விசாரனை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும் எந்தப் பிரபல்யமும் இங்கிலாந்தின் சட்டத்தில இருந்து தப்பிக்கொள்ள முடியாது என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

ஆசிய தடகளப் போட்டிகள் இந்தியாவின் புனே நகரில் உள்ள சிறி சத்ரபதி விளையாட்டு அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போட்டிகளின் ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையில் சச்சித் மதுரங்க வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார். அவர் எறிந்த தூரம் 79.62 மீற்றர்களாக அமைந்ததுடன், இலங்கை அளவில் இதுவே அதி கூடிய தூரமாகவும் அமைந்துவிட்டது. இந்த வெற்றி பற்றிக் கருத்துக் கூறிய மதுரங்க தான் மிகுந்த மகிழ்ச்சியில் இருப்பதாகவும், இது ஒரு உடனடி நிகழ்வல்ல என்றும், நீண்டகாலத்திட்டமிட்டலும், பயிற்சியும் தந்த பரிசென்றும் கூறியுள்ளார். இதற்கும் அப்பால், ஆசியதடகளப் போட்டிகளுக்கு முன்னர் பின்லாந்து நாட்டில் தான் பெற்ற பயிற்சிகள் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமென்றும் தெரிவித்துள்ளார்.



# தூரம் அதிகமில்லை

ஈட்டி எறிதல் நிகழ்வில் முதலிடம் பெற்றுக்கொண்டவர் உஸ்பெஸ்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர். இவர் எறிந்த தூரம் 79.76 மீற்றர்கள். அதாவது பதினான்கு சென்ரி மீற்றர் வித்தியாசத்திலேயே மதுரங்க தங்கத்தைத் தவறவிட்டுள்ளார். எனினும் எதிர்காலத்தில் இவர் இன்றும் பல சாதனை-களை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கலாம்.

# கிழக்கில் விவசாயிகள் மீதான தாக்குதல்

-பிரகஸ்பதி-

வெள்ளகாலத்தில் மோசமாக நஷ்டப்படுவதும், வெயில் காலத்தில் நீருக்காகச் சண்டை பிடிப்பதும் எமது பிரதேசங்களில் வழமையான தாகிவிட்டது. இந்த வாரம் நீர்ப்பிரச்சினை எவ்வளவு சிக்கல்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதனையே ஆராயவுள்ளோம்.

மக்களது பிரச்சினைகள் தொடர்பில், உண்மையில் நடந்தது என்ன என்பதை வெளிப்படையாகச் சொல்வதற்குப் பயப்படும் ஊடகங்கள் அரசியல் விடயங்களில் மாத்திரம் மிகவும் மோசமாகச் செயற்படும்போது தான் ஊடகங்களுடன் கோபம் வருகிறது.

விவசாயிகளுக்கிடையில் கைகலப்பு ஐவர் காயம் என்பது கடந்த மாத இறுதியில் மட்டக்களப்பில் நடந்த விவசாயிகள் ஒரு தொகையினர் மீது நடந்த தாக்குதல் தொடர்பில் வெளிவந்த செய்தித் தலைப்பாகும்.

பிட்டும் தேங்காய்ப்பூவும் போல வாழ்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், விட்டுக்கொடுப்பையும் செய்தாக வேண்டும் என்பது தமிழ் விவசாயிகள், மக்களது வேண்டுகோளாகும்.

இனி விடயத்துக்கு வருவோம், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி - பொத்தானை பிரதேசத்தில் கடந்த ஜூன் 28 ஆம் திகதி பகல், 20க்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் மீது, ஓட்டமாவடி, வாழைச் சேனைப் பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்தச் செய்தி மட்டக்களப்பில் மட்டுமல்ல அனைத்து ஊடகத்தினருக்கும் தெரிந்திருந்தாலும், விவசாயிகளுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவத்தில் ஐந்து விவசாயிகள் காயமடைந்துள்ளனர் என்றே செய்திகளை எல்லோருக்கும் தெரிவித்தனர்.

இதில் வீந்தை என்னவென்றால், இந்தத் தமிழ் விவசாயிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து ஜூலை முதலாம் திகதி கிரானில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழ் விவசாயிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தார்களே தவிர, யாரும் பாகுபாட்டுத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்பதே தமிழர்களின் பெருந்தன்மையாகும்.

கிரான் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணியின்போது, சட்டவிரோத விவசாயச் செய்கையை தடைசெய்யவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள தமிழ் விவசாயிகள் மீது வழிமறித்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறித்து விசாரணைகளை நடத்துமாறோ, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி எந்த கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த பேரணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன் பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரெட்ணம், கி.துரைராஜசிங்கம், மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். தமிழ் விவசாயிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தெரியாமல் போனது போலவே மறைந்து போய்விட்டது என்றுதான் சொல்லிக் கொள்ளவேண்டும்.

பொத்தானை கொழுவாமடு பகுதியில் தமிழ் - முஸ்லிம் விவசாயிகள் கூட்டாக இணைந்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விவசாயிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வேளாண்மைச் செய்கைக்கான நீர் விநியோக நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன. இந்நீர் வழங்கும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

வாகனேரி நீர்ப்பாசனக் குளத்திற்கு மாதுறு ஓயா நீர்த்தேக்கத்திலிருந்து திறந்துவிடப் பட்டுள்ள நீரை அந்த பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் விவசாயிகள் சட்டவிரோதமாக அணைகட்டி தடுத்து தமது வயல்களுக்கு நீரைப்பாய்ச்சுவது பிரச்சினையாகும்.

இச்சம்பவத்திற்கு முதல் நாள் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்களுடன் சென்றே இந்த நீர்ப்பாய்ச்சல் தொடர்பில் வேலைகள் நடைபெற்றுள்ளன. இருப்பினும், குறித்த தினத்தில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடன் சுமார் 25 பேர் கொண்ட விவசாயிகள் குழுவொன்று அந்த நீர்ப்பாய்ச்சல் தடையை அகற்றி விட்டு, உழவு இயந்திரத்தில் திரும்பும்போது களுவாமடு என்னுமிடத்தில் வழிமறித்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இத்தாக்குதலால் காயமடைந்த 21 விவசாயிகள் சந்திவெளி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்துள்ளனர். அவர்களில் 5 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டனர். ஏனையவர்கள் அடிகாயங்களுக்கு மருந்துகள் பெற்று சென்றுள்ளனர்.

சம்பவத்தினைப் பெரிதாக்கி ஒரு இன முறுகலை ஏற்படுத்திவிடக் கூடாது என்ற நல்லெண்ண நோக்கத்தில் இந்த விடயம் மறைக்கப்பட்டு கைகலப்பினால் காயமடைந்த ஐந்து பேர், சந்திவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று குறைத்து தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

பாதிப்புக்கள் ஒரு தரப்புக்கு ஏற்பட்டால் அது பெரிதானாலும் சிறிது, மற்றைய தரப்புக்கு சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் அது பெரிது என்ற நிலையில் மாற்றம் தேவை என்பதும், விட்டுக்கொடுத்துக் கொண்டே இருக்கும் சமூகம் இயலாத நிலையில் இருந்து வருகிறது என்ற சிந்தனையும், பிழையானதாகும். இந்தக் கட்டுரை யாரையும் புண்படுத்தும் நோக்கில் வரையப்படவில்லை. பிழை செய்பவர்கள், அல்லது வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் அடுத்தவரின் மனோநிலையையும் புரிந்து செயற்படவேண்டும் என்பதே நோக்கமாகும்.

அரசியலுக்காக வெளியில் ஏதேதோ பேசுவது மக்களை பயன் பெற வைக்காது, அடி ஆழத்திலிருந்து நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். தேவைகள் அதிகம் இருக்கின்றன. தமிழ் விவசாயிகள் கடன்பெற்று விவசாயம் செய்வதும், அவற்றினை அறுவடை முடிந்த உடனேயே அறா விலைக்கு ஏற்றியெடுப்பதும், நடக்கின்ற அதேநேரம், எல்லோருக்கும் பகிரப்படவேண்டிய நீரை இடையில் மறித்து தாம் மட்டும் பயன்படுத்திவிட்டு அதிலும் வேளாண்மை அழியக் காரணமாக இருந்தால் இதனை எவ்வாறு சொல்லிக் கொள்வது என்பது இப்போதைய கேள்வி.

இந்த விடயத்தில், வாழைச்சேனை வாகனேரி பகுதியில் தமிழ் விவசாயிகள் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸார் பக்கச்சார்பின்றி விசாரணை செய்யவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது முதலாவது கேள்வியாக இருந்தாலும், விசாரணையால் மட்டும், அல்லது தண்டனையால் மட்டும் வருடா வருடம் நடைபெறும் இந்த நீர் மறிப்புப்பிரச்சினையும், நீர் கிடைக்காது கருகிப்போகும் விவசாயிகளின் வயிறும் நிரம்பி வழியுமா என்பதே இப்போதைய கேள்விகளில் ஒன்றாகும்.

வாகனேரி, பொத்தானை பகுதி தமிழர்கள் பாரம்பரியமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பகுதிகளில் ஒன்றாகும் அப்பகுதியில் இரு சமூகத்தினரும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் விவசாயிகள் மீது திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடகால யுத்தத்தின்போது இப்பகுதி தமிழ் விவசாயிகள் பல துன்பங்களால் அனைத்தையும் இழந்து இன்று ஓரளவு தங்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும்போது அவர்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.


தாக்குதலுக்குள்ளான விவசாயிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும், எதிர்காலத்தில் இப்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் போது, இந்தப் பிரச்சினை இல்லாத நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒரு விவசாயி வறுமையான நிலையிலும் விவசாயத்தினை மேற்கொள்வதன் சிரமம் விவசாயி ஒருவனுக்குத் தெரியாதிருந்தால் அவன் எவ்வாறு விவசாயம் செய்தான் என்பது சந்தேகமானதாகும். அந்தவகையில், இனமுறுகல் ஏற்பட வேண்டும் என்பது யாருடைய நோக்கமும் அல்ல. அந்தவகையில், இதன் பின்னணியில் சில அரசியல் சக்திகள் இருந்தால் இவ்வாறான விடயங்களில் நுழைவது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

அதேநேரம், இன முரண்பாட்டை ஏற்படுத்தி அதன்மூலம் சுயலாபம் அடையும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மக்கள் மத்தியில் வேறுபாடோ, பாகுபாடோ இல்லாது விவசாய, சமூக நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைமை தோற்றுவிக்கப்பட எல்லோரும் சேர்ந்துழைக்க வேண்டும். இந்த விடயத்தில் ஊடகங்கள் வெளியில் தெரிந்த விடயத்தினை மாற்ற முயல்வதையும் மறைக்க முயல்வதையும் செய்வதனைத் தவிர்த்து மக்களை வழிப்படுத்தப் பாடுபடவும் வேண்டும்.

---

## சிறப்பு திரை விமர்சனம்




பொலிஸ் யூனிபோர்ம், முறுக்கு மீசை, நறுக்குப் பேச்சு என்று பொலிஸ் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக சூர்யாவும் பொருந்தியிருக்கிறார். முதல்பாகத்தில் கொஞ்சம் அதிதமான வசனத்தையும் நம்பியிருந்த சூர்யா, இரண்டாம் பாகத்தில் கம்பீரமான உடல்மொழியை அதிகம் நம்பி உழைத்திருப்பதற்கு கைமேல் பலன். சூர்யா வரும் காட்சிகள் எல்லாம் நிஜமாகவே அனல் தெறிக்கிறது!

முதல் பாகத்தில் உதவி கமிஷனர் வேலையில் இருந்து வெளியேறும் துரைசிங்கம் (சூர்யாவை), மாநில உள்துறை அமைச்சரான விஜயகுமார், "நீங்கள் தூத்துக்குடியில் தங்கியிருந்து சர்வதேச ஆயுதக் கடத்தல் கும்பலை கண்காணியுங்கள்!" என்று உத்தரவிடுகிறார். அமைச்சரின் உத்தரவை ஏற்று, அங்குள்ள பள்ளியில் தேசிய மாணவர் படை அதிகாரியாக இருந்தபடியே அந்த ஊரின் பெரிய மனிதர்களில், உப்பள முதலாளியான பாய் (முகேஷ்ரிஷி), ஷிப்பிங் கம்பெனியின் முதலாளி தங்கராஜ் (ரஹ்மான்) இருவரையும் கண்காணிக்கிறார். இருவரும் அவர்கள் சர்வ தேச போதைபொருள் மாபியா மன்னன், டேனியிடமிருந்து பெட்டி பெட்டியாக ஹெரோயின் போதைப்பொருளை வாங்கி, மாணவர்களுக்கு விற்கிறார்கள் ஆயுதக் கடத்தலைக் கண்காணிக்க வந்த துரைசிங்கத்துக்கு, போதைப்பொருள் கும்பல் நாட்டையே அழித்துக் கொண்டிருப்பது புதையல் மாதிரி தெரியவருகிறது!

அடியாள் பலம், அரசியல் பலம், இவற்றுக்கு அப்பால் இந்த மூன்று பேர்கொண்ட கும்பலை, துரைசிங்கம் மெல்ல மெல்ல தனது வலைக்குள் கொண்டுவந்து, எப்படி உள்ளே தள்ளுகிறார் என்பதுதான் திரைக்கதை.

சும்மா சொல்லக் கூடாது இயக்குனர் ஹரியை! ஒரு மசாலா படத்தில் என்னென்ன இருக்க வேண்டுமோ அவைகளை கச்சிதமாக நுழைத்திருக்கிறார்.

முதலில் இரண்டு கதாநாயகிகளை பயன்படுத்திய விதத்தைச் சொல்லவேண்டும். ஹன்ஷிகாவை பள்ளி மாணவியாக காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. என்றாலும் அவரை இரண்டு வில்லன்களில் ஒருவரது வீட்டுப்பெண்ணாக காட்டி, பிறகு அவரையே துரைசிங்கம் ஒரு கண்ணியாக(டிராப்) பயன்படுத்தி, வில்லனின் சட்டலைட் போன் எண்ணை அபேஸ் பண்ணுவதும், இது தெரிந்ததும் வில்லனான சித்தப்பாவின் உத்தரவால் தந்தையின் கையாலேயே அவர் கொல்லப்படுவதும் கதையை மேலும் சூடாக்குகிறது.


துரைசிங்கத்தின் காதலியாக முதல் பாகத்தில் வரும் அனுஷ்கா, காவ்யா கதாபாத்திரத்தில் பளபளக்கிறார். தேவி ஸ்ரீபிரசாத்தின் இசையில் "சிங்கம் டான்ஸ்" பாடலிலும் கண்ணுக்குள்ளே பாடலிலும் அனுஷ்காவின் சேட்டைகளை பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

வில்லன்களில் மூன்றுபேருமே கலக்கியிருக்கிறார்கள். சண்டைக் காட்சிகள் பார்ப்பவர்களையே பதற வைக்கிறது. வலது கையால் தலைக்கு மேல் ஓஓஓங்கி, எதிராளியின் புரடியில் அடிக்கும் இந்த சிங்கம் ஸ்டைல், சூர்யாவின் சினிமா வாழ்க்கையில் ஒரு முத்திரையாகவே பதிந்துவிடும். சூர்யாவின் நடிப்பும், வசன உச்சரிப்பும் கச்சிதம் என்றால், நடனக்காட்சிகளிலும் படத்துக்கு படம் முன்னேறிக்கொண்டிருக்கிறார். இந்தப் படத்தில் அனுஷ்காவுக்கு சவால் விடுகிற மாதிரி அசத்தலாக ஆடியிருக்கிறார். சிங்கம் 2 இரண்டின் வீச்சு சூர்யாவை சிங்கம் 3க்கும் களமிறங்க வைத்தால் ஆச்சரியப்பட ஏதுமில்லை!

ஏட்டு ஏழுமலையாக விவேக் ஓ.கே என்றாலும், சந்தானம் உள்ளே புகுந்ததில் விவேக் காணாமல் போய்விடுகிறார்.

ஒரு சர்வதேச குற்றவாளியை மூன்றே நாட்களில் பிடித்து திரும்பும் அதிசயம் ஒரு இந்திய காவல் அதிகாரிக்கு நிகழ வாய்ப்பே இல்லை! என்றாலும் அதை நினைத்து கொடுப்புக்குள் சிரிப்பதற்கு இடம்தராமல், காட்சிகளை பரபரப்பாக நகரவைத்து கச்சிதமாக முடித்து விடுகிறார் ஹரி!

மொத்தத்தில் சிங்கம் - 2
கச்சிதமான பாய்ச்சல்.




சோ.திலகராஜ்
கண்டாவளை



# மாற்றங்கள்

மாரிகாலத் தூறல் மழையுடன் வரும் குளிர் காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. அதிகாலை 03.00 மணிக்கு கண் விழித்துக்கொண்ட அரவிந் மீண்டும் தூங்க முடியாதவனாக கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தான் கடந்துபோன காலச் சம்பவங்கள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. அரவிந் சிறுவயதாய் இருக்கும்போது அவனை எதிர்காலத்தில் வைத்தியராக்க வேண்டுமென்ற கனவோடு இவன் பாடசாலையை ஆரம்பித்தபோதே இவனின் அப்பா இதற்கேற்றவாறு ஏற்பாடுகளைச் செய்தமையும், அடிக்கடி இவனின் தந்தை டொக்ரர் என்று கூப்பிடுவதையும், தாயின் தலையைத் தொட்டு அம்மா தலை இடிக்கின்றதா? மருந்து தரவா? என அரவிந் கேட்பதையும் எண்ணிப் பார்த்தான்.

ஒரே நாளில் தாயும் தந்தையும் ஒன்றாக இறந்துபோக மொட்டை அடித்து வெள்ளை வேட்டி கட்டி கொள்ளி வைத்ததையும் இறுதிநேரத்தில் பாட்டியின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு அழுததையும் நினைக்கும்போது அரவிந்திற்கு கண்ணீர் கூட வந்துவிட்டது. இவ்வாறு மனதை வாட்டிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த அரவிந்திற்கு பொழுது விடிந்ததுகூடத் தெரியவில்லை. அவசரமாக எழுந்த அரவிந் வேலைக்குச் செல்ல ஆயத்தமானான். அரவிந்தின் தந்தை இறப்பிற்குப்பின் இருந்த சொத்தில் ஒரு பகுதியை விற்றுப் பாட்டி அரவிந்தின் படிப்பைக் கவனித்துவந்தாள்.

ஏனைய தேவைகளுக்காக பாட்டி தன்னால் இயன்றவரை மாடு, கோழி வளர்ப்புச் செய்து ஜீவனோபாயத்தை பாட்டி கவனித்து வந்தாலும் கல்வியில் ஓர் இலக்கினை நோக்கி படிப்பிப்பதற்கான அறிவை அவள் கொண்டிருக்கவில்லை. தூர இடங்களில் அரவிந்தை விட்டுப் படிப்பிப்பதற்கும் அவளின் மனம் இடம் கொடுக்கவில்லை. தற்போது பாட்டியின் ஒரேயொரு பெறுமதிமிக்க சொத்து அரவிந் மட்டுமே. இவனையும் வெளியில்விட்டால் ஏதும் ஆகிவிடும் என்ற பயம். இதனால் பக்கத்திலிருந்த பாடசாலையில் அரவிந்தின் கல்வி தொடரப்பட்டது. படிப்பிலும், விளையாட்டிலும் திறமைசாலியாக அரவிந் இருந்தாலும் சாதி எனும் அரக்கனின் கோரப்பிடியில் தாழ்த்தப்பட்டவர்கள், உயர்த்தப்பட்டவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள இவ் மனித சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எனக்கருதப்படும் சமூகத்தை அரவிந் சார்ந்திருந்தமையால் பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சாதிக்கக் கூடிய இவனின் திறமைகள் வெளிக் கொண்டுவர எவரும் முன்வரவில்லை. இதனைக் தட்டிக் கேட்பதற்கு அரவிந்திற்கு தந்தைக்குப் பிறகு வேறு யாரும் இருக்கவில்லை. வகுப்பில் பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவனாகவும், ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, பணிவு, விட்டுக்கொடுப்பு, போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டும் திறமை இவ்வாறான உயர்ந்த பண்புகள் இவனுக்கு இருந்தும் யாராலும் இவன் பாராட்டப்படவில்லை.

பொதுவாகச் சொல்லப்போனால் வகுப்பறையில் சிலரின் பொறாமை காரணமாக அரவிந் தனிமைப்படுத்தப்பட்டான். வீட்டுக்கு வந்து பாட்டியிடம் பாட்டி இந்த விளையாட்டுப் போட்டிகள், படிப்பு போன்றவற்றில் திறமைசாலிகள் பங்குபற்றி மாவட்டம், மாகாணம், தேசியம் என எல்லாம் கலந்துகொள்வார்களாம்.

"நானும் நல்லா விளையாடுவேன், ஆங்கிலப் பேச்சு, சித்திரம் எல்லாம் செய்வன். என்னையும் பாடசாலை அதிபர், ஆசிரியரிடம் கேட்டு அனுப்பி விடுங்கோவன்..." எனக் கேட்பான்.

ஏன் நீ வாத்தியாரிடம் கேட்டுப் பாரன் என்று பாட்டி ஒரே சொல்லில் பதில் அளித்துவிடுவார். உண்மையிலேயே தனது பேரனுக்கு எழுத வாசிக்க மட்டும் தெரிந்தால் காணும் என்ற அளவிற்கே பாட்டி சிந்தித்திருந்தார். அதற்கப்பால் எதைப் பற்றியும் சிந்திக்கும் அறிவாற்றல் பாட்டிக்கு இல்லை.

(தொடரும்)



# சீரியல் தந்த சீரியஸ்

அப்ரார் A.அஸீஸ்
யாழ்ப்பாணம்.

அன்று....

கிழக்கே உதித்த சூரியன் மேற்கே மறைந்து அந்திவான மந்தகாரத்தால் இருளை கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தது. அலுவலகங்களில் வேலைமுடிந்தோர் தம் இல்லம் நோக்கி பறந்து கொண்டிருந்தனர்.

மாதவனும் அதற்கு விதிவிலக்கானவன் இல்லையே.... அவசர அவசரமாக தன் மோட்டார் பைக்கை "உதைத்து ஸ்டார்ட் செய்துகொண்டிருந்தான்.

அவனின் அவசரம் புரியுமா? அந்த பைக்கும் ஏனோ அது பிகு பண்ணி பிடிவாதம் பிடித்துக் கொண்டு நின்றது! சீ... என்னவன் சுதர்சனை பார்த்து அவன் மழலைச் சிரிப்பை ரசிப்போம் என்றால் இந்த பைக் தடை பண்ணுதே என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட மாதவன் ஓங்கிவிட்ட உதையை தாங்காத அந்த பைக்கும் "சர்" என்று பறக்கத் தொடங்கியது.

திருமண பந்தம் நுழைந்து இரண்டே வருடங்களான அவன் வாழ்க்கைக்கு ஒளித்தீபமாக பிறந்திருப்பவன்தான் சுதர்ஷன். பிறந்து எட்டே மாதங்கள்தான் ஆகி இருந்தாலும் பெற்றோர் உள்ளத்தை கொள்ளை கொண்டவனாக "கொழு கொழு" என்று மெழுகு போன்ற பாவையாக பெருத்திருக்கும் அந்தப் பிஞ்சுக் குழந்தை யார் மனதையும் சட்டென்று சுண்டி இழுப்பதில் ஆச்சரியமில்லைத்தான்!.

"ஓ... மறந்துவிட்டேன் வரும்போது பால்மா தீர்ந்துவிட்டது எடுத்துவாங்க" என்று மனைவி மாலினி கூறியது ஞாபகத்துக்கு வரவே,

"வாங்கிவருகிறேன்... நீங்க பிள்ளைய கவனமாக பார்த்துக் கொள்ளுங்க... சதா டீ.வி.யில மூழ்கி இருக்காம..." என்று கூறிவிட்டு வந்ததும் சேர்ந்தே ஞாபகத்துக்கு வந்தது.

இடையே தென்பட்ட கடையிலே பிள்ளைக்குரிய மாப்பெட்டியையும் வேறு தின்பண்டங்களையும் வாங்கிக்கொண்டு மீண்டும் புறப்பட்டான். வீதியில் வாகன நெரிசல்கள் அதிகம் என்பதால் அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் பற்றி அடிக்கடி பத்திரிகையிலும் வானொலியிலும் அறிந்துகொள்வதால், கவனமாக வாகனத்தை மெதுவாக செலுத்திச் செல்ல வேண்டியதாயிற்று. வீண் பிரச்சினைகளை வாங்காத வாறு....

மணியும் ஏழைத்தாண்டிக் கொண்டிருந்தது. வீடும் அண்மித்துவிட்டது. அப்பாடா என்று பெருமூச்சுவிட்ட வண்ணம் போட்டிக்கோவில் பைக்கை நிறுத்திவிட்டு வீட்டினுள் நுழைந்தான்.

ஆள் அரவம் கேட்கவே ரி.வியை ரசித்து ரசித்து பார்த்துக் கொண்டிருந்த மாலினி... வந்திட்டீங்களாப்பா.. வாங்க.... வாங்க... நல்லவேளை நீங்க வந்துட்டீங்க... நான் நல்ல பயந்து போயிட்டன் என்றாள். பயந்தீங்களா.. மாலினி... ஏன்? யாரும் கள்ளன்கள் வந்துவிட்டாங்களோ... என்று... பதட்டத்துடன் கேட்டான்.

போங்கப்பா... கள்ளன் வந்தால் பயப்படுவேனோ? வந்த வழி ஓடிப்போக ஏதாவது செய்திடமாட்டேனா?

ம்... அதுவும் சரிதான். தொண்டை கிழியக் கூப்பாடு போட்டு ஊரைக் கூட்டி உசாராகிவிடுவீங்க. அப்படித் தானே! உங்களுக்கு எதைச் சொன்னாலும் கேலியும் கிண்டலும் தான் பண்ணுவீங்க!

அப்போ! விஷயத்துக்கு வாங்களேன். "இல்லப்பா... இந்த துளசி சீரியல்ல துளசி மோகினியில ஆவிவாறத பார்த்துத்தான் பயந்தேனுங்க..."

ஓ... அப்போ... சீரியலத்தான் பார்த்து பார்த்து ஜமாய்க்கிறீங்களோ... என்று "படீர்" என்று விட்டான் கன்னத்தில்... வலி தாங்காமல் துடித்த மாலினி ஏப்பா "எனக்கு அடிக்கிறீங்க என்றாள் அழுதுகொண்டே."

நான் அங்கிருந்து சுதர்ஷனைப் பார்ப்போம் என்று ஓடி வாரேன். அவ பிள்ளைட எண்ணமே இல்லாமல் சீரியல் மோகத்தில சீரழிந்து கொண்டு, எனக்கு கதை சொல்லுறாவாம் என்று. ஏதேதோ எல்லாம் ஏசிக்கொண்டே எங்கே சுதர்ஷன் என்றான்!

அவன பால் பருக்கி நித்திரையாக்கி விட்டுத்தான் நான் இருக்கின்றேன்.

அப்போ இன்னும் எழும்பலயா? இல்ல அவன் நல்லா தூங்கிறான். அவனுக்கு டிஸ்ட்ரொப் இல்லாம சத்தத்தக்கூட குறைச்சு வச்சுட்டுத் தாங்க இருந்தன். எத்தனை மணிக்கு பிள்ளை தூங்கிச்சு நான்கு மணிக்குத்தான் வளர்த்தினேன்.

அப்போ திரும்ப ஒரு தடவையும் போய்ப் பார்க்கலையா.. இல்லைங்க, ஏன் நித்திரைய குழப்புவான் என்று இருக்கின்றேன்.

நித்திரையை குழப்பலாமா, சீரியலை பார்க்காமலோ என்று தெரியல... போங்க போய் பிள்ளையை தூக்கிவாங்க... இரவும் தூங்கவேணும் அல்லவா? சரிங்க.... என்றவள்...

அவசர அவசரமாக அறைக்குள் சென்றாள்.... மறுகணம்.... ஐயோ!.... என்னங்க.... ஐயோ... இங்கே ஓடிவாங்களேன்... என்று குளறி அழுது கொண்டிருந்தாள்.

இதைக்கேட்ட மாதவன் விழாக்குறையாக என்ன?.. என்ன?... ஏன் அழுறீங்க.... என்று ஓடினான். நான் என்ன சொல்ல... இங்க பாருங்களேன் பிள்ளை வாயால் நுரை வழிந்து உடம் பெல்லாம் சில்லிட்டு இருக்குது என்னவென்று ஒன்றும் புரியலையே பாருங்களேன் என்று நெஞ்சிலடித்து அடித்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள் மாதவனுக்கு பிள்ளையை கண்டதும் விஷயம் விளங்கி விட்டது. தனது பாசத்துக்குரிய பிஞ்சுக் குழந்தை பஞ்சைப் போல பறந்து விட்டது என்று! யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன். உறவுகள் ஒன்றுகூடி அக்கம் பக்கம் அலறி அடித்து துடித்துத்துவண்டு கத்துகின்றார்கள்

குடித்த பால் புரையேறி மூச்சுத் திணறலால் முடிந்த கதை என்று டாக்டர் செய்தியும் வந்து சேர்ந்தாச்சு. நடந்தவை கனவா, நனவா என்று நம்பமுடியாது மாதவன் மரத்துப்போன இதயத்துடன் காரியங்களுக்காய் களம் இறங்குகின்றான்.

"குற்றம் செய்த மனம் குறுகுறுக்கும்" என்று கூறுவதைப் போல மாலினியின் மனச்சாட்சியே அவளை அணு அணுவாக சித்திரவதை செய்து கொண்டிருந்தது!.

சீ... கடவுளே! நான் இந்த சீரியல்ல மூழ்கி என்ட வாழ்க்கையையே சீரழிச்சுப் போட்டேனே? எல்லாம் முடிந்தபின் அவர் எனக்கு் என்ன தண்டனை தரப் போறாரோ! இந்த "சீரியல் விவகாரம் இத்தனை பூதாகரமாக சீரியஸாகும்" என்று நான் எதிர் பார்க்கலயே... ஐயோ! என்று எண்ணியெண்ணி ஏங்கியே தலையிலடித்து அழுது கொண்டிருந்தாள்.

தன் முன்னே அந்த சுதர்ஷன் என்ற பிஞ்சு ஏளனத்தோடு என்னைவிட சீரியல் உங்களுக்கு முக்கியமாகிவிட்டதாம்மா! என்று கேட்பதுபோல் தெரிவதால் வேதனையின் விளிம்பில் கனன்று கொண்டிருந்தாள் இவள் மனநிலையில் நிச்சயம் மாறுதல் ஏற்படலாம் அதற்கு அவள் தேறுதலுக்கு துணைபோவது யாரோ???

[யாவும் கற்பனை]




**கடந்த மாதம் 11 ஆம் திகதி மாலை வழமை போல பிரியதிலக மது அருந்திவிட்டு என்னைக் கொலை செய்யப்போவதாக உரத்த குரலில் சத்தமிட்டுக் கொண்டிருந்தார். கையில் கத்தியுடன் இருந்தார். பிரியதிலக உயி-ரோடு இருந்தால் அது எங்கள் உயிருக்கு நிச்சயமாக அச்சுறுத்தல்தான். ஆகையால் இதனைத் தொடரவிடக் கூடாது என நானும் நிமாலும் சேர்ந்து முடிவெடுத்தோம். காட்டுவழி பாதையினூடாகவே பிரியதிலக்க நடந்துவந்தார். எனவே அவரை மறைந்திருந்து கொலை செய்வதாகத் தீர்மானித்தோம்.**

**அதனடிப்படையில்தான் ஒரு பெரிய கத்தியை எடுத்துக்கொண்டேன். நிமால் கோடரியொன்றை எடுத்துக் கொண்டார். இருவரும் செடிகளுக்குள் மறைந்திருந்தோம். பிரியதிலக்க அதிக மதுபோதையில் தட்டுத் தடுமாறி வந்தார். அருகில் வந்ததும் உடனே இருவரும் முன்னால் பாய்ந்து சரமாரியாக பிரியதிலக்கவை வெட்டினோம்"**

# பயத்திலேயே படுகொலை செய்தோம்!

என்று எதையும் மறைக்காமல் சந்தேக நபர் பிரியதிலக்க படுகொலை தொடர்பான சகலதையும் கூறிமுடித்துள்ளார்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமையன்று காலை 9.00 மணியளவில் மீகாஹதென்ன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரசிக்க வத்தேகமவிற்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அந்த அழைப்பினை பெண்ணொருவரே ஏற்படுத்தியிருந்தார். மோல்காவ, கபுவெல்ல பிரதேசத்தில் ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவே அந்தப் பெண் தகவல் வழங்கியிருந்தார்.

வேறு ஒரு விசாரணை-யினை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி ரசிக்க வத்தேகம அந்த விசாரணையினை இடைநிறுத்திவிட்டு உடனடியாக குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி காமினி ரணவீரவை அழைத்து "காமினி கபுவெல்ல பிரதேசத்தில் ஒரு கொலைச் சம்பவமாம் நாம் இப்போதே புறப்படுவோம்" என்றார். அதனடிப்படையில் தயாரான பொலிஸ் குழு துரிதமாக சம்பவ இடத்துக்குச் சென்றது.

சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி மிகவும் கொடூரமான முறையில் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட ஒரு ஆணின் சடலத்தினை பொலிஸார் கண்டனர். அந்த இடத்தைச் சுற்றி கிராமவாசிகள் நிறைந்திருந்ததுடன் ஒருவருக்கொருவர் குசுகுசுவென பேசிக்கொண்டனர்.

இந்தப் படுகொலை சம்பவத்தின் போது கபுவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரியதிலக்க என்பவரே உயிரிழந்துள்ளார். மனைவியுடன் ஏற்பட்ட தகராறினால் அவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார். இவ்வாறான நிலையிலேயே யாரோ அவரை படுகொலை செய்துள்ளனர்.

பிரியதிலக்கவை யார் கொலை செய்தார்கள்?, எதற்காக கொலை செய்தார்கள்? போன்ற கேள்விகளோடு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். சடலத்தில் காணப்பட்ட வெட்டுக் காயங்களைக் கூர்ந்து கவனித்த பொலிஸார் அதனை இரண்டு வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தி கொலை செய்திருக்கலாம் என்று ஊகித்துக்கொண்டனர். அதாவது இருவேறு வகையான வெட்டுக் காயங்கள் அந்த சடலத்தில் காணப்பட்டமையே அவ்வாறு ஊகிக்கக் காரணமாய் அமைந்திருந்தது.

குறித்த சடலமானது மரண விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்தில் கூடியிருந்த பொதுமக்களிடம் சம்பவம் பற்றியும் அவ்விடத்திற்கு வந்து சென்றவர்கள் பற்றியும் விசாரித்துள்ளனர். அதன்போது சம்பவ இடத்துக்கு வந்தவர்கள், வராதவர்கள் பற்றிய சகல தகவல்களையும் பொதுமக்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறு பொதுமக்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பயனாக முக்கிய தகவலொன்று பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. அதாவது .. கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு கிராமவாசிகள் எல்லோரும்வந்து சடலத்தை பார்த்துச் சென்றபோதிலும் சம்பவ இடத்துக்கு சற்று தொலைவில் இருக்கும் இருவர் அவ்விடத்துக்கு வரவேயில்லை என்ற தகவலே அது.

நிமால் மற்றும் வசந்த ஆகிய இருவருமே குறித்த கொலைச் சம்பவத்தைப் பார்க்க வந்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் பிரியதிலக்கவுடன் இருந்த மனக்கசப்பால் கோபத்துடன் இருந்ததாகவும், அதனால் வராமல் இருந்திருக்கலாம் எனவும் பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர். எந்தளவுக்கு கோபதாபங்கள் இருந்தாலும் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் வராமலிருப்பதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணிய பொலிஸாருக்கு அவ்விருவர் மீதும் சற்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான தகவல்கள் மற்றும் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகம் போன்றவற்றின் அடிப்படையில் விசாரணைகள் நகர்த்திச் செல்லப்பட்டது. இதன்போது கடந்த 11 ஆம் திகதி மாலை, பிரியதிலக்க மதுபோதையில் நிமால் மற்றும் வசந்த ஆகிய இருவரையும் பேசிவிட்டுச் சென்றுள்ளார் என்ற தகவலும் பொலிஸாரின் செவிக்கு எட்டியுள்ளது.



இவ்வாறான பல தகவல்களின் காரணமாக நிமால் மற்றும் வசந்த ஆகிய இருவர் மீதான சந்தேகம் பொலிஸாருக்கு அதிகரித்துள்ளது. இருந்த போதும் இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பான உரிய சாட்சியோ, தடயங்களோ பொலிஸாருக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆகையினால் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை தீவிரப்படுத்தினர் பொலிஸார்.

சம்பவ இடத்துக்கு அழைத்துவரப்பட்ட மோப்ப நாய் அவ்விடத்தில் கிடந்த கைக்குட்டையொன்றினை நன்கு மோப்பம் பிடித்துள்ளது. அதன் பின்னர் அவ்விடத்திலிருந்து சற்றுத்தொலைவில் இருந்த வசந்தவின் மாமியின் வீட்டை நோக்கிச் சென்றதுடன் அவ்வீட்டிற்கு வெளியில் வேறு எங்கும் செல்லவில்லை. எனவே ஏற்கனவே சந்தேகித்த அந்த இருவரே இதனைச் செய்திருக்க வேண்டும் என்று கூறிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்கள் இருவரையும் கைது செய்து விசாரிக்கவேண்டும் என்றார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரசிக்க வத்தேகமவின் பணிப்புரைக்கு அமைய அடுத்த நாள் காலை கதுவெல்ல பிரதேசத்திற்கு விரைந்தனர். அங்கு வீதியோரமாக பேசிக் கொண்டிருந்த நிமாலையும், வசந்தவையும் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் வாகனத்தில் ஏற்றினர்.

அதன்போது இரு சந்தேக நபர்களும் "சேர் ஏன் எங்களை கைது செய்தீர்கள். உங்களுக்கு தெரியும்தானே.. நாங்கள் எந்தக் குற்றச்செயல்களுடனும் தொடர்புபடாதவர்கள் என்று" பதற்றத்துடன் வசந்த பொலிஸாரிடம் கூறியுள்ளார். அதற்கு "ஆம். எங்களுக்கு அது தெரியும். பொலிஸுக்குப் போய் பார்ப்போம். 'குற்றம் செய்தீர்களா இல்லையா? என்று" இப்படி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியதுடன் அவ்விருவரும் மீகஹதென்ன பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட சாந்த மற்றும் நிமால் ஆகிய இருவரையும் விசாரிப்பதற்கு முன்னர் பிரியதிலக்க கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த ஒருவர் அது பற்றிய சகல விடயங்களையும் எம்மிடம் கூறியுள்ளார். ஆகையால் நீங்கள் பொய்சொல்ல முடியாது என்று கூறிவிட்டு சந்தேக நபர்கள் இருவரையும் தனித்தனியாக வைத்து விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக தனித்தனியாக விசாரித்தபோதும் அவர்கள் இருவரும் தாம் பிரியதிலக்கவை கொலை செய்யவில்லையெனவும் யாரோ இதனை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதில்கொடுத்த குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகார, "உண்மையை எப்படி வரவழைப்பது என்பது எமக்குத் தெரியும். நீங்களாக சொல்லிவிடுவீர்கள் என்றுதான் கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்துப் பார்த்தோம்." எனக்கூறியுள்ளார்.

உடனே சந்தேக நபர்களில் ஒருவன் "அப்படி என்றால் எங்களை அடிக்கப் போகின்றீர்களா?" என்று கேட்க, "இல்லை உங்களை கொஞ்சப் போகிறோம்" எனக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பதில் அளித்துள்ளார். எனவே மீண்டும் பதிலளித்த சாந்த தயவுசெய்து எங்களை அடிக்காதீர்கள் என்று நடுக்கத்துடன் கூறியுள்ளார். உடனே பொறுப்பதிகாரி கோபத்தில் அடிப்பதற்கு கையை உயர்த்தியபோது உடனே கைகள் இரண்டையும் உயர்த்திய சாந்த "ஐயோ அடிக்காதீங்க சேர் நாங்கள்தான் பிரியதில-கவைச் கொலை செய்தோம்" என உண்மையை ஒப்புக் கொண்டுள்ளனர்.

பிரியதிலக்கவை தாம் கொலை செய்ததை ஒப்புக் கொண்டதும் சந்தேக நபர்களில் ஒருவரான சாந்த குறித்த சம்பவத்தை முதற் புள்ளியிலிருந்து விபரிக்கத் தொடங்கினார். பிரியதிலகவுக்கு எங்களைப் பிடிக்காது. எனவே எங்கள் மீது அவர் கடும் கோபத்தில் இருந்தார். தினந்தோறும் மது அருந்திவிட்டுவரும் அவர், எங்களை தகாத வார்த்தைகளால் திட்டி எங்களை கொலை செய்யப் போவதாக அச்சுறுத்துவார். எப்போதும் கையில் பெரிய கத்தியுடன் இருக்கும் அவர் உங்கள் முடிவு எனது கையில் தான் என அடிக்கடி கூறுவார்.

இவ்வாறு எங்களை அடிக்கடி அச்சுறுத்துவது எமக்குப் பெரும் தலையிடியாக இருந்தது. அத்தோடு எங்களை கொன்றுவிடுவாரோ என்ற பயமும் இருந்தது. எனவேதான் எங்களைக் கொலை செய்வதற்கு முன் அவரை தீர்த்துக்கட்ட வேண்டுமென்ற முடிவுக்கு வந்தோம். நாங்கள் அதனடிப்படையிலேயே அவரைக் கொலை செய்தோம்.

இவ்வாறு சந்தேக நபர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களை எல்லாம் பதிவு செய்துகொண்ட பொலிஸார், அதன்பின்னர் அவர்களின் உதவியுடன் கொலைச் சம்பவத்துக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 'கத்தி மற்றும் கோடரி போன்றவற்றை மீட்டுள்ளனர். அதனடிப்படையில் குறித்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அச்சந்தேக நபர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே எந்தவொரு குற்றச்செயலையும் புரிந்துவிட்டு எவராலும் நிரந்தரமாக தப்பியிருக்க முடியாது என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் உறுதிசெய்துள்ளது. ஆகையால் இவ்வாறான குற்றச்செயல்களில் இருந்து விலகியிருப்பதே சிறந்தது. *



# சங்க இலக்கியம்

**சங்க** இலக்கியம் எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல். தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம் பிடித்துக்காட்டுவதாய் உள்ளன. பண்டைத் தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் அறியத்தருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப்பெற்றன. சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்பெரும் பிரிவுகளாகத் தொகுத்து அடக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியம் என்பது எந்தெந்த நூல்கள்?**

கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய காலத்தையே தமிழ் இலக்கியத்தில் சங்க காலம் என்று குறிப்பிடுகிறார்கள். தொன்மையான தமிழ் மொழிகளின் மிக மூத்த நூல், அகத்தியர் எழுதிய அகத்தியம் என்று கூறப்படுகிறது. அது இப்போது கிடைக்கவில்லை. அகத்தியம் ஓர் இலக்கண நூல். இலக்கியம் தோன்றிய பிறகே அதனை ஒழுங்குபடுத்த இலக்கணம் தோன்றி இருக்க முடியும் என்பதால், அகத்தியத்திற்கு முன்னரே தமிழில் சிறப்பான இலக்கிய நூல்கள் இருந்திருக்கவேண்டும். இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற மூத்த தமிழ் நூல் தொல்காப்பியமே. இதுவும் இலக்கண நூல்தான்.

கி.மு.300 - கி.பி 100. இந்தக் கால கட்டத்தில் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் வளர்க்க முற்பட்டனர். தமிழ் அறிஞர்கள். அப்போது தோன்றியவையே சங்கம் இலக்கியம் என்று வழங்கப்படுகிறது. அதோடு இக்காலக் கட்டம் கடைச்சங்க காலம் எனப்படுகிறது.

**சங்க இலக்கியத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.**

1. பத்துப்பாட்டு.
2. எட்டுத்தொகை.
3. பதினெண் கீழ்க்கணக்கு.

இவற்றில் பத்துப்பாட்டு ஒரு தனிப்பட்ட நூல் அல்ல. பல நூல்களின் தொகுப்பு. மொத்தம் எட்டுப் புலவர்கள் எழுதிய பாடல்கள் பத்தைத் தொகுத்து பத்துப்பாட்டு என்று கூறினர். இவற்றில் ஒவ்வொரு பாட்டும், தனி நூல் என்று சொல்லத்தக்க அளவில் முழுமையானவை. இந்தப் பாக்கள் ஒவ்வொன்றும் 100 அடிகளுக்கு மேலானவை. 500 அடிகள் வரைகூட சில போகும், சில பத்துப்பாடல்கள் முருகு, பொருநாறு, பான் இரண்டு, முல்லை, பெருகு, வளமதுரைக் காஞ்சி, மருவினிய கோலநெடுநல் வாடை, கோல் குறிஞ்சி, பட்டினப் பாலை, கடாத் தொடும் பத்து

அதாவது,

1. திருமுருகாற்றுப்படை,
2. பெரும்பாணாற்றுப் படை,
3. சிறுபாணாற்றுப் படை,
4. பொருநாற்றுப்படை,
5. முல்லைப்பாட்டு,
6. மதுரைக் காஞ்சி,
7. நெடுநல்வாடை,
8. குறிஞ்சிப்பாட்டு,
9. பட்டினப்பாலை,
10. மலைபடுகடாம்

ஆகிய 10 நூல்கள் 10 பாட்டு. எட்டுத்தொகை

எட்டுத்தொகை நூல்களும், பல புலவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுப்பே. ஆனால், இவற்றுள் எந்தப் பாடலையும் ஒரு தனி நூலாகக் குறிப்பிடமுடியாது. 100 அடிகளுக்குக் கீழ்ப்பட்ட இந்த எட்டுத்தொகை நூல்களை ஒரு பழம்பாடல் இப்படி விவரிக்கிறது.

1. நற்றிணை
2. நல்ல குறுந்தொகை
3. ஐங்குறு நூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

ஆகியவை இந்த 8 நூல்கள் ஆகும்.

**பதினெண் கீழ்க்கணக்கு**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் என்போர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து பாண்டியர்களை வென்று மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இவர்கள் காலத்தில்தான் முச்சங்கத்தின் கடைசியான கடைச்சங்கம் அழிந்தது. தமிழர்களின் கலை, கலாசாரம், நாகரிகம் நசிய தலைப்பட்டது. தமிழகத்தின் இருண்ட காலம் என்பார்கள்.

இதனை 'சங்கம் மருவிய காலம்' என்பார்கள். அப்போது தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு என்று அழைக்கப்படுகிறது.

ஐந்தோ அல்லது அதற்கு கீழோ' அடிகளைக் கொண்டு அமையப் பெற்றவை கீழ்க் கணக்கு நூல். அதற்கு மேற்பட்ட அடிக ளைக் கொண்டவை மேற்கணக்கு நூல்கள். (பத்துப்பாடல், எட்டுத்தொகை)

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையோ அல்லது மூன்றில் ஒன்றையோ விளக்கி வெண்பாவில் எழுதப்படுவது கீழ்க் கணக்கு நூல்கள்.

நாலடி, நான்மணி, நாநாற்பது ஐந்திணை, முப்பால், கடுகம், கோவை. பழமொழி - மாமூலம் இன்னிலை சொல் காஞ்சியோடு ஏலாதி என்பதும் கை-நிலையுமாம் கீழ்க்கணக்கு. (பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளைச் சொல்வது உண்டு. அதுபற்றிய குறிப்பைக் காணவில்லை. ஒருவேளை முப்பால் எனச் சொல்லப்பட்டிருப்பதால் இருக்கலாம்?)

நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி முதுமொழிக் காஞ்சி, முப்பால், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம் ஆகிய 11 அற ஒழுக்க நூல்களும், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய 7 அகத்துறை (காதல்) நூல்களும் சேர்த்து 18 நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாக வருகின்றன. இவையே சங்க கால நூல்கள்.

இவை மட்டும்தான் சங்க கால நூல்கள் என்பதல்ல. இவை மட்டுமே தொகுக்கப் பட்டுள்ளன. பல விடுபட்டுப் போய் இருக்கலாம். காலமும் கரையானும் கடற்கோளும் பிறவும் அழித்தது போக எஞ்சியவைதான் இந்த சங்க இலக்கியங்கள். ஏட்டுச் சுவடிகளாகப் பலவீட்டுப் பரணிகளில் கிடந்த இந்த சங்க இலக்கியங்களை தேடி கண்டுபிடித்து அச்சேற்றியவர்கள் அறிஞர் உ.வே.சா, பின்னத்தூர் அ.நாராயணசாமி, சி.வை. தாமோதரம் போன்றோர்கள் ஆவார். தமிழ் கூறு நல்லுகமும் தமிழ் இலக்கிய வரலாறும் அவர்களுக்கு எந்நாளும் நன்றிக்கடன்பட்டிருக்கிறது.




**சிந்தியா! அண்மையில் உம்மைச் சிரிக்க வைத்த அரசியல் செய்தி என்ன? சிந்திக்கச் செய்த செய்தி என்ன?**

மா.சாரங்கன். வட்டுக்கேட்டை.

பிரபாகரனைப்போல் ஆயர் ராயப்பு செயற்படுகின்றார் என்று வெளியான செய்தி சிரிக்கச் செய்தது.

தன்னிச்சையாக அரசைவிட்டு வெளியேற மாட்டோம். முடிந்தால் அவர்கள் எங்களை வெளியேற்றட்டும் என்று மு.கா தொடர்பாக வெளியான செய்தி என்னை சிந்திக்கச் செய்தது.

**சிந்தியாவின் பார்வையில் புத்தகயா குண்டுவெடிப்பு?**

எம்.பானு. எட்டியாந்தோட்டை.

பயங்கரவாதம் மீண்டும் மீண்டும் தன்கோரமான முகத்தை காட்டிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான தாக்குதல்களை உலக மக்கள் அனை-வரும் கடுமையாகக் கண்டிக்கவேண்டும். அது கண்டனத்துக்குரிய சம்பவம்.

**சிந்தியா! "மணிவண்ணனை பாரதிராஜாவின் கருத்துக்கள் கொலை செய்தது" என்பதை ஏற்றுக் கொள்வீரா?**

சி.தவமணி. குளியாப்பிட்டிய.

இயக்குநர் பாரதிராஜா அநாகரிகமாக தனது நண்பர்களை விழித்துப் பேசுகின்ற போது பேசுவது வழமைதான். கேட்டுக் கொண்டிருக்கும் நமக்கே கொஞ்சம் தர்மசங்கடமாகத்தான் இருக்கும். அவ்வாறான பேச்சு இயக்குநர் மணிவண்ணனுக்கு மனவேதனையை கொடுத்திருக்கலாம். அதற்காக பாரதிராஜா மீது குற்றம் சுமத்தக் கூடாது. ஆனால் இனிமேலாவது பாரதிராஜா நாகரிகமாக பேசக் கற்றுக்கொண்டால் நல்லது.

**முன்னாள் இராணுவத் தளபதியின் அண்மைய யாழ்ப்பாண விஜயம் பற்றி சிந்தியா என்ன நினைக்கிறீர்?**

த.ரிஷபன், அராலி.

முன்னர் சீருடையோடு வலம்வந்தவர். இப்போது சாதாரண மனிதராக வந்து சென்றது அவருக்கு வித்தியாசமாக இருந்திருக்கும். என்ன இருந்தாலும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் கணிசமான தமிழ் மக்கள் பொன்சேகாவுக்கு வாக்களித்திருந்தனர். அதை அவர் மறக்காமல் இருந்தால் சரிதான்.

**சிந்தியா கலப்பு திருமணம் செய்த இளவரசனின் மரணம் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது பற்றி..?**

மா.குமணன், வத்தளை.

மனித வேறுபாட்டையும், சாதிய வேறுபாட்டையும் தகர்க்கும் போராட்டத்தில் இளவரசனும் தனது உயிரை பறி கொடுத்திருக்கின்றார். பல இளவரசன்களையும், இளவரசிகளையும் பலி எடுத்தபடி சாதி மதவேறுபாட்டு மிருகம் உயிர் பிழைத்து விடுகின்றது.

**சிந்தியா! தென்பகுதியில் காணி இல்லாதவர்களை வடபகுதியில் குடியேற்றவேண்டும் என அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளாரே?**

தா.மெரீனா. மன்னார்.

வடபகுதியில் காணிகளை இழந்து தமிழ் மக்கள் அநாதரவாக திரிந்தபோது அவர்களுக்கு தென்பகுதியில் காணி வழங்கி குடியேற்றவேண்டுமென எவரும் குரல் கொடுக்கவில்லை. தமிழ் மக்கள் தென்பகுதியில் வாழ்கின்றார்கள் என்றால் அவர்களை யாரும் குடியேற்றவும் இல்லை. இனாமாக வழங்கவும் இல்லை. எல்லாமும் உழைப்பின் மூலமாக தமிழ் மக்கள் ஏற்படுத்திக் கொண்டது. இனவாதிகள் இது போல் பல கோரிக்கைகளோடு தெருவுக்கு இறங்கியிருக்கின்றார்கள். நாம் உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.




**சிந்தியா! மேற்கிந்திய தீவுகளில் இலங்கை அணி சாதிக்குமா?**

ஆர்.இஷான். ஜின்னாநகர்.

நம்பிக்கையோடு காத்திருப்போம்.

**சிந்தியா! 13 ஆம் திருத்த விடயத்தில் இந்தியா கொஞ்சம் இறுக்கமாக நிற்பது போன்று தெரிகிறதே?**

திருமதி எம்.சாந்தா. வவுனியா.

இதிலும் இந்தியா உசாரடையா விட்டால் பிறகு இந்தியாவுக்கு இலங்கையில் என்ன வேலை இருக்கமுடியும். மேனன் மற்றும் குர்திஸ் ஆகியோர் வருகை தந்து எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்பதை வழமை போல் பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிந்தியா! திடீரென அழகிய தேவதை ஒன்று உம் முன்னால் தோன்றி, உம்மை காதலிப்பதாக சொன்னால், உமது பதில் என்னவாக இருக்கும்?**

கா.அஜந்தன், கண்டி.

நமது நாட்டில் புதிய சட்டங்கள் இயற்றப்படுவதற்கு இப்போதைக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே தோழியாக வைத்துக் கொள்வேன்.

ஸ்ரீ ராம ஜெயம்

**மலையாள மாந்திரிக சக்தி**



**ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ. கொஞ்சக் காலம் இந்தப் பகுதியில கவுண்டமணியும் செந்திலும் வரேலேன்று நீங்கள் எல்லாம் பீல் பண்ணினது எனக்கு விளங்கினதுங்கே. அத்தோட ஒரு சேஞ்சாய் இருக்கட்டுமெண்டு இந்த முறை அவங்களேயே கூட்டி வந்திருக்கிறன் பாருங்கோ.**

**செந்தில்:** (பாடிக்கொண்டு வருகிறார்) ஆயிரத்தில் நான் ஒருவன் - நீங்கள் ஆணையிட்டால் அரசியல் தலைவன்...

**கவுண்டமணி:** வாடா மவனே... யாரெல்லாம் எலக்ஷனில போட்டி போட்டு, எவனெல்லாம் அரசியலுக்கு வாரது எண்டெல்லாம் விவஸ்தையே இல்லாமல் போச்சடா. உனக்கு யாரடா இந்த வேண்டாத வேலையை தந்தது.

**செந்தில்:**, அண்ணே! உங்களுக்கு விசயமே தெரியாதா அண்ணை. நம்ம நாடு ஜனநாயக நாடு அண்ணே. யார் வேணுமெண்டாலும் எலக்ஷனில நிக்கலாம் எவன் வேணுமெண்டாலும் அரசியல்ல தலைவனாகலாம் அண்ணே...

**கவுண்டமணி:** ஜனநாயகம் எண்டால் எந்த நாய் வேணுமெண்டாலும் நாற்காலியில உட்காந்திடலாமாடா?

**செந்தில்:** அண்ணே! உங்களுக்கு இந்தக் காலத்து அரசியல் விளங்குதில்லை அண்ணே!

**கவுண்டமணி:** என்னடா நாயே சொல்லுறாய்? எனக்கு விளங்காததெல்லாம் உனக்கு விளங்கிடுமா?

**செந்தில்:** ஏன் அண்ணை கோவிக்கிறியள். ஊரப்பிடிச்சு உலையில போட்டதுகள், உலகத்தையே சுருட்டி கல்லாவில போட்டவங்கள், ஏ.சி ரூமுகளுக்க இருந்துகொண்டு தாங்கள்தான் பெரிய பிஸ்தாக்கள் என்று அறிக்கை குடுத்துப்போட்டு துண்டக்காணம் - துணியக்காணம் என்று தலைதெறிக்க ஓடினவங்கள் எல்லாம் எலக்ஷன் கேக்க ஜனநாயகத்தில இடம் இருக்கண்ணே....

**கவுண்டமணி:** அட கொக்காமக்கா...!! உவங்களெல்லாம் எலக்ஷன் போட்டி போடேலும் எண்டா நீயும் போடலாம் தாண்டா.

**செந்தில்:** தாங்ஸ் அண்ணே! முடியுமெண்டா ஒழு நூறு ரூபா கடன் தரமுடியுமா அண்ணே...

**கவுண்டமணி:** அட பனங்காய் தலையா...! நீ நாணயமானவன் தாண்டா. ஆனால் உனக்கு இப்ப கடன் தந்தா திருப்பி வாங்கமுடியுமெண்டு டவுட்டாய் இருக்கு. ஏனென்டா.....

**செந்தில்:** அண்ணே! இது தேர்தலுக்கு இல்லையண்ணே. படம் எடுக்கப் போறண்ணே.

**கவுண்டமணி:** சட்டித்தலையா... நீயெல்லாம் படம் எடுக்கப்போறியா? ஐயோ.. ஐயோ உவனோட ளொல்லுத் தாங்கமுடியேலப்பா.. ஏதோ என்ர தலையெழுத்து உதையெல்லாம் தாங்க வேண்டியிருக்கு. அது சரிடா. ஹீரோ யாரைப் பிடிக்கப்போகிறாய்..

**செந்தில்:** அண்ணே கையில வெண்ணெய் இருக்க... நெய்க்கு அலையலாமா அண்ணே? எவனெவனோ, எதையெதையோ எல்லாம் செய்யிறப்போ நாங்களெல்லாம் எதுக்கண்ணே யோசிக்கணும். நீங்கள் தான் என்னோட ஹீரோ.

**கவுண்டமணி:** (வெட்கப்படுகின்றார்) நான் ஹீரோவா... நடிக்கணுமெண்டு சனங்க விரும்புகிறாங்க. நீயும் விரும்பிறாய். ஆனால் நான் விரும்பின மாதிரி இல்லை. ஏன் அண்ணே...!

**செந்தில்:** மத்திய குழுவைக் கூட்டி ஆராயணுமா அண்ணே....

**கவுண்டமணி:** மவனே அரசியல்வாதி மாதிரி பேசவும் தொடங்கீட்டியா? பொதுக்குழுவைக் கூட்டப்போறனெட்டா பெரிய பொய்யை அவிழ்த்துவிட ஆயத்தம் பண்ணுராங்க, அவகாசம் தேடுறாங்க எண்டுதாண்டா அர்த்தம்.

**செந்தில்:** எது எப்படியோ போட்டும் அண்ணே. கொஞ்சக் காலத்துக்கு நம்ம வண்டி ஜோராய் ஓடப்போகுது அண்ணேய்....!

**யாவும் கலப்படமற்ற பொய்**

# காட்டு ராஜாவை உருவாக்கியவர்



**டர்ஜான்..!**

பெயரைப் படித்த உடனேயே உங்களை அறியாமல் நிமிர்ந்து உட்காருறீர்கள். உடலிலே ஒரு பரபரப்பு. உள்ளத்திலே ஓர் உவகை. காட்டு மனிதன் டர்ஜானின் தீரச் செயல்களைப் பற்றிய படக்கதையைப் படிப்பதற்குத் தயாராகிறீர்கள் இல்லையா?

டர்ஜான் என்ற பெயரை உலகின் எந்த மூலையில் எந்த மொழி பேசும் யாரிடம் கேட்டாலும் அவர்களுக்குத் தெரியும். மனிதக் குரங்குகளால் கானகத்தில் வளர்க்கப்பட்ட வீர தீரம்மிக்க ஒரு மனிதன் அவன் என்று.

நம் நாட்டுப் பத்திரிகைகளிலும் டர்ஜான் படக் கதைகள் வருகின்றன. உங்கள் பெற்றோரிடம் கேட்டால் அவர்கள் இளமையில் பார்த்த எத்தனையோ டர்ஜான் ஆங்கிலத் திரைப்படங்களைப் பற்றி அதிசயமாகக் கூறுவார்கள்.

இப்படி உலகம் முழுவதிலும் புகழ்பெற்ற ஒரு பாத்திரத்தை உருவாக்கியது யார்?, அவர் இதை எப்படி உருவாக்கிப் புகழ் பெறச்செய்தார்?

அமெரிக்க இராணுவக் (ஏழாவது) குதிரைப் படையில் ஓர் இளைஞன். அரிஸோனோ மாநிலத்தின் தகிக்கும் சூரிய ஒளியைத் தடுக்கக் கண்களை இடுக்கியபடியே முகத்தில் வியர்வையோடு, படிந்துள்ள புழுதியை துடைத்துக் கொள்ளுகிறான். அவனுக்கு வயது பதினாறுதான். பரந்து கிடக்கும் பாலை நிலத்தின் தனிமையில் அந்தச் சின்னஞ்சிறு இராணுவம் காவல் வேலையில் ஈடுபட்டிருந்தது. அந்தப் படையில்தான் அந்த இளைஞன் இருந்தான். மேற்குப் பகுதியில் பணிபுரியும் மிகக் கடினமான குதிரைப் படையில் அத்தனை சின்னஞ்சிறு வாலிபர்களைச் சேர்க்கமாட்டார்கள்.

[தொடரும்]

# இந்தவாரம் உங்கள் பலன்

(11.07.2013 தொடக்கம் 17.07.2013 வரை)

## மேடம்

செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்வர இருப்பதால் எந்த விசயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் மிகக் கவனமுடன் இருக்கவும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள். தந்தை - மகன் உறவு களில் இதுவரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். வீடு வாகனங்களைப் புதுப்பித்தலுக்காகப் புதிய கடன்வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள். அண்டை அயலார்களுடன் கவனமாகப் பேசிப்பழகவும். பிள்ளைகளுக்கு மருத்துவச்செலவுகள் உண்டாகும்.

## இடபம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய வீடு மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் வந்துசேரும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். சுபகாரிய சம்பந்தமாக வடதிசையில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்று குறையும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும் காலமாகும்.

## மிதுனம்

பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். பூமி, நிலம் சம்பந்தமான தொழில்கள், தங்கம் வெள்ளி போன்ற நகைவியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல விளைச்சல் காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வுடன் கூடிய பணிமாற்றங்கள் ஏற்படலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய பெண் மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நற்பலன் அடைவீர்கள். குடும்பத்தில் இது வரையில் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவர் செலவுகள் குறையும். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் ஒன்றுசேரும் காலமாகும்.

## கடகம்

நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும். உற்றார் உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வங்கி உதவிகளின்மூலம் புதிய வாகனங்களை வாங்குவதற்கு முயற்சிகளை செய் வீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். தாய் உடல்நிலை பாதிப்பால் மருத்துவர் செலவுகள் உண்டாகலாம். கால்களில் கவனம் தேவை. புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## சிங்கம்

புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள் பணப்புழக்கத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் நடைபெறவேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகலாம். வீடு வாகனங்களை பழுதுபார்ப்பதன் மூலமாக புதிய பொருட்செலவுகள் வந்து சேரலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள் பணப்புழக்கத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் மாறி நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் நடைபெறவேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகலாம். வீடு வாகனங்களை பழுதுபார்ப்பதன் மூலமாக புதிய பொருட்செலவுகள் வந்துசேரலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. மற்றவர்களை நம்பிப் புதிய கடன்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் துலங்கும். உற்றார் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன்- மனைவி உறவுகள் சமாராகக் காணப்படும். தோல் சம்பந்தமான பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர்கள், பழைய இரும்பு கழிவுப்பொருள் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். மற்றவர்களிடம் இருந்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கக் கூடிய காலமாகும். சமுதாய வழர்ச்சிக்கான விசயங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

## விருச்சிகம்

வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவிகள் கிடைக்கும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிக எச்சரிக்கையாய் பேசிப் பழகவும். வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவினர்களுடன் தொடர்புகள் ஏற்படும். உடல் நிலையில் முதுகுமூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் பெறக்கூடிய காலமாகும். சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். கணவன் -மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

திருமணம் போன்ற சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் சில தடைகள் வந்து சேரும். நண்பர்களால் வீண் பொருட் செலவுகளும் மனநிம்மதி இன்மையும் ஏற்படலாம். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகு நாட்களாக வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். பங்காளியுடன் சேர்ந்த புதிய கூட்டுத் தொழில் செய்வதற்கான மயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண்வம்புகளை விலைக்கு வாங்காதீர்கள். வெளிநாடு செல்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுவீகள்.

## மகரம்


விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள், ஹோட்டல் தொழிற் செய்வோர்கள், நறுமண பொருட்களின் வியாபாரிகள், அநாதை ஆச்சிரமங்களை நடத்துவோர்கள், கேஸ் மற்றும் வெல்டிங் சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகளில் காரணமற்ற சச்சரவுகள் வந்துநீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சில தடைகள் வந்துபோக வாய்ப்பு உள்ளதால் மிக எச்சரிக்கையுடன் பயின்றுவருதல் நல்லது. உற்றார் உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள். குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள்.

## கும்பம்

காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள்வர இருப்பதால் கவனமுடன் சென்று வரவும். நீண்ட காலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய் வதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றிபெறுவீர்கள். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச் செலவுகள் வந்துசேரும். நீண்ட காலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திரும்பக் கை வந்துசேரும். தொலைதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும்.

## மீனம்

புதிய வீடு நிலங்களை வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து நீண்ட காலமாக எதிர்பார்த்து இருந்த பணம்கைக்கு வந்து சேரும். நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்குவதன் மூலம் மனநிம்மதிக் குறைவு ஏற்படலாம். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். உடல் நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக இதுவரையில் இருந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். அரசியல்வாதிகள் துன்பங்களைக் கொடுக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.




## 500 ஆண்டுகளுக்கு முன்...

இறந்து 500 வருடங்களுக்கு மேலாகியும், இன்னும் உடலில் உள்ள இரத்தம்கூட உறையாத மூன்று மம்மிக்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆர்ஜெண்டினாவின் லுல்லைலிகோ மலையில் கடந்த 1999ஆம் ஆண்டு சுமார் 6739 மீற்றர் ஆழத்தில் மூன்று மம்மிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மதத்தின் பெயரால், பனியில் புதைக்கப்பட்ட இச்சிறுமிக்கு லா டென்சிலா, அதாவது திருமணமாகாத இளம் பெண் என ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர். மேலும் இன்கா இனத்தை சேர்ந்த இப்பெண் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டு, கடவுளுடன் வாழ ஆசைப்பட்டு, மதத்தின் பெயரால் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த டென்சிலாவின் உடல்களில் பாகங்கள் எதுவும் கெட்டுப் போகவில்லையாம், இரத்தம்கூட உறையாத அளவிற்குப் பதமாக பாதுகாப்பாக இருந்திருக்கின்றன. தோல்கூட புத்துணர்ச்சியுடன் இருப்பதுதான் ஆச்சரியம்.

இந்நிலையில் அவளது முடியை வைத்து, அவள் என்ன மாதிரியான உணவுப் பழக்கவழக்கங்களைக் கொண்டவள் என ஆராய்ந்ததில், இன்கா மக்கள் தங்கள் குழந்தைகளை நன்கு கொழுக்க வைத்து கடவுளுக்கு அர்ப்பணித்தது தெரிய வந்துள்ளதாம். கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே, விலங்குக் கொழுப்புகள் மற்றும் தானியங்களைக் கொடுத்து அக்குழந்தைகளை நன்கு செழிப்பாக்குவார்களாம் அவர்கள் குடும்பத்தார். டென்சிலாவின் வயிற்றுப்பகுதியை ஆய்வு செய்தபோது, அவள் இறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக ஏதோ காய்கறி போன்ற உணவை உட்கொண்டிருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



## கல்விக்கு வயதில்லை

கல்விக்கு வயது ஒரு தடை அல்ல என்பதை நிருபிக்கும் வகையில் நடந்துள்ளார் 78 வயதான ஒரு நபர். மரியானா என்கின்ற 78 வயது நிரம்பிய பாட்டி தற்போது பாடசாலையில் சேர்ந்து படிக்க ஆரம்பித்திருக்கிறார்.

இப்பெண் விவசாய ஏழைக் குடும்பத்தினை சேர்ந்தவர். தனது சிறு வயதிலேயே தனது கணவனை இழந்தவர். இவர் தனது சிறுபராயத்தில் கல்வியினை தொடரமுடியாமல் இருந்துள்ளது. காரணம் சிறுவயதில் இவர் உடலால் பெரிதும் நோய்வாய்ப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. எனினும் தற்போது கல்வியை தொடரவேண்டும் என கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்துகொண்ட பெண் சிறுவர்களோடு சேர்ந்து பாடசாலை செல்ல ஆரம்பித்துள்ளாராம்.




## முயற்சியின் பலன்...

ஒவ்வொரு வருக்குள்ளும் ஏதோ திறமை புதைந்து கிடக்கின்றது. அந்தத் திறமைகளை மெருகேற்றி வெளிப்படுத்த முனைபவர்கள் சிலரே ஆகும். அவ்வாறு முனைபவர்களுக்கு அந்தத் திறமையை நிருபித்துக் கொள்வதற்கு அவர்கள் வாழ்கின்ற சூழல்கள் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றன. அவ்வாறான சூழலில் கிடைத்தவற்றைக் கொண்டு தனக்குள் மறைந்திருந்த சிற்பக் கலைத்திறமையை வெளியுலகிற்கு நிருபித்துக்காட்டிய ஒரு கலை-ஞனின் படைப்புக்களையே இங்குள்ள படங்களில் காண்கிறீர்கள்.

வியட்நாமைச் சேந்த கலை-ஞரான Huynh Phuong Do என்பவர் மூங்கில் தாவரத்தின் வேர்களை செதுக்கி அழகிய சிற்பங்களை வடிவமைத்துள்ளார். இதற்காக 7 வருடங்களாக தன்னை அர்ப்பணித்திருக்கும் Huynh Phuong Do 15 வயதிலிருந்தே சிற்ப ங்களை படைக்கும் திற மையை தனக்குள் வளர்த்துக் கொண்டா ராம்.



## கொலைகாரன்...

பிரிட்டிஷ் நிபுணர்கள் அண்மையில் தமது பல ஆண்டுகள் ஆய்வு நடவடிக்கையின்போது அரிய நீல-நிறத் தவளை இனம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்கள். பிரேசில் மற்றும் தென்னாபிரிக்க காடுகளில் இந்த இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியின் பின்னர் அதிர்ச்சி தகவலையும் வெளியிட்டுள்ளார்கள் நிபுணர் குழுவினர்.

பார்ப்பதற்கு நீல நிறத்தில் காட்சியளிக்கும் இத்தவளையை யாரும் முத்தம் இடவேண்டாம் எனவும் எச்சரித்துள்ளார்கள். காரணம் இத்தவளையில் இருக்கின்ற விஷம் 10 பேரை கொல்லும் அளவு சக்தி வாய்ந்ததாம். இத்தனை விஷம் கொண்ட இத்தவளை வெறும் 2.5 செ.மீ அளவுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## நண்பன்

கங்காருக் குட்டி ஒன்று நபரொருவருடன் நெருங்கி பழகும் செயற்பாடு பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவுஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா பூங்காவிலேயே இவ் விசித்திர சம்பவம் இடம்பெற்றுள்ளது. இப்பூங்காவில் உள்ள மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் கங்காரு குட்டி ஒன்று பிறந்து 7 மாதங்களிலேயே தனது தாயை இழந்துள்ளது. இந்நிலையில் அநாதரவான நிலையில் தவித்த இக்கங்காருக் குட்டி, வளர்ந்து ஏனைய கங்காருக்களுடன் சகஜமாக பழகும்வரை தனது பராமரிப்பில் வளர்ப்பதென அம் மிருகக் காட்சிச் சாலையின் பராமரிப்பாளரான லூகி சிமோண்டர் என்பவர் தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய அக்கங்காருக் குட்டிக்கு பெபல்ஸ் என பெயரிட்டு அவர் அதனை அன்புடன் பராமரித்து வந்துள்ளார். இதற்கமைய ஓரளவு வளர்ந்தள்ள பெபல்ஸ் தற்போது சிமோண்டருடன் இணைந்து தொலைக்காட்சி பார்க்கும் அளவிற்கு சிமோண்டுடன் நட்பாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. சிலநேரங்களில் விலங்குகளின் பரமாரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பெபல்ஸ் வளரும்வரை இவ்வாறு பராமரிக்க வேண்டியுள்ளது என சிமோண்டோ ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.